# நீங்கள் கடவுளைத் தேடுதல்



ரிச்சர்ட் ஏ. பெனட்

நீங்கள் கடவுளைத் தேடுதல்
பெனட்

# கடவுளைத்
# தேடுதல்

www.ccim-media.com

www.ccim-media.com

# கடவுளைத் தேடுதல்

ரிச்சர்ட் A.பெனட்

தமிழாக்கம்
ஜமிலா பால்

OM-Authentic
Books
SECUNDERABAD

***Kadavulai Thedudhal***
(Tamil)

Your Quest for God
by Richard A.Bennett

Copyright © 1985 by Cross Currents Intl. Ministries
www.CCIM-media.com

Revised second Tamil edition 2000
Two reprints 2002 - 2006
Reprint 2006

ISBN: 81-7362-235-3

All rights reserved.
No part of this publication may be reproduced in any form or transmitted by any means – electronic, or mechanical, including photocopying, recording, or any information storage and retrieval system – without permission in writing from the publisher.

Published by
**OM Authentic Books**
Logos Bhavan, Jeedimetla Village,
Secunderabad 500 067, Andhra Pradesh.
www.authenticindia.in

Printed and bound in India by
Authentic Media,
Secunderabad 500 067

என் மனைவி டாரதியின் ஊக்கம்,
அன்பு, தியாகம், ஜெபம் இவைகளினால் அன்றி
இந்த நூல் ஒரு நாளும் சாத்தியமாயிருக்காது.

பவுல் பெபேயாளைக் குறித்துச் சொன்னது
போல, நானும் என் மனைவியைக்
குறித்துக் கூறுகிறேன் ...

*அவள் அநேகருக்கும் எனக்கும் கூட
ஆதரவாய் இருந்தவள்.*

# பொருளடக்கம்

பாராட்டுரை 9

முகவுரை 11

**அத்தியாயம் 1** 17
*உண்மையிலேயே கடவுள் ஒருவர் இருக்கிறாரா?*

**அத்தியாயம் 2** 29
*உனது ஆவிக்குரிய துணைவன் நம்பகமானது தானா?*

**அத்தியாயம் 3** 53
*கடவுள் எப்படி இருப்பார்?*

**அத்தியாயம் 4** 69
*மக்களை உண்மையில் பிரிப்பது எது?*

**அத்தியாயம் 5** 89
*உண்மையான பிரச்சினை என்ன?*

**அத்தியாயம் 6** 103
*மக்கள் இவ்வளவு தவறான பாதையில் செல்வது ஏன்?*

**அத்தியாயம் 7** 123
*கடவுள் உண்மையிலேயே என்னை நேசிக்கிறாரா?*

**அத்தியாயம் 8** 159

*வாழ்வை நான் எங்கே கண்டு கொள்ளலாம்?*

**அத்தியாயம் 9** 181

*கடவுளின் குடும்பத்தில் நான் அங்கமாவது எப்படி?*

**அத்தியாயம் 10** 197

*அடுத்து என்ன?*

**எனது விசுவாச அர்ப்பணம்** 212

# பாராட்டுரை

கடவுளைத் தேடுதல் என்ற இந்த நூலை இரண்டு காரணங்களுக்காக மனதாரப் பரிந்துரைக்கிறேன். முதல் காரணம், நூலின் ஆசிரியர் எனக்கு நன்றாகத் தெரிந்தவர்! அவர் என் விசுவாசப் பிள்ளைகளில் ஒருவர், என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப் படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை. (3 யோவான் 4).

இரண்டாவது காரணம் அதைவிட நல்ல நோக்கம் கொண்டது. டாக்டர். ரிச்சர்ட் பெனட் தேவனுடன் மனிதனது உறவின் அத்தியாவசியங்களைத் தெளிவாக, சுருக்கமாக, நம்பத்தக்க வகையில் எடுத்துரைக்கும் பணியை மிக மிகச் சிறப்பாகச் செய்துள்ளார்.

தேவன் மனிதனுடைய இருதயத்தில் நித்தியத்தை வைத்து வைத்துள்ளார் என்று வேதம் தெரிவிக்கிறது..... (பிரசங்கி 3:11). எனவே, மனிதர்கள் நித்தியத்திற்காக உருவாக்கப்பட்டவர்கள் ஆதலால், காலத்தின் காரியங்கள் அவர்களை முழுமையாக, நிரந்தரமாக ஒருபோதும் திருப்தி செய்ய முடியாது என்பது தெளிவாகிறது. தேவன் ஒருவர் மட்டுமே திருப்தி செய்யக் கூடிய முடிவற்ற வெறுமை ஒன்று இருக்கின்றது. பரி.அகஸ்டின் அதை மிக அழகாகக் கூறுகின்றார். "தேவனே, நீர் எங்களை

உமக்காகவே உருவாக்கினீர், எங்கள் ஆத்துமாக்கள் உம்மில் இளைப்பாறும் வரை நிம்மதியற்று அலைகின்றன." நித்திய தேவனுடன் ஜீவனுள்ள ஒரு தனிப்பட்ட உறவில் அந்த இளைப்பாறுதலை நாம் கண்டு கொள்ளும் வரை அவரை நாடித் தேட இந்தப் புத்தகம் நமக்கு உதவுகின்றது.

அடுத்து வரும் பக்கங்களைத் திரள் திரளான மக்கள் படிக்கவும், இதில் மலர்ந்துள்ள செய்திக்கு தேவனுடைய மகிமைக்காகவும் தங்கள் நித்திய நன்மைக்காகவும் செவி மடுக்கவும் வேண்டும் என்பதே எனது ஊக்கமான ஜெபமாகும்.

**டாக்டர். ஸ்டீபன் F ஒல்ஃபோர்ட்**
**மெம்பிஸ், டெனசி**

# முகவுரை

எங்களுடைய பரந்த பயணங்களில், என் மனைவி டாரதியும் நானும் வாழ்க்கையின் பெரிய, சிறிய பாதைகளில் அநேக நண்பர்களைச் சந்தித்துள்ளோம். அவர்கள் எல்லாரும் வேறுபட்ட கலாச்சாரங்களி-லிருந்தும், பொருளாதாரப் பின்னணிகளிலிருந்தும், கல்வி மட்டங்களிலிருந்தும் வந்தவர்கள்.

இந்தத் தனிநபர்களை நாங்கள் சந்தித்தது ஏதோ தற்செயலானதல்ல என்று நாங்கள் நம்புகிறோம். இந்த நூல் ஏதோ தற்செயலாக உங்கள் கரத்தில் இருக்கிறது என்றும் நாங்கள் நம்பவில்லை.

கடந்து போன வருடங்களில், எங்களுடைய பல நண்பர்களோடு நடைபெற்ற உரையாடல்களில் எல்லாம் மிக முக்கியமானவை நாம் கடவுளைத் தேடுதல் என்பதை மையமாகக் கொண்டே அமைந்திருந்தன. நாங்கள் அப்படிப் பகிர்ந்து கொண்ட கருத்துக்களில் சில இந்நூலில் அடங்கியுள்ளன.

கடவுளைத் தேடுதல் என்ற இந்நூலின் முதலாம் பதிப்பு தனிப்பட்ட விதத்தில் நன்றி கூறும் விதமாக எழுதப்பட்டது. அதைத் தொடர்ந்து இரண்டு திருத்திய பதிப்புகள் வெளிவந்தன. டாரதியும் நானும் எங்களது

திருமண வாழ்வின் 25 ஆண்டுகள் நிறைவு நாளை நெருங்கிக் கொண்டிருந்தபொழுது, தேவன் எங்களுக்குச் செய்த நன்மைகளுக்காக அவருக்கு எவ்வாறு நன்றி கூறுவது சிறப்பாக அமையும் என்பதைப் பற்றிச் சிந்திக்கலானோம். நம்பிக்கையையும் சமாதானத்தையும் படிப்போருக்குக் கொண்டு வரும் ஒரு செய்தியை எழுதி, அச்சிட்டு, 25,000 பேருக்குக் கொடுப்பதை விட வேறென்ன சிறந்த வழி இருக்க முடியும் என்று நினைத்தோம். அதாவது, எங்கள் திருமண வாழ்வின் ஒவ்வோர் ஆண்டுக்கும் ஆயிரம் பேருக்கு.

இந்தச் சிறு அன்பின் பிரயாசத்தைத் தேவன் ஆசீர்வதித்ததினால், இந்நூல் ஏறக்குறைய உலகம் முழுவதும் சென்றது. அந்த 25,000 பிரதிகளும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களின் கைகளில் நேரடியாகக் கொடுக்கப் பட்டன. *கடவுளைத் தேடுதல்* என்ற இந்த நூலை வாசித்ததன் விளைவாக வாழ்க்கையில் ஒரு புதிய நோக்கத்தைக் கண்டு கொண்டோரிடம் இருந்து வந்த கடிதங்கள் எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி விட்டன.

இந்தப் புத்தகத்தைப் பிற மொழிகளிலும் மொழி பெயர்க்க வேண்டும் என்று எண்ணற்ற வேண்டுகோள்கள் விடுக்கப் பட்டன. எனவே, உலகின் பல்வேறு கண்டங்களிலும் உள்ள இன்னும் அதிகமான மக்களுக்கு அவர்கள் 'கடவுளைத் தேடுதலில்' உதவும் பொருட்டு இந்நூலின் திருத்திய முதல் பதிப்பை வெளியிடத் தீர்மானித்தோம். அதன் விளைவாக முப்பது மொழிகளில் இருபது இலட்சத்திற்கும் மேலான பிரதிகள்

அச்சிடப்பட்டு, பரவலாக விநியோகிக்கவும் பட்டன. இப்பொழுது, இந்தத் திருத்திய இரண்டாம் பதிப்பு, சற்றுக் கூடுதலான விபரங்களைக் கொண்டது. வாசகருக்கு இன்னும் அதிக உதவிகரமாக அமைய வேண்டுமென்று ஜெபிக்கிறோம்.

முதல் இரண்டு அத்தியாயங்களும் ஒரு வேளை வாசகர்கள் அனைவருக்கும் சம அளவில் பொருத்தமாக இருக்காது. முதல் அத்தியாயம் கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா என்றே சந்தேகத்தைக் கிளப்பும் மக்களுக்காக எழுதப்பட்டது. எதற்கெடுத்தாலும் கேள்வி கேட்கக் கற்றுக் கொண்டுள்ளோருக்கு அத்தியாயம் இரண்டு குறிப்பாக ஆர்வமூட்டுவதாய் இருக்கும். என்றாலும் இது எல்லா வாசகர்களுக்கும் அதிமுக்கியமானது. ஏனெனில் இது உங்களது சொந்த நம்பிக்கைகளையும் மனப்பான்மைகளையும் மதிப்பீடு செய்ய உங்களுக்கு உதவும்.

எனினும், இந்த ஆரம்ப அத்தியாயங்கள், நூலின் பொதுவான முழுக் கருத்துக்கும் அத்தியாவசியமானவை. காரணம், மீதியிருக்கும் விபரங்களின் நம்பகத் தன்மையை நிலைநாட்ட இவை பெரிதும் உதவுகின்றன. மூன்றிலிருந்து பத்து வரையுள்ள அத்தியாயங்கள் கடவுளை நீ தேடுவதில் உதவக் கூடிய அடிப்படை சத்தியங்களைக் கொண்டுள்ளன. எனவே, இந்தப் புதிய பதிப்பை, தேவன் தமது பார்வையில் நலமாய்த் தோன்றுகிறபடி ஆசீர்வதிக்கும் படியாக அவரது கரங்களில் அகமகிழ்வுடன் வைக்கின்றோம்.

தேவனுடன் தங்களது தனிப்பட்ட அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்ட ஏராளமான மக்களின் அன்பு, ஜெபங்கள், மேலான கருத்துக்களுக்காக டாரதியும் நானும் தேவனுக்கு நன்றி தெரிவிக்க விழைகின்றோம். அவர்கள் அனைவரின் பெயர்களையும் பட்டியலிடுவது என்பது இயலாத காரியம். எனவே இந்த நண்பர்களுக்கும் சொல்லிக் கொள்கின்றோம் : "உங்களுக்கு நன்றி".

# கடவுளைத்
# தேடுதல்

புவி அமைப்பியல் (Geology) என்பது புவியின்
சுயசரிதையாகும், ஆனால் எல்லா
சுயசரிதைகளையும் போலவே இதுவும்
தன் ஆரம்பத்தைப் பற்றி
ஒன்றும் கூறுவதில்லை.

*சர் சார்ல்ஸ் லைல்*

## அத்தியாயம் 1

# உண்மையிலேயே கடவுள் ஒருவர் இருக்கிறாரா?

கடவுளுடைய அன்பை மட்டுமல்ல, கடவுளே இருக்கிறாரா என்று நீ சந்தேகிக்கும் அளவிற்குக் காரிருள் சூழ்ந்த வேளைகள் உன் வாழ்க்கையில் வந்திருக்கலாம்.

வேதாகமத்தில் கடவுள் இருக்கிறார் என்பது விளக்கப் படவும் இல்லை ; நிரூபிக்கப் படவும் இல்லை. கடவுள் இருப்பதாக வைத்துக் கொள்ளப் படுகிறது. வேத புத்தகத்ன் முதல் முதல் வாக்கியம் இதுதான் : *"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதியாகமம் 1:1).* இது எளிமை வாய்ந்த, அதே சமயத்தில் பொருள் செறிந்த ஒரு பயங்கரமான கூற்றாகும். அது, கடவுள் இருக்கிறார் என்றும், அவரே அண்டசராசரத்தையும் படைத்தவர் என்றும் உறுதியாகத் தெரிவிக்கிறது.

அநேக வருடங்களுக்கு முன், ஐரோப்பாவிலேயே மிகவும் புகழ் வாய்ந்த மனநல மருந்துவமனைகள் ஒன்றில், என் மனைவி ஓர் அனுபவம் மிக்க மூத்த மருத்துவத் தாதியாக ஒரு நல்ல பதவி வகித்து வந்தாள். தாம் ஒரு நாஸ்திகர் (கடவுள் பக்தி அற்றவர்) என்று கூறிக் கொண்ட

ஒரு பெயர் பெற்ற மனநல மருத்துவர் ஒரு நாள் என் மனைவி டாரதியிடம் அவளது விசுவாசத்தைப் பற்றி வினவினார். அவள், "டாக்டர், உங்களது துறையிலே உங்களுக்கு இருக்கும் அதிகாரத்தை, செல்வாக்கை நான் அதிகமாக மதிக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் ஒரு மரியாதைக்குரிய பல்கலைக்கழகப் பேராசிரியர், மருத்துவத் துறையில் உங்கள் பெயரைக் கேட்டாலே ஒரு தனி மதிப்பு என்றாலும், இன்னொரு முறை நீங்கள் நாஸ்திகர் என்று கூறிக் கொள்வதற்கு முன், மனநலத் துறையில் ஆராய்ச்சியில் எவ்வளவு துடிப்புடன் ஈடுபடுகிறீர்களோ அதேயளவு துடிப்புடன் நீங்கள் வேத புத்தகத்தை ஏன் வாசித்துப் பார்க்கக் கூடாது?" என்று சொன்னாள்.

பிறகு, அவரது நோயாளிகளில் பலர் தேவனுடைய வல்லமை அவர்களது வாழ்வில் அற்புதமான மாற்றங்களை ஏற்படுத்தியதால் நான் பட்ட வியாதிகளிலிருந்து குணம் பெற்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப் பட்டதை அவருக்கு நினைவூட்டினாள். பயனுள்ள வாழ்க்கை நடத்தும் அளவிற்கு அற்புத மாற்றம் கண்டிருந்த இரண்டொருவரின் பெயரைக் கூட அவள் குறிப்பிட்டாள். இந்த நோயாளிகள் எல்லாரும் தேவனை ஒரு தனிப்பட்ட விதத்தில் அறிந்து கொண்டதைப் பற்றியெல்லாம் அந்தப் புகழ்பெற்ற மனநல மருத்துவருக்கு டாரதி எடுத்துக் கூறினாள். இந்த நோயாளிகள் அதற்கு முன்பு, நவீன மனநல மருத்துவ முறைகளால் சற்றேனும் முன்னேற்றம் காணவில்லை

என்பதை அந்த மருத்துவரே மிக நன்றாக அறிந்திருந்தார். ஒரு நாஸ்திகராகவோ, ஏன் ஒரு மனநல மருத்துவராகவோ கூட அவரால், இவர்களது வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களுக்குக் காரணம் காட்ட முடியவில்லை.

அந்த மருத்துவர், அப்பொழுதுதான் தான் கடவுளை நம்புவதில்லை என்று டாரதியிடம் கூறியிருந்தவர், தனக்காக ஜெபிக்கும்படி அவளிடம் கேட்டுக் கொண்டார்! மேலும் தன் வாழ்வில் முதல் முறையாக ஒரு திறந்த மனதுடன் வேதபுத்தகத்தை வாசிக்கப் போவதாகவும் வாக்களித்தார்.

அவர் ஏழு வாரங்கள் கவனமாக வேதத்தை வாசித்த பிறகு, தான் இனியும் ஒரு நாஸ்திகன் என்று கூறிக் கொள்ளப் போவதில்லை என்று டாரதியிடம் கூறினார். எனினும் அவருக்கு இன்னும் ஒரு பிரச்சினை. அதாவது கடவுளுக்குத் தன்னை ஒப்புக் கொடுப்பது என்பது தான் வாழ்கின்ற முறையையே மாற்றி விடும் என்பதை உணர்ந்தார். எனவே, "எனது பிரச்சினை இப்பொழுது அறிவுப் பூர்வமானது அல்ல. ஆனால் நான் ஓர் அர்ப்பணமுள்ள விசுவாசியாக மாறுவேன் என்றால், என் வாழ்க்கையில் அநேக மாற்றங்கள் வரும், அவற்றை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை" என்று சொன்னார்.

நாங்கள் எங்கள் மருத்துவ நண்பருக்காகப் பத்து ஆண்டுகள் ஜெபித்து வந்த பிறகு அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதிலே அவர் தான் புதிதாகக் கண்டு கொண்ட விசுவாசத்தைப் பற்றியும் கடவுளுக்குத்

தன்னை அர்ப்பணித்து விட்டது பற்றியும் எழுதியிருந்தார். நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை, எனினும் இது எங்களுக்கு அதிக வியப்புத் தரவில்லை. காரணம், **விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என்பதை நாங்கள் அறிந்திருந்தோம் (ரோமர் 10:17)**

நாம் ஒவ்வொருவரும் தம்மைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் விதமாக, கடவுள் தாம் இருக்கிறார் என்ற ஓர் ஆழமான, உள்ளான உணர்வை, அறிவை நமக்குள்ளே வைத்து வைத்திருக்கிறார்.

சில மக்கள் தாங்கள் கடவுளை நம்பப் போவதில்லை என்று தீர்மானித்திருக்கலாம், ஆனால் இந்தப் பூமி என்ற கிரகம் முழுவதிலும் கடவுளை நம்ப முடியாதவர் என்று சொல்லக் கூடிய ஒரு நபர் ஒருநாளும் இருந்ததேயில்லை.

நம்மைச் சூழ்ந்துள்ள அண்ட வெளியைப் பார்த்தாலும் கூட, கடவுள் தாம் இருக்கிறார் என்பதைக் காட்டும் ஏராளமான சான்றுகளைத் தந்துள்ளார். நமது இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞானம் எந்த அளவிற்கு அண்ட சராசரத்தின் ஆழ்ந்த இரகசியங்களைத் தோண்டி எடுத்துத் தந்திருக்கிறதோ அந்த அளவிற்கு, இவையெல்லாம் யாரும் ஒருவர் வடிவமைக்காமலே, உருவாக்காமலே தாமாக உருவாகி விட்டன என்று கூறுவது முட்டாள்தனமானதாகும். வடிவமைப்பாளர்-கள், தொழில் நுட்ப வல்லுநர்கள், கணித மேதைகள் ஆகிய அனைவரும் சேர்ந்து உருவாக்கிய திறமையே

இல்லாமல் தானாகவே ஒரு விண்வெளிக்கலம் விண்ணை நோக்கிப் பாய்ந்து, பூமியைச் சுற்றி வந்து பிறகு ஒரு குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் மீண்டும் தரை-யிறங்கக் கூடும் என்று யாருமே சொல்ல மாட்டார்கள். அதைப் போலவே, சூரிய அஸ்தமனங்களும், பருவகாலங் களும் நட்சத்திரக் கூட்டங்களும் அணுக்களும், புவி ஈர்ப்பு விசையும், அன்பு என்ற சக்தியும் சிருஷ்டிகரான ஒரு கடவுளின் திட்டமும், வடிவமைப்பும் இன்றித் தாமாகவே வந்திருக்க முடியாது.

சிருஷ்டிகரான கடவுளை நம்புவதை விட, ஒரு பலத்த மோதலின் (Big Bang) மூலம் கிரமமான பூரண படைப்பு தானாக உருவாயிற்று என்று நம்புவதற்குத் தான் உண்மையில் ஒரு மில்லியன் மடங்கு அதிக விசுவாசம் வேண்டும். காரணம் ஒரு வடிவமைப்பவர் இன்றி ஒரு வடிவம் இருப்பது சாத்தியமே அல்ல.

கடவுள் இல்லை என்று மறுக்கும் அரசாங்கமும் கூட தனது விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு அனுப்பும் ஒவ்வொரு முறையும் இந்த அண்ட சராசரமானது விதிகளுக்கு உட்பட்டு இயங்கும் கிரமமான ஒன்று என்ற தன் நம்பிக்கையையே வெளிப்படுத்துகின்றது. இந்த விதிகளுடன் ஒத்துழைக்கும் போது மட்டுமே அவர்களது விண்வெளி வீரர்கள் பத்திரமாகப் பூமிக்குத் திரும்ப முடியும். அப்படியானால், இயற்கையின் விதிகளை நம்பும் அதே மக்கள் அந்த விதிகளை ஏற்படுத்தியவர் இருக்கிறார் என்பதை நம்ப மறுக்கிறார்கள் என்பது விநதையாக இல்லையா?

இன்னும், ஓர் அணுகுண்டு வெடிக்கும் பொழுது ஏராளமான அழிவின் சக்தி வெளிப்படுகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். எனினும் சூரியனானது ஒரு விநாடியில் வெளி விடும் சக்தியானது 5000 பில்லியன் அணுகுண்டுகளுக்குச் சமம் என்று கணக்கிடப் பட்டுள்ளது. இப்படி சக்தி கொடுக்கும் பிற விண்மீன்-களுடன் ஒப்பிடுகையில் நமது சூரியன் அப்படி-யொன்றும் பிரமாண்டமானதல்ல. அண்ட வெளியில் உண்மையில் எத்தனை விண்மீன்கள் இருக்கின்றன என்பதே நமக்கு இன்னும் சரியாகத் தெரியவில்லை. பல கோடிக் கணக்கான விண்மீன்கள் மனிதனுடைய பார்வைக்கு எட்டினாலும் கூட, அவை நம் கண்களுக்குப் புலனாகாத ஒரு பெரும் நட்சத்திரக் கூட்டத்தைச் சுற்றியுள்ள வெளிப்புறச் சிதறல்களாகவும் இருக்கக் கூடும். என்றாலும், இன்று, வான்வெளி ஆராய்ச்சி-யாளர்கள் சில நட்சத்திரக் கூட்டங்களிலிருந்து வெளிப்படும் ஆற்றல் அல்லது சக்தியின் அளவு நமது சூரியனிலிருந்து வெளிப் படும் ஆற்றலை விட கோடிக் கணக்கான முறைகள் அதிகம் என்று கணக்கிடுகின்றனர்! எல்லையற்ற சக்தி படைத்த ஒரு சிருஷ்டிகர் இல்லாமல் இவ்வளவு சக்தி எங்கேயிருந்து வர முடியும்?

உண்மையாகவே, படைப்பானது நம்மை ஒரு சிருஷ்டிப்பின் கடவுளுக்கு, ஒரு நியதியின் கடவுளுக்கு, ஒரு எல்லையற்ற வல்லமையின் கடவுளுக்கு அறிமுகம் செய்து வைக்கின்றது. வேதம் சொல்கிறது:

*வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய*

கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப் படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறது (சங்கீதம் 19:1-4)

எப்படியென்றால், காணப் படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளினாலே, உலகம் உண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை (ரோமர் 1:20)

எனவே, கடவுள் இருக்கிறார் என்பதை மறுக்க யாருக்கும் எங்கேயும் எந்தச் சாக்குப் போக்கும் இல்லை.

**கடவுளது படைப்பின் விசாலத்தை, ஒழுங்கை, சக்தியைப் பற்றி எண்ணிப் பார்ப்பதானது அநேக மக்களை தாங்கள் மிகவும் சிறியவர்கள், அற்பமானவர்கள் என்பதாக உணரச் செய்வதுண்டு.**

இஸ்ரவேலின் அரசனாகிய தாவீதும் அப்படித்தான் உணர்ந்தான், அதை இப்படியாக வெளிப்படுத்தவும் செய்தான்:

*உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும் போது,*

*மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன் (சங்கீதம் 8:3,4)*

இன்று, விண்மீன்கள் பளிச்சிடும் வானவிரிவைப் பற்றிய நமது அறிவு எத்தனையோ மடங்கு பெருகிவிட்டது. பிரமாண்டமான தொலைநோக்கிகள் நமது பார்வையை ஐந்து இலட்சம் மடங்குகள் அதிகரித்துள்ளன. வான் வெளியில் உலா வரும் செயற்கைக் கோள்கள் படங்களைப் பிரதிபலித்து மீண்டும் பூமிக் கிரகத்தை நோக்கி அனுப்பி வைக்கின்றன. இதன் விளைவாக, நாமும் கூட தாவீதைப் போலவே, அதே கேள்வியைக் கேட்குமாறு சோதிக்கப் படலாம்: "இவ்வளவையும் படைத்து உருவாக்கிய கடவுளாவது, இத்தனைச் சிறியவனான என்னைப் பற்றி எண்ணுவதாவது?"

ஆனால் அதிர்ஷ்டவசமாக, இந்த தொலைநோக்கி யுகம் ஒரு நுண்ணோக்கி யுகமாகவும் இருக்கின்றது. இன்று, உருவத்தில் சிறிய உலகம் ஒன்று உண்டு, அதாவது நுண்ணோக்கி மூலமாகப் பார்த்தால் மட்டுமே புலப்படக் கூடிய உலகம் இருக்கிறது என்றெல்லாம் அறிந்திருக்கிறோம். அண்ட வெளியின் பரந்த விசாலம் எவ்வளவு வியப்புத் தருகிறதோ அதேயளவிற்கு வியப்பூட்டுகிறது இந்தச் சிறிய உலகம். நுண்ணோக்கியின் கீழ் மட்டுமே புலனாகும் இந்த உலகின் இரகசியங்களை வெளிப்படுத்த ஒளியினாலும் கூட முடிவதில்லை. அப்படி ஒரு விஞ்ஞானியின் மரபு

தொட்டு வரும் பழைய ஆராய்ச்சிக் கூட நுண்ணோக்கியின் கண்ணுக்குத் தப்புவதை எல்லாம் துல்லியமாக எடுத்துக் காட்ட இப்பொழுது இருக்கவே இருக்கிறது மின்னணு நுண்ணோக்கி. அது பொடியத்தனையாய் உள்ள எந்தச் சிறு உருவத்தின் அழகையும், வடிவமைப்பையும், நியதியையும், சக்தியையும் தெள்ளென துலக்கிக்காட்டி விடுகிறது.

எனவே, உன்னைப் போன்ற இவ்வளவு சிறியவனைப் பற்றிக் கடவுளுக்கு ஞாபகம் இருக்குமா இல்லையா என்ற சந்தேகம் உனக்கு வருமானால் ஒரு அணு இயற்பியல் விஞ்ஞானியைக் கேட்டுப் பார். அண்ட சராசரமும் பாதுகாக்கப் படுவதற்கு உண்மையில் இந்தச் சிறிய தன்மை எவ்வளவு முக்கியம் என்பதை அவர் உனக்கு விவரிப்பார். ஓர் அணுவில் உள்ள நேர் மின்னணுக்களையும் (Proton) நிலை மின்னணுவையும் (Neutron) ஓர் அங்குலத்தில் நூறு கோடியில் 1/12 அளவு மட்டுமே விலக்கிப் பார். அது ஒரு பொருளாக இருப்பதற்குப் பதிலாக ஓர் அணுவெடிப்பாக உருவெடுத்து அண்ட சராசரத்தையும் தூள் தூளாக்கிப் போட்டு விடும். ஆம், படைப்பின் கடவுளுக்குப் பெரியது எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்குச் சிறியதும் முக்கியமே.

*மனுஷனை நீர் நினைப்பதற்கு அவன் எம்மாத்திரம்* என்று நாம் கேட்கும்பொழுது, மனுஷனுடைய அளவு அவன் மதிப்பை நிர்ணயிப்பதில்லை என்பதை அறிந்து கொள்வது நமக்கு எத்தனை ஆறுதலாக இருக்கிறது. மாறாக, கடவுளைப் பொறுத்த மட்டில் நமது தனிப்பட்ட மதிப்பு என்பது மிகமிக வேறுபட்ட சில காரணிகளைப்

பொறுத்ததாகும். நாம் ஏன் தமக்கு விலைமதிப்பு மிக்கவர்கள் என்றும், நாம் அவரது பார்வையில் எவ்வளவு அருமையானவர்கள், விலையுயர்ந்தவர்கள் என்றும் கடவுள் நமக்கு வெளிப் படுத்தியிருக்கிறார்

வடிவமைப்பின், நியதியின், சக்தியின் கடவுளாக படைப்பு அவரை நமக்கு அறிமுகம் செய்தாலும் கூடத் தம்மை அளவற்ற அன்பின், இரக்கத்தின் கடவுளாக, நமது நன்மையைத் தவிர வேறு எதையும் விரும்பாத ஒரு கடவுளாக நமக்கு வெளிப்படுத்த அவர் வேறு ஒரு வழியையும் தெரிந்து கொண்டுள்ளார். ஆனால் அப்படிப் பட்ட கடவுளை நீ கண்டுபிடிக்க வேண்டுமானால் அதற்கு உனக்குத் துணை செய்யும் ஆவிக்குரிய துணைவன் முற்றிலும் நம்பகமாக இருக்க வேண்டியது அவசியம்.

## சிந்தித்துப் பார்

1. ஒரு கைப்பிடி அளவு இரும்புத் துகள்களை வானை நோக்கி வீசுவாயானால், அவை திரும்பிக் கீழே வரும்பொழுது விலையுயர்ந்த சுவிஸ் கைக்கடிகாரமாக மாறிவரும் என்று எதிர்ப்பார்ப்பாயா?

2. ஒரு சிருஷ்டிகர் - கடவுள் இன்றி இந்த அதியற்புதமான, சிக்கலான வடிவமைப்பு கொண்ட அண்ட சராசரம் தானாகவே வந்திருக்க முடியுமா?

3. தம்மை வடிவமைப்பின், நியதியின், சக்தியின் கடவுளாக வெளிப்படுத்தி யிருக்கும் சிருஷ்டிகர் - கடவுளை படைப்பானது சுட்டிக் காட்டிய போதிலும், படைப்பு மட்டுமே கடவுளுடைய அன்பையும் இரக்கத்தையும் நீ முழுமையாக அறிந்து கொள்ளச் செய்யப் போதுமானதா?

கையில் ஒரு விளக்குடன் உள்ளே நுழைகிறவன் ஓர்
இருட்டான குகையை வெகு எளிதாகக்
கடந்து விட முடியும்.

- பிளேட்டோ

இயற்கை என்பது குகையின் வாய்ப்புறத்திலிருந்து
உள்ளே வரும் மங்கிய வெளிச்சமாகும்;
அந்த விளக்கோ வேதவசனம்.

- ஏ. ஹெச். ஸ்ட்ராங்

அத்தியாயம் 2

# உனது ஆவிக்குரிய துணைவன் நம்பகமானது தானா?

சில நாட்களுக்கு முன்பு செய்தித்தாள்களில், தவறான ராடார் சமிக்ஞையின் காரணமாக ஒரு விமானம் விபத்துக்குள்ளாகி ஏராளமான உயிர்கள் பலியாயின என்ற பயங்கரமான உண்மை வெளியானது. மக்கள் ஆவிக்குரிய நாசத்துக்கு வழிநடத்தும் ஒரு "ஆவிக்குரிய ராடார் அமைப்பில்" தங்கள் நம்பிக்கையை வைப்பார்களானால் என்ன நேரிடும் என்பதை இந்த விபத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த விபத்தின் சோகம் மிக மிக அற்பமானதே எனலாம்.

இன்று உலகில் ஏராளமான குரல்கள் ஒன்றுக்கொன்று முரணான, குழப்பமூட்டும் குரல்கள் ஒலிக்கின்றன. ஒவ்வொன்றும் தன்னைக் கடவுளுக்கு நேராக வழிநடத்தும் குரல் என்றே கூறுகின்றது. எந்தக் குரலை நம்புவது என்பதை நீ எப்படி அறிவாய்? நீ கடவுளைத் தேடிச் செல்கையில் தவறான குரலைக் கேட்டு அதைப் பின்பற்றி விடுவது ஆபத்தாக முடியுமே. ஏனெனில், இது நித்தியத்திற்கு அடுத்த காரியம்.

பிரிட்டிஷ் பிரதமர் W.E. கிளாட்ஸ்டன், "ஆதியில் உலகம் உருவானது பற்றிக் கூறும் சிறப்பு அதிகார முத்திரை கொண்டது வேதாகமமே; இந்த வேதாகமத்திற்கும், தாங்களும் வேதங்கள் என்று சொல்லிக் கொண்டு அதனுடன் போட்டியிடும் வேறுபல நூல்களுக்கும் இடையேயுள்ள தூரத்தை அளவிட முடியாது" என்று எழுதினார்.

ஒருமுறை அமெரிக்க அதிபரான ஆபிரகாம் லிங்கன், "தேவன் மனிதனுக்கு அளித்த எல்லாவற்றிலும் மிகச் சிறந்த பரிசு வேதாகமமே என்பது என் கருத்து" என்று கூறினார்.

வேதாகமத்தின் ஒப்புயர்வற்ற தனித்தன்மை குறித்து வரலாற்றின் சிறந்த மனிதர்கள் சான்று பகர்ந்திருந்தாலும் கூட, உண்மையில் வேதாகமம் தனக்குத் தானே சான்று பகருகின்றது.

தாவீது ராஜா தனது ஆவிக்குரிய துணைவனின் (guide) நம்பகத்தன்மையைத் தெளிவாக அறிந்திருந்தார். அவர் சொன்னார்: *உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது (சங்கீதம் 119:105)*

வேதாகமமே தங்களைக் கடவுளிடம் நடத்தக் கூடிய நம்பகமான துணைவன் என்பதை இன்று வரை மக்கள் கண்டுபிடித்துக் கொண்டே வருகின்றனர். அதன் நம்பகத்தன்மையை அழித்து விட எத்தனையோ பேர் எவ்வளவோ முயன்ற போதிலும் கடந்த நாட்களில்

இருந்தது போலவே இன்றும் வேதாகமம் மாறாததும் உண்மையுள்ளதுமாய் இருக்கின்றது; இவ்வுலகின் சகல எழுத்துக்களிலும் அது அபூர்வமானது, நிகரற்றது என்பது மெய்யே.

வேதபுத்தகம் தன்னிகரற்றது, போலியற்ற உண்மையானது என்று காட்டக் கூடிய நிச்சயத்தின் அடையாளங்கள் மக்களுக்குத் தேவை என்பதால், அது "தேவனுடைய வார்த்தை" என்று காட்டக்கூடிய அநேக அதிகாரப் பூர்வ முத்திரைகளைக் கடவுள் அதில் பதித்து வைத்திருக்கின்றார். வேதாகமத்தின் பக்கங்களிலும் சரி, மனுக்குல வரலாற்றின் ஏடுகளிலும் சரி, உண்மையாய் கடவுளைத் தேடும் ஒருவன், *"வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது" (2 தீமோ 3:16)* என்ற உண்மைக்குச் சான்று பகரும் பல ஆதாரங்களைக் காண முடியும்.

வேதாகமம் முழுவதும் ஒரே ஆசிரியரால் எழுதப் பட்டிருக்குமானால் அதன் கருத்து மெல்ல மெல்லத் தெளிவாகவும் ஒரு கிரமமான முறையிலும் விரிந்து மலருவதைக் கண்டு நாம் ஆச்சரியப் பட வேண்டியதில்லை. ஆனால், புத்தகங்களுக்கெல்லாம் புத்தகமான இந்த வேதபுத்தகமோ ஒரே ஆக்கியோனால் எழுதப்பட்டதல்ல, பல்வேறு கலாச்சாரப் பின்னணிகளிலிருந்து வந்த பலவகைப்பட்ட நபர்களால் பல நூற்றாண்டுகள் அடங்கிய பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்டது. என்றாலும் கடவுளைப் பற்றிய சத்தியமானது, வேதம் முழுவதிலும் ஒரே சீரான, கிரமமான, தன்னிகரற்ற முறையில் கொஞ்சம்

கொஞ்சமாக விளக்கிச் சொல்லப்படுகிறது. இது எவ்வளவு சிறப்பான காரியம் - சிறப்பானது மட்டுமல்ல, அற்புதமானதும் கூட!

மேலும், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வேதாகமத்தில் பதிவு செய்யப் பட்டுள்ள வரலாற்றுச் சம்பவங்கள் சற்றும் பிழையற்றவை என்பதை எடுத்துக் காட்டும் புதிய புதிய தடயங்களைத் தோண்டிக் கண்டுபிடித்துக் கொண்டேயுள்ளனர். ஒரு காலத்தில் வெறும் கட்டுக் கதை என்று பகடி செய்யப் பட்ட சம்பவங்களை இன்று நவீன காலத் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்களின் மண்வெட்டிகள் உண்மை என்று நிரூபித்துள்ளன.

**வேதபுத்தகம் உண்மையாகவே அனைத்து மக்களுக்கும் உரிய கடவுளின் செய்தி அடங்கிய கடவுளின் புத்தகமாகும்.**

வேதாகமம் கடவுளின் புத்தகம் என்பது உண்மையே என்றாலும், இன்னும் கூட சில மக்கள் அதை வாசிப்பதை "நிறுத்தி விடுகின்றனர்". அதற்குக் காரணம், இவ்வுலகம் இரு சாராரைக் கொண்டது : ஒரு சாரார், உண்மைகளைக் காண்கின்ற விஞ்ஞானிகள், மறுசாரார், உண்மைகளுக்குத் தங்கள் கண்களை இறுக மூடிக் கொள்ளும் விசுவாசிகள் என்ற ஒரு பிரபலமான தவறான கருத்து தான். இதன் பொருள், ஓர் உண்மை விஞ்ஞானி ஓர் உண்மை விசுவாசியாக இருக்க முடியாது என்பதாகும். ஆனால் இக்கருத்தை நிராகரிக்கும் ஏராளமான பெரிய விஞ்ஞானிகள் இன்று உள்ளனர். வேதாகமம் ஓர்

அறிவியல் புத்தகம் அல்ல என்ற போதிலும் வேதாகமம் கூறும் அறிவியல் சம்பந்தமான காரியங்கள் நம்பகமானவை அல்ல என்று விஞ்ஞான உண்மைகளால் இதுவரை நிரூபிக்கப் படவில்லை. மாறாக, தனது நோக்கத்திலும், வடிவமைப்பிலும் வேதபுத்தகமானது, அறிவியலின் கட்டுக்கோப்புகளை எல்லாம் தாண்டிச் செல்கிறது.

எடுத்துக்காட்டாக, நாம் இந்த பூமி என்ற கோளின் மீது ஏன் வாழ்கிறோம் என்பதற்கு விஞ்ஞானம் எந்த விளக்கமும் தர முடியாது. இந்தப் புவியில் நமது வாழ்க்கை முடிவு பெற்ற பின் நாம் எங்கே செல்வோம் என்றும் அது கூறமுடியாது. வாழ்க்கை என்பது என்ன என்றோ, அவ்வளவு ஏன் ஒரு மனிதனின் உண்மையான மதிப்பு எவ்வளவு என்றோ கூட விஞ்ஞானம் நமக்குச்

*★ உதாரணமாக, 1868இல், கிளீன் (Klein) என்ற ஜெர்மானியப் பயணி ஒருவர் பண்டைய மோவாப் தேசத்தைப் பார்வையிடச் சென்றார், அது இன்று "ஜோர்டான்" என்று அழைக்கப்படுகிறது. அங்கே அவர் மோவாபின் அரசனான மேஷா என்பவனால் பொறிக்கப் பட்ட முப்பத்து நான்கு வரிகள் அடங்கிய கல்வெட்டு ஒன்றைக் கண்டுபிடித்தார். அந்தக் கல்வெட்டு அவன் இஸ்ரவேல் இராஜ்யத்திற்கு எதிராகச் செய்த புரட்சியின் நினைவுச் சின்னமாகும். உம்ரியும் ஆகாபும் 2 இராஜாக்கள் முதலாம் அதிகாரத்திலும் இந்தக் கல்வெட்டிலும் குறிப்பிடப்படுகின்றனர். இந்த இரண்டு அரசர்களும் மோவாபியரை அடிமை கொண்டனர் என்பது இந்த இரண்டு இடங்களிலும் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட அநேக நவீனகாலக் கண்டுபிடிப்புகள், வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளவை வரலாற்று ரீதியில் துல்லியமானவை என்பதை உறுதிப் படுத்துவதாக அமைந்துள்ளன.*

சொல்ல முடியாது. ஒரு நபர் எப்பேர்ப்பட்ட புத்திசாலியாக (அல்லது முட்டாளாக) இருந்தாலும் கூட, கடவுளைப் பற்றிய மெய்யான அறிவை அடைய ஒவ்வொருவருக்கும் தெய்வீக ஒத்தாசை தேவை. ஆகவேதான் பிரெஞ்சுத் தத்துவ அறிஞரும் கணித மேதையுமான பிளெய்ஸ் பாஸ்கல், "பகுத்தறிவின் உன்னத சாதனை பகுத்தறிவுக்கு ஒரு எல்லை உண்டு என்பதை நமக்குக் காட்டுவது தான்" என்று கூறினார். கடவுளுடைய புத்தகம் மட்டும் நம்மிடம் இருந்திருக்கவில்லை என்றால் வாழ்வின் அதிமுக்கியக் கேள்விகளுக்கு நம்பகமான பதில்களோ கிடைத்திருக்காது.

வேதபுத்தகம் உண்மையாகவே கடவுளுடைய புத்தகம்தான் என்பதைக் காட்டும் இரண்டு உறுதியான அடையாளங்களை நாம் பார்க்கலாம்.

முதலாவது, அதன் தீர்க்கதரிசனங்கள் நம்புவதற்கரிய அளவுக்கு மிகமிகத் துல்லியமாக முன்னுரைக்கப் பட்டிருத்தல் ஆகும். இரண்டாவது, வேதத்தின் செய்தியை ஏதோ விளையாட்டாகக் கருதாமல் தங்கள் வாழ்வில் சீரிய முறையில் எடுத்துக் கொண்ட மக்கள் பால் அது செலுத்தி வரும் வலிமை மிக்க நேர்மறைச் சக்தியாகும்.

## வேதாகமத்தின் தீர்க்கதரிசனங்கள் துல்லியமாக முன்னுரைக்கப் பட்டிருத்தல்

நம்மில் அநேகருக்கு எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைக் காணத் துடிக்கும் உள்ளார்ந்த ஆர்வம்

இரத்தத்திலேயே ஊறிப் போய் விட்ட ஒன்று. வேதபுத்தகம் எதிர்காலத்தில் நிகழவிருக்கின்ற சில முக்கியமான சம்பவங்களை வெகு நுட்பமாகவும் அழகாகவும் வருணிக்கின்றது. நீ ஒருவேளை கேட்கலாம்: "அது எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்?" என்று.

இதற்குப் பதில் அளிக்கும் வண்ணமாக, நீ இதுவரை சென்றிராத நாட்டிற்கு விடுமுறையைக் கழிக்கச் செல்கிறாய் என்று வைத்துக் கொள்வோம். அங்கே சாவகாசமாக உலாவச் செல்கிறாய். உன் கையிலிருக்கும் வரைபடம் ஒன்றைத் தவிர வேறு வழிகாட்டிகள் யாருமில்லை. இந்த வரைபடம் முழுக்க முழுக்க நம்பகமானது என்று நேற்று கண்டு பிடித்தாய். எப்படியென்றால், அந்த வரைபடம் கூறியது போலவே நீ சென்ற போது முதலில் ஓர் ஆறு வந்தது, பிறகு நேற்றிரவு நீ படுத்து உறங்கினாயே அந்தக் கிராமம் வந்தது. இன்று நீ ஒரு புதிய பாதையைத் தெரிந்தெடுக்க வேண்டும். உனக்கு முன்னாக நீ இதுவரை அறிந்திராத, உனக்குப் பழக்கமில்லாத பிரதேசம் இருக்கிறது. ஆனால் நீ இடதுபுறம் திரும்பி, சற்று நேரம் காடுகளின் ஊடாக நடந்தால் ஒரு பெரிய ஏரியண்டை வந்து சேருவாய் என்று உன் கையிலுள்ள வரைபடம் கூறுகிறது. அந்த ஏரியைப் பார்க்க உனக்கும் ஆசைதான். அப்படியானால் என்ன செய்வாய்? அந்த வரைபடம் சொல்வதைப் பின்பற்றி இடதுபுறமாகத் திரும்பும் பாதையில் செல்வாய், அப்படித் தானே? உன் நம்பிக்கைக்கு முக்கிய காரணம், நேற்றைய தினம் உனக்கு முன்பின் அறிமுகம் இல்லாத பகுதியில் இதே வரைபடம் மிகச் சரியான வழிகாட்டியாக

அமைந்தது தான் என்பதில் ஐயமில்லை. நீ ஓரிடத்திற்குச் செல்லுமுன்னரே அங்கே என்ன இருக்கும் என்பதை வரைபடம் கூறிற்று. அது கூறியது மிகவும் சரியாகப் போயிற்று!

வேதபுத்தகம் கடவுளுடைய புத்தகமே என்பதற்கு மிகவும் குறிப்பிடத்தக்கச் சான்றுகளுள் ஒன்று, அது எதிர்காலச் சம்பவங்களை மிகவும் துல்லியமாக முன்னுரைப்பதாகும். இன்றைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே முன்னுரைக்கப்பட்ட எத்தனையோ தீர்க்கதரிசனங்கள் சற்றும் மாறாமல் அப்படியே நிறைவேறின என்பதை நாம் அறிகிறோம்.

இந்தத் தீர்க்கதரிசனங்கள் ஏறக்குறைய உலகின் அனைத்து நாடுகளைப் பற்றியும் உரைப்பதோடு, இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைப் பற்றி வெகு திட்டவட்டமான விபரங்களையும் தருகின்றன. அதைவிட முக்கியம், மேசியாவின் வருகை பற்றிய நூற்றுக்கணக்கான தீர்க்க தரிசனங்கள் ஆகும். மேசியா பற்றிய அன்றைய வெளிப்பாடுகள் எல்லாம் இன்றைய சரித்திரமாகி விட்ட காரணத்தால், அவரது பிறப்பு, வாழ்க்கை, மரணம் பற்றிய மிகச் சிறு விபரங்களும் கூட எவ்வளவு துல்லியமாக முன்னுரைக்கப் பட்டிருந்தன என்பதைக் காண முடிகிறது.

கடந்த காலத்தில் வேதத்தில் சொல்லப்பட்ட தீர்க்க தரிசனங்கள் இதுவரை அப்படியே நிறைவேறியுள்ளன. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது வருங்காலமும் வேதபுத்தகம் முன்னுரைப்பது போலவே அமையும்

என்று கருதுவது நியாயம்தானே. ஒவ்வோர் ஆண்டும் வேதத்தின் தீர்க்கதரிசனங்கள் எவ்வளவு துல்லியமானவை என்பதன் சான்று நமது கண்களின் முன்னே படமாக விரிகின்றது. உண்மையில், இன்று வேதத்தை வாசிப்பது என்பது நாளைய செய்தித் தாளை வாசிப்பதாகும்.

டாக்டர். வில்பர் ஸ்மித், வேதாகமத்தைத் தம் வாழ்நாட்காலம் முழுவதும் படித்து வந்த ஒரு மாணவராவார். வேதாகமத்தின் தீர்க்கதரிசனங்கள் எவ்வளவு துல்லியமானவை என்பதைத் திட்டவட்டமாக எடுத்துக் காட்டுவதில் பெருமகிழ்ச்சி கொண்டவர். தாங்கள் சத்தியத்தைக் கண்டு கொண்டதாகக் கூறுவோரின் போதனைகளை, மேசியாவைப் பற்றிக் கூறும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் பலவற்றுடன் ஒப்பிட்டு, அவற்றின் வேறுபாட்டை விளக்கும் வில்பர் ஸ்மித் இவ்வாறு கூறுகின்றார்: "முகமதிய மதம், முகம்மதுவின் பிறப்புக்கு நூற்றுக் கணக்கான ஆண்டுகள் முன்னரே அவரது வருகையை முன்னறிவிக்கக் கூடிய தீர்க்கதரிசனங்கள் எதையும் சுட்டிக் காட்ட முடியவில்லை. அதேபோல, போலி வழிபாட்டுக் குழுக்களின் (Cults) தலைவர்கள் யாரும் தாங்கள் தோன்றப் போவதைக் குறித்து முன்னரே உரைத்துள்ள பண்டை இலக்கியங்கள் எதையும் குறிப்பிட்டுக் கூற முடிவதில்லை."

அதே வேளையில் "தீர்க்க தரிசனங்கள்" என்று சொல்லப் படும் அநேகக் காரியங்கள் துல்லியமாக நிறைவேற எவ்விதத் தெய்வீகத் தூண்டுதலும்

தேவையில்லை என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்

வாக்குப் பெட்டிகள் இன்னும் மூடப் படாத முன்பே, கணிப்பொறிகள், தேர்தல் நாள் பேட்டிகள் இன்னும் மற்ற முந்தைய விவரங்களைக் கொண்டு தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதைச் செய்தித் தொடர்பு சாதனங்கள் முன்னறிவிக்க முடியும். எல்லாப் புள்ளியியல் விபரங்களும் அவர்கள் கைகளில் இருக்கையில் நேரம் வருமுன்னரே வெற்றி பெற்றவர் யார் என்பதை வெளியிடுவதில் சிறப்பு எதுமில்லை.

என்றாலும், இன்றிலிருந்து இருபது அல்லது ஐம்பது ஆண்டுகள் கழித்து யாரெல்லாம் தேர்தலில் நிற்பார்கள் என்று ஒரு செய்தித்தாள் நிருபரைக் கேட்டுப் பார். யார் வெற்றி பெறுவார்கள் என்று கேள். பிறகு அப்படி வெற்றி பெறுபவர்கள் எங்கே பிறப்பார்கள், எப்படி வாழ்வார்கள், எந்தச் சூழ்நிலையில் இறப்பார்கள் என்றெல்லாம் கேள். அதற்கும் அப்பால், இன்றிலிருந்து1000 ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய கிழக்கில் என்ன நடக்கும் என்பதைப் பற்றி நம்பகமான தகவல் வேண்டும் என்று கேட்டுப் பார். இந்த நீண்ட காலகட்டத்தில் முற்றிலும் அழிந்து போகக் கூடிய மாநகர்களின் பெயர்களைக் கூறும் படியும் கேள்.

இப்படி நீ கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் அந்த நிருபர் பதிலாகக் கூறும் தீர்க்கதரிசனங்கள் பொய்த்துப் போகக் கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்துக் கொண்டே செல்லும் என்பதை நீயும் ஒத்துக் கொள்வாய். அதாவது, நித்தியத்தின் கடவுள் அந்த நிருபருக்கு எதிர்காலம் பற்றிய

உண்மைகளை வெளிப்படுத்தினாலொழிய ; அப்படி கடவுள் அவருக்கு எல்லாவற்றையும் வெளிப்படுத்துவார் என்றால், மட்டுமே, அந்த நிருபருக்கு ஆதி முதல் அந்தம் வரை அனைத்தும் தெரிந்திருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம். நாம் நமது செய்தி நிருபரிடம் என்னென்ன கேட்க வேண்டும் என்று மேலே கூறினோமோ அவை போன்ற விபரங்களும், அதை விட நீண்ட காலகட்டத்தில், அதை விட நுணுக்கமான விபரங்களும் வேதாகமத்தில் தீர்க்க தரிசனமாக உரைக்கப் பட்டுள்ளன.

உதாரணமாக, பண்டைய தீரு மாநகரின் வரலாறானது, இந்த மாநகருக்கு என்ன நேரிடும் என்று கடவுள் முன்னுரைத்திருந்தாரோ அதன் முழுமையான நிறைவேறுதல் ஆகும்.

நீ விரும்பினால் எசேக்கியேல் 26, வசனங்கள் 3-21 வரை கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களை முதலில் வாசித்து விட்டு, பின்னர் பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் *(Encyclopedia Brittanica)* என்ற நூலையும், பிற வரலாற்று நூல்களையும் படித்துப் பார். அவை இரண்டிலும் நீ ஒரே கதையை வாசிப்பாய். முதலில் வேதபுத்தகத்தில் தீர்க்கதரிசனமாக, பிறகு அதையே கலைக் களஞ்சியத்தில் வரலாறாகக் காண்பாய்.

தீர்க்க தரிசனம்: சம்பவங்கள் நிகழ்வதற்கு வெகு காலத்திற்கு முன்பே, தீரு மாநகருக்கு ஒரு கொந்தளிப்பான எதிர்காலம் உண்டென கடவுள் முன்னறிவித்திருந்தார். அவர் சொன்னார்:

*இதோ, நான் ........அநேகம் ஜாதிகளை உனக்கு விரோதமாக எழும்பி வரப் பண்ணுகிறேன்.......... அவர்கள் தீருவின் மதில்களை அழித்து, அதின் கொத்தளங்களை இடித்துப் போடுவார்கள்.* மேலும் இந்தப் புகழ்பெற்ற மாநகர் கட்டப் பட்டிருந்த இடம் வெறும் பாறையாக்கிப் போடப்படும் என்றும் முன்னுரைக்கப்பட்டது. அதற்கும் மேலாக, *உன் கல்லுகளையும், உன் மரங்களையும், உன் மண்ணையும் கடலின் நடுவே போட்டு விடுவார்கள்* என்றும் உரைக்கப்பட்டது. எனினும் இந்தத் தீர்க்கதரிசனங்களின் நுட்பமான விபரங்கள் இத்துடன் முடிவடைந்து விடவில்லை. பண்டைய தீருவைப் பற்றிக் கடவுள் கூறினார்:....... *நீ வலைகளை விரிக்கிற ஸ்தலமாக இருப்பாய் (எசேக்கியேல் 26:3,4,12,14).*

வரலாறு: நீ வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால், தீரு என்ற பழைய நகரத்தை அழிக்கையில் நேபுகாத்நேச்சார் மன்னன், தீர்க்கதரிசனங்களில் முன்னுரைக்கப் பட்டிருந்தது போலவே அதன் மதில்களையும் கோபுரங்களையும் இடித்து அழித்துப் போட்டான் என்பதைக் காண்பாய். அதன் பிறகு மகா அலெக்ஸாண்டரின் பொறியியல் வல்லுநர்கள் பழைய தீரு நகரத்தைச் சுத்தமாக வழித்தெடுத்து, *வெறும் மொட்டைப் பாறையாக* விட்டுச் சென்றனர்.

தீவுக்குச் செல்ல வழியுண்டாக்குவதற்காக மாநகரின் இடிபாடுகளை எல்லாம் எடுத்துக் கடலில் போட்டு

பாதை அமைத்தபோது, தீர்க்கதரிசனத்தில் உரைக்கப்பட்ட படியே நடந்தது: கற்களும் மரமும் மண்ணும் உண்மையாகவே *தண்ணீரில்* எறியப்பட்டன. ஆம், இந்நாள் வரை பண்டைய தீருவின் இடிபாடுகள் கடல் நீரிலேயே மூழ்கிக் கிடக்கின்றன. அப்படி நடக்கும் என்று கடவுள் சொன்னார், அது அப்படியே நடந்தது.

இன்று மத்திய கிழக்கில் தீரு என்ற பெயர் கொண்ட ஒரு பிரபலமான நகரம் இருக்கிறது என்றாலும், அது அந்தப் பண்டைய தீரு மாநகர் அல்ல, அந்தப் பண்டைய நகரம் 1291 இல் முற்றிலுமாக அழிக்கப் பட்டுப் போயிற்று.

இன்று ஒருவேளை அந்தப் பண்டைய தீரு மாநகர் இருந்த இடத்திற்கு நீ செல்வாய் என்றால், இந்தத் தீர்க்க தரிசனங்கள் இன்னும் எவ்வளவு துல்லியமாக நிறைவேறி உள்ளன என்பதைக் காண்பாய். அங்கே ஒரு சிறு கிராமத்தில் கூட்டமாகக் காணப்படும் சில மீனவர்கள் குடிசைகளையும், மீன்பிடிப் படகுகள் கடலிலே அசைந்தாடிச் செல்வதையும், மீன் பிடிக்கும் வலைகள் மொட்டைப் பாறைகளின் மீது உலர்த்தப் பட்டிருப்பதையும் பார்க்கலாம்! அன்று செல்வம் கொழித்த பண்டை மாநகர் தீரு இன்று இந்தக் கதிக்கு ஆளாகும் என்பதை மனித ஞானம் முன்னுரைத்திருப்பது சாத்தியம் தானா?

பீட்டர் ஸ்டோனர் பண்டைய தீரு பற்றிக் கூறப்பட்ட ஏழு தீர்க்கதரிசனங்களை அதன் வரலாற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தார். எசேக்கியேலின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறக் கூடிய சாத்தியக்

கூறுகளை கணித முறைப்படி கணக்கிட்டுப் பார்த்த பின் அவர் கூறியதாவது:

"எசேக்கியேல் தனது காலத்தில் தீரு மாநகரைப் பார்த்து விட்டு, தனது மனித ஞானத்தின் அடிப்படையில் இந்த எழு காரியங்களையும் முன்னறிவித்திருப்பார் என்றால், அவை உண்மையாக நிறைவேறும் சாத்தியக் கூறுகள் எனது கணக்கீட்டின் படி 75,000,000 இல் ஒன்று மட்டுமே. ஆனால் உண்மையில் அவை அனைத்தும், ஒரு சிறு விபரம் கூடத் தப்பாமல் அப்படியே நிறைவேறின."

ஒரு குழந்தையின் பிறப்பு பற்றிய முன்னறிவிப்புகளில் ஒன்றே ஒன்றைப் பற்றி இப்பொழுது கவனிப்போம்.

ஓய்வுபெற்ற அரசு வரிவசூல் அதிகாரியான மத்தேயு, இயேசு பிறந்தபொழுது நிறைவேறிய அநேகத் தீர்க்கதரிசனங்களில் நான்கை மட்டும் குறிப்பிடுகிறார். அவற்றுள் ஒன்றில், மத்தேயு மீகா தீர்க்கதரிசியைப் பற்றிப் பேசுகிறார். இந்த மீகா தமது நாட்களில் காணப்பட்ட உண்மையற்ற தலைவர்களுக்கு எதிராகத் தமது கண்டனக் குரலை இடியோசையாக முழங்கச் செய்தவர். தமது நாட்களில் நம் நாட்டில் உண்மையுள்ள தலைவர்களுக்குப் பஞ்சம் வந்து விட்டதே என்ற எண்ணம் அவரது உள்ளத்தை உடைத்தது. என்றாலும், கடவுள் ஒரு நாளில் ஒரு பிரபு பிறப்பார் என்று தமக்கு வெளிப் படுத்திய போது, தம் நாட்டின் எதிர்காலம் பிரகாசமாக அமையப் போகிறது என்று உணர்ந்தார். இந்த வரப் போகிற அதிபதி, சரியாக எந்த இடத்தில்

பிறப்பார் என்பதைக் கூட மீகா திட்டவட்டமாக முன்னுரைத்தார்.

*எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவில் உள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாய் இருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது (மீகா 5:2)*

இஸ்ரவேலுக்கு மிக அவசியமான அந்த அதிபதி எப்பிராத்தா என்னும் பெத்லகேமிலே பிறப்பார் என்பதைக் கடவுள் வெளிப் படுத்தினார்.

மீகா தீர்க்கதரிசனமாக உரைத்திருந்த படியே, இயேசு தமது குடும்பத்தினரின் சொந்த ஊராகிய நாசரேத்தில் பிறக்காமல், எப்பிராத்தா என்னும் பெத்லகேம் ஊரிலே பிறந்தார்; ஓர் ரோமப் பேரரசரின் கட்டளையின் நிமித்தமாக அங்கே பிறந்தார். அது மக்கள்தொகை கணக்கெடுக்கப்படும் நேரம், அவரது பெற்றோர் அரசனின் ஆணைக்குக் கீழ்ப்படிந்தனர், அந்த ஆணையின் படி அவர்கள் தங்கள் வீட்டை விட்டு பெத்லகேம் நோக்கிச் சென்றனர். பெத்லகேம் யூதேயாவின் அநேக சிற்றூர்களில் ஒன்று, அங்கேயிருந்து ஆளுகை செய்கிறவர் புறப்பட்டு வருவார் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம். அவர் அங்கே பிறக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் மிகமிகக் குறைவு. என்றாலும் 'அது மீகா முன்னுரைத்தபடியே நடைபெற்றது. இயேசுவின் வாழ்க்கை பற்றிய இத்தகைய

வியத்தகு தீர்க்கதரிசனங்கள் பல நூறு உண்டு அவற்றில் இது ஒன்றே ஒன்று தான்.

கடவுள் இப்படி உரைத்ததாக நாம் வாசிக்கிறோம்:

*அந்தத்தில் உள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப் படாதவைகளைப் பூர்வகால முதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளை எல்லாம் செய்வேன் (ஏசாயா46:10).*

*பூர்வகாலத்தில் நடந்தவைகளை ஆதிமுதல் அறிவித்தேன், அவைகள் என் வாயிலிருந்து பிறந்தன, அவைகளை வெளிப்படுத்தினேன்; அவைகளைச் சடிதியாய்ச் செய்தேன், அவைகள் நடந்தன ...... நான் அவைகளை முன்னமே உனக்கு அறிவித்து, அவைகள் வராததற்கு முன்னே உனக்கு வெளிப்படுத்தினேன் (ஏசாயா 48:3,5)*

இந்தத தீர்க்கதரிசனங்கள், கடவுளால் அருளப்பட்டு, வேதாமகத்தில் எழுதப்பட்டுள்ளவை, 100% துல்லியமாக அப்படியே நிறைவேறின என்பதற்கு வரலாறு சான்று பகருகிறது.

## வேதாகமத்தின் மிக வலிய செல்வாக்கு

வேதபுத்தகம் கடவுளுடைய வார்த்தையே என்பதற்கு இரண்டாவது பலமான சான்று, அதன் செல்வாக்கு அல்லது தாக்கம் (influence) ஆகும். வேதாகமம் எங்கெல்லாம், எப்பொழுதெல்லாம் கற்பிக்கப்

பட்டு, விசுவாசிக்கப் பட்டதோ அங்கெல்லாம் சமுதாய ரீதியிலும், கலாச்சார ரீதியிலும், தனிப்பட்ட வாழ்விலும் மனுக்குலத்திற்கே ஒரு கண்ணியத்தைக் கூட்டி வழங்கியிருக்கிறது.

இந்த நூலின் முதல் பதிப்பு அச்சுக்குச் செல்வதற்குச் சற்று முன்பாக ஒரு புதிய நண்பர் எங்கள் வீட்டிற்கு வந்தார். நாங்கள் இருவருமாகச் சேர்ந்து அச்சுப்பிரதியைச் சரிபார்த்துக் கொண்டிருந்தோம். பொதுவாக உணர்ச்சி வசப்படும் இயல்பற்ற அவர், நாங்கள் ஏழாம் அத்தியாயத்தை வாசித்துக் கொண்டிருந்தபோது திடீரென அழ ஆரம்பித்தார். இரண்டு முறை நாங்கள் வாசிப்பதை நிறுத்தி விட்டுத் தலை வணங்கி ஜெபித்தோம், நாங்கள் எந்தக் கடவுளின் அன்பைக் குறித்து வாசித்துக் கொண்டிருந்தோமோ அந்தக் கடவுளைப் போற்றித் துதித்தோம். இருவருமாகச் சேர்ந்து கடவுளுடைய பொறுமைக்காக, அவரது இரக்கத்திற்காக இன்னும் தகுதியற்ற எங்கள் வாழ்க்கைகளில் அவரது அன்பின் அடையாளங்களுக்காக அவருக்கு நன்றி செலுத்தினோம். ஜீவனுள்ள தேவனின் உயிர்த் துடிப்பு மிக்க அந்தப் பிரசன்னத்தை உணருகையில் நாங்கள் மிகுந்த ஆனந்தம் கொண்டோம்.

அந்த நாள் குறிப்பாக என் நண்பருக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்த நாளாக அமைந்தது. சரியாக இதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர், அவர் ஒரு ஆடம்பரமான அடுக்கு மாடிக் குடியிருப்பில் தனியாக அமர்ந்திருந்தார், இப்பொழுது நாங்கள் சந்தித்திருந்த

இந்த இடமோ வெகு எளிமையானது. அவரின் முந்திய குடியிருப்புக்கு முற்றிலும் மாறுபட்டது.

ஆனால் அப்பொழுது அவரைச் சுற்றியிருந்த அழகு அவருக்கு எவ்வித மகிழ்ச்சியும் அளிக்கவில்லை. உண்மையில் வாழ்வது அவசியம் தானா என்று எண்ணும் அளவிற்கு மனம் நொந்து போயிருந்தார். மகிழ்ச்சியை எப்படியாவது அடைந்து விட வேண்டும் என்ற தணியாத நாட்டத்தில் தனது ஆண்மையின் அத்தனை மிருகத் தனமான வெறிகளையும் கட்டவிழ்த்து விட்டிருந்தார். போதைப்பொருள் பழக்கம் அவரை ஆண்டியாக்கி விட்டுச் சென்றது. மனநிலை சோர்ந்து போகையில் உற்சாகப் படுத்தும் மருந்துகளும், நிலைதவறித் தடுமாறுகையில் ஒரு நிலைக்குக் கொண்டு வரும் மருந்துகளும், பிராந்தியும், விஸ்கியும் அவரது அன்றாடகப் பழக்கமாகி விட்டிருந்தன. வருடக்கணக்காக, ஐரோப்பாவிலும் மற்றும் உலகம் எங்கிலும் செல்வந்தர்களிலும் செல்வந்தர்களான எத்தனையோ பேருடன் குடித்து வெறித்துக் காலத்தைக் கழித்திருந்தவர், அன்றிரவில் தனியாக அமர்ந்திருந்தார். அவரது தனிமையில், அவரது நினைவுகள் தந்த கலக்கம் அதிகரித்து, உலகம் மிகப் பயங்கரமான ஒரு சூழ்நிலையில் இருப்பதாகக் காட்டியது. தப்பிக்க வழியே இல்லை என்று தோன்றியது அவருக்கு.

ஓர் உறுதியுடன் அவர் தமது இரட்டைக் குழல் கைத்துப்பாக்கியை எடுத்து, தோட்டாக்களை நிரப்பி, தமது நெற்றியில் குறி வைத்து, துப்பாக்கியின் குதிரையை

அழுத்தினார். "1/8 அங்குல தூரம் மட்டுமே, அதன் பிறகு எல்லாம் அப்படியே மறைந்து ஒழிந்து விடும்" என்று தனக்குள் எண்ணிக் கொண்டார். அந்த ஒரு நொடிப் பொழுதில் தொலைக்காட்சி நிகழ்ச்சி மாறியது (அது எப்படி நடந்தது என்பது என் நண்பருக்கே விளங்கவில்லை). நம்பிக்கை மிக்க எதிர்காலம் பற்றிய செய்தி ஒன்று வேதாகமத்திலிருந்து அருளப் படுவதைக் கவனித்தார். நள்ளிரவு நெருங்க நெருங்க, தனிமையில் இருந்த அவர் ஜீவனுள்ள தேவனின் முன்பாக மன்னிப்பையும் இரக்கத்தையும் வேண்டிக் கெஞ்சியவராக முகங்குப்புற விழுந்தார்.

தேவனுடைய வல்லமை என் நண்பரை அடியோடு மாற்றிப் போட்டதனால் இப்பொழுது என் முன்னே உட்கார்ந்திருக்கும் இந்த நபருக்கும் இதுவரை நான் வருணித்த நபருக்கும் இடையே அதிக ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. இவர் பிறப்பதற்கு முன்னரே, இவரது பெற்றோர் இவருக்காக ஜெபித்திருந்தனர்; ஓர் இளைஞனாக இருந்தபொழுது வேதத்தை வாசித்திருந்த போதிலும், அதன் செய்தியை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். வசதியும், வாய்ப்புகளும் மிக்க தமது உலகில் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்து, எண்ணிக் கூடப் பார்க்க முடியாத அளவு ஒழுக்க நெறிகளை எல்லாம் மீறி, தமது ஆசை இச்சைகளில் திளைத்து மூழ்கி விட்டிருந்தார்.

ஒரு வழியாக எனது நண்பர் கடவுளைக் கண்டு கொண்ட அந்த மறக்க முடியாத இரவிற்கு பதினேழு

ஆண்டுகளுக்கு முன்னர், ஓர் அழகிய தோல் உறை போட்டிருந்த ஒரு நோட்டுப் புத்தகத்தை வாங்கியிருந்தார். அதிலே எதுவும் எழுதப்படாத வெள்ளைத் தாள்கள் இருந்தன. அதை வாங்கிய நாளிலிருந்து தம் வாழ்வில் இடம் பெறுகின்ற அனைத்து முக்கியச் சம்பவங்களையும் குறித்து அதில் எழுதி வைக்க வேண்டும் என்பது அவர் எண்ணமாயிருந்தது. அதனால் ஊதாரித்தனமும் வீண் மாயையும் நிறைந்த அந்தப் பதினேழு ஆண்டுகளில், அந்த ஏட்டில் எழுதப் படும் தகுதியுடைய எதுவுமே அவர் வாழ்வில் நிகழவில்லை.

உண்மை என்னவெனில், அந்த நாட்களில் மெய்யான கடவுளுக்கு முதுகு காட்டி, அவரை விட்டு விலகிச் சென்ற என் நண்பர் ஒரு விநோதமான, மனநிறைவு தராத, போலியான ஆவிக்குரிய பயணத்தை மேற்கொண்டிருந்தார். தினமும் இராசிபலன் பார்ப்பது, ராக் இசை கேட்பது, ராக் இசைக் கச்சேரிகளுக்குச் செல்வது இவற்றில் தான் அது ஆரம்பித்தது. விரைவிலேயே அவர் போலி வழிபாட்டுக் குழு (Cult) ஒன்றில் சிக்கிக் கொண்டார். யோகா தமது கவனத்தைக் கவரவே இந்து மதத் தத்துவங்களைப் படிக்கலானார். மெல்ல மெல்ல கிழக்கத்திய தியானக் கொள்கையில் ஈடுபாடு கொண்டார். அந்த ஆண்டுகளில் எல்லாம் அவர் கடந்து சென்ற அனுபவங்களில் ஒன்றாகிலும் அவரது தோலுறை நோட்டில் எழுதப்படத் தகுதி பெற்றிருக்கவில்லை. அந்த மறக்க முடியாத இரவில் கடவுளை அவர் சந்திக்கும் வரை, அந்த ஏட்டின் பக்கங்கள் வெறுமை என்னும் வேதனையால் நிறைந்து, வெள்ளையாகவே காட்சியளித்தன.

அந்த இரவில் எனது நண்பர் முதன் முதலாகத் தமது ஏட்டில் எழுதினார். அவர் எழுதியதைப் படித்துப் பார்க்கும் பெருமகிழ்ச்சி எனக்குக் கிட்டியது. அது தேவை நிறைந்த ஒரு மனிதன், அன்பு நிறைந்த கடவுளால் மீட்டெடுக்கப் பட்டதைக் கூறும் ஆவிக்குரிய புனித வரலாறு ஆகும். அது உண்மையாகவே மிக அழகானது. மிகுந்த இரக்கத்தோடு கூட, கடவுள் தமது மாறாத சத்தியமும் மாட்சி மிகு அன்புமாகிய ஒளியால் அவரது ஆவிக்குரிய குருட்டுத் தனத்தை அகற்றி, வேதனையிலிருந்தும் மரணத்திலிருந்தும் அவரை விடுவித்திருந்தார்.

எனது நண்பரின் குருட்டுத் தனம் போன்றவையாகிய மனிதனின் ஆவிக்குரிய குழப்பத்தின் காரணமாகவே கடவுள் தம்மை வேதாகமம் என்று அழைக்கப் படும் ஒரு புத்தகத்தின் மூலமாக வெளிப் படுத்தியுள்ளார். ஒரேயொரு நம்பகமான ஆவிக்குரிய துணைவனான அந்த வேதபுத்தகத்தை விட்டு நீ விலகிச் செல்வாய் என்றால் உன்னை நீ மாயையினாலும் பொய்யினாலும் சுற்றி அடைத்துக் கொள்வாய். ஆனால், கடவுளைத் தேடும் உனது முயற்சியில், கற்றுக் கொள்ள ஆவலுள்ள திறந்த மனதுடனே வேதபுத்தகத்தை நோக்கி நீ திரும்புவாய் என்றால் உனக்குத் தேவையான சகல ஆவிக்குரிய ஒளியும் வழி நடத்துதலும் அதில் அடங்கியிருப்பதைக் கண்டு கொள்வாய்.

கடவுளுடைய வார்த்தையின் மூலமாக மட்டுமே தம்மைப் பற்றி உரைத்துள்ள கடவுளை நாம் தெளிவாகப்

புரிந்து கொள்ள முடியும். இந்தப் புத்தகத்தில் நாம் சத்தியத்திற்கே, தேவனுடைய வார்த்தைக்கே, உலகத்தின் ஒளிக்கே அறிமுகம் செய்து வைக்கப் படுகிறோம்.

நாதன் வேதம் என்றும்
எங்கள் வழி காட்டும்;
அதை நம்புவோர்க்கும்
மகிழ் ஒளி வீசும்.

# சிந்தித்துப் பார்

1. எதிர்காலச் சம்பவங்களைத் துல்லியமாக முன்னுரைப்பதில் வேதாகமத்திற்கு இணையாகக் கூடிய வேறு ஏதாவது அச்சுப் பிரதிகளோ அல்லது 'புனித இலக்கியங்களோ' உள்ளனவா?

2. வேதபுத்தகத்தின் செய்திக்குச் செவி கொடுத்ததால் தங்கள் வாழ்க்கையில் மாற்றம் பெற்ற மக்கள் யாரேனும் உனக்குத் தனிப்பட்ட விதத்தில் தெரியுமா?

3. வேதாகமத்தின் தன்னிகரற்ற போதனைகளை நீ எப்பொழுதாவது அற்பமாக எண்ணியதும், அதே சமயத்தில் அதைத் திறந்த மனதுடன் வாசித்துப் பார்க்காமல் அலட்சியம் செய்ததும் உண்டா?

வானிலும் புவியிலும் உள்ள அத்தனைப் பிரச்சினைகளும் ஒன்று சேர்ந்து, ஒரே வேளையில் நம்மை எதிர் கொண்டாலும் கடவுள் என்ற மிகப் பெரிய பிரச்சினையோடு: அதாவது, அவர் இருக்கின்றாரா; அவர் எப்படி இருப்பார்; நன்மை தீமை அறியக் கூடிய சன்மார்க்கப் பிறவிகளாகிய நாம் அவரைக் குறித்து என்ன செய்ய வேண்டும் என்பதுடன் ஒப்பிடுகையில் அவையனைத்தும் ஒன்றுமேயில்லை.

**- A.W.** டோஜர்.

## அத்தியாயம் 3

# கடவுள் எப்படி இருப்பார்?

அநேக மக்கள் தங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒரு கட்டத்தில் "கடவுள் எப்படி இருப்பார்?" என்று கேட்டிருக்கின்றனர். கடவுள் இந்தக் கேள்விக்குப் பதில் அளித்து விட்ட போதிலும், அவர் வேதபுத்தகத்தில் தம்மைப் பற்றி என்ன கூறுகிறார் என்பதை வாசிப்பதைக் காட்டிலும் தங்கள் கற்பனைத் திறனையும் சிந்தனா சக்தியையும் அதிகமாக நம்புவோர் இன்னும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இந்த மக்கள் வேதாகமத்தின் முக்கியமான கூற்று ஒன்றைத் தலைகீழாக்கிப் போடுகின்றனர். *நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக (ஆதியாகமம் 1:26)* என்று கடவுள் சொல்லியிருக்க, இவர்களோ "நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் கடவுளை உண்டாக்குவோமாக" என்கின்றனர். இப்படியாக இவர்கள் *அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்களின் ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றுகிறார்கள் (ரோமர் 1:23)*. மனித கற்பனையில் உருவான எந்தக் 'கடவுளும்' முழுக்க முழுக்க வல்லமை அற்றதாயும், அவ்வளவு ஏன சில வேளைகளில் வேடிக்கையானதாயும் இருக்கிறது.

ஒரு மனிதன் எவ்வளவுதான் புத்திசாலியாக இருந்தாலும், அவன் உலக ஞானத்தினால் ஜீவனுள்ள கடவுளை ஒரு நாளும் கண்டறிய முடியாது .... *உலகமானது சுய ஞானத்தினாலே தேவனை அறியாதிருந்தது (1 கொரிந்தியர் 1:21)* மனித சாமர்த்தியத்தினால் கடவுளைக் கண்டு கொள்ள முடியும் என்றால் அவர் கடவுளாயிருக்கவே தகுதியற்றவர். அது மட்டுமல்ல, கடவுளைக் கண்டறிய மனித சாமர்த்தியம் கண்டிப்பாக அவசியம் என்றால், அவ்வளவு சாமர்த்தியம் இல்லாத மக்கள் அவரைத் தேடிக் கண்டு பிடிப்பது சிரமமாகுமே. ஆனால் அது அப்படி நடப்பதில்லை.

அதற்கு மாறாக, ஆவிக்குரிய ஞானம் அனைவருக்கும் கிட்டக் கூடியது. அது ஒரு பல்கலைக் கழகப் பேராசிரியருக்கு எவ்வளவு கிட்டக் கூடுமோ அதேயளவு ஓர் ஆப்பிரிக்கப் பேதைப் பெண்ணுக்கும் கிட்டக் கூடியது. காரணம் ஆவிக்குரிய ஞானம் கல்வியறிவினாலோ, பள்ளிப் படிப்பினாலோ வருவதல்ல. கடவுளை நாடித் தேடுவதில் அவரது உதவி தங்களுக்குத் தேவை என்று உணரக் கூடிய அளவு மனத்தாழ்மையுள்ள எல்லா மக்களுக்கும் அது கிட்டக் கூடியது.

> *உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாய் இருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிற .... தேவனிடத்தில் கேட்கக் கடவன் (யாக்கோபு 1:5)*
>
> இந்த ஞானம் உலக ஞானமல்ல, பரம ஞானம். அந்த ஞானத்தை *இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை* (அதாவது, இவ்வுலக முறைப் படி ஆட்சி செய்யும் அதிபதிகள்) ......

*நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும் படிக்குத் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம் (1 கொரிந்தியர் 2:8, 12).*

வேதாகமம் என்பது வெறுமனே ஒரு மத ஆராய்ச்சிக் கட்டுரை அல்ல; அது முக்கியமாக, கடவுள் மனிதனுக்குத் தம்மை எவ்வாறு வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதன் பதிவேடு ஆகும். கடவுள் யார் என்றும், அவர் உன் வாழ்க்கையில் என்ன செய்ய விரும்புகிறார் என்றும் நீ புரிந்து கொள்வதற்குத் தேவையான ஆவிக்குரிய ஞானத்தைத் தர வல்லவர் அந்தக் கடவுள் ஒருவர் மட்டுமே.

நீ மட்டும் அவரை வேண்டிக் கொள்வாயானால் அவர் தமது பரிசுத்த வசனத்தின் மூலமாகத் தம்மை உனக்குக் காண்பிப்பார்.

எங்களுடைய பயணங்களிலே, வழக்கத்திற்கு மாறானவை எனக் கருதப்படக் கூடிய இடங்களிலும், எதிர்பார்க்க முடியாத மக்கள் மத்தியிலும் நாங்கள் ஆழமான ஆவிக்குரிய ஆர்வத்தையும், கருத்துக்களையும் கண்டதுண்டு. எடுத்துக் காட்டாக, கென்யாவில் ஒரு நாள் ஒரு கிராமத்தில் ஒரு புதரின் அருகே ஒரு கூட்டம் இளம் ஆப்பிரிக்கப் பையன்களைச் சந்தித்தோம். அவர்கள் நாட்டம் எல்லாம் தங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்வதிலும், கடவுளுடைய காரியங்களைக குறித்து இன்னும் அதிகமாக அறிந்து கொள்வதிலுமே இருந்தது போல் தோன்றியது.

பூமத்திய ரேகைப் பிரதேசமான அங்கு கதிரவன் வேகமாகத் தொடுவானில் மறைந்து, நீண்ட, கறுகறுப்பான ஒரு நாளுக்கு முடிவு கட்டிக் கொண்டிருந்தது. சற்று ஓய்வெடுக்க எண்ணிய நான் புழுதி நிறைந்த ஒரு பாதையின் அருகேயிருந்த ஒரு பாறையின் மீது அமர்ந்தேன். அருகிலிருந்த ஒரு புதரில் ஆளரவம் கேட்டது, திரும்பிப் பார்த்தேன். விண்ணில் பிரகாசித்துக் கொண்டிருந்த முழு நிலவின் ஒளி ஓர் ஆப்பிரிக்கச் சிறுவனின் கருநிறக் கண்களில் சிறு ஒளிக் கற்றையாகப் பிரதிபலிக்கக் கண்டேன். விரைவிலேயே இந்த 10 வயது சிறுவன் அந்தப் பாறையில் என்னோடு கூட அமர்ந்து கொண்டிருந்தான்; நாங்கள் வெகு சீக்கிரம் நல்ல நண்பர்களாகி விட்டோம். எங்கள் குரல்களைக் கேட்ட மற்ற சிறுவர்கள் எங்கிருந்து தான் வந்தார்களோ, தெரியவில்லை, கூட்டமாக வந்து எங்களைச் சூழ்ந்து கொண்டு நாங்கள் என்ன பேசுகிறோம் என்பதைக் கேட்கலானார்கள். வேதாகமத்தைப் பற்றி அவர்களுக்கு இருந்த அறிவைக் கண்டு அதிசயித்தேன்.

"கடவுள் ஏன் மோசேயைத் தம் முகத்தைப் பார்க்க விடவில்லை?" - எனது சிறு நண்பன் கேட்டான்.

அந்தக் கேள்வி என்னை அதிகம் கவரவே, நான் பதிலுக்கு சிறுவன் ஜோயவிடம், தேவன் மோசேயிடம் *'என் பின்பக்கத்தைக் காண்பாய்; என் முகமோ காணப்படாது' (யாத்திராகமம் 33:23)* என்று சொல்வதற்கு முன், மோசே அவரிடம் செய்த ஜெபம் என்னவென்று உனக்கு நினைவிருக்கிறதா என்று கேட்டேன்.

அவனுக்கு அது நினைவில்லை. "அப்படியானால் நான் உனக்கு ஞாபகப் படுத்துகிறேன்" என்ற நான், *மோசே: "உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்" என்று ஜெபித்தான் (யாத்திரம் 33:18)* என்றேன். வேறு விதமாகச் சொன்னால், கடவுள் தாம் எப்படிப் பட்டவர் என்பதைத் தனக்குக் காண்பிக்க வேண்டுமென்று மோசே கேட்டான். எனினும் இந்த வேண்டுகோளில் ஒரு சிக்கல் உண்டு என்பதைத் தேவன் அறிந்திருந்தார். ஏனெனில் தேவனுடைய மகிமையானது மோசே கற்பனை செய்யவோ, புரிந்து கொள்ளவோ கூடிய எல்லாவற்றிற்கும் மிக மிக அப்பாற்பட்டது. கடவுளுடைய பிரகாசிக்கும் மகிமை, பரிசுத்தம், ஒளி ஆகியவை பட்சித்துப் போடக் கூடியவை. தேவன்: *ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடு இருக்கக் கூடாது* என்று எச்சரிக்க வேண்டியதாயிற்று (யாத்திராகமம் 33:20)

கடவுளுடைய மகிமையைப் பார்ப்பது தன்னை அப்படியே மேற்கொண்டு விடும் என்பதை மோசே அறியாமல் இருந்தான். ஆனால் கடவுளோ தம் பட்சமாக மக்களை இழுத்துக் கொள்ள விரும்பும், தம்மைத் தாமே வெளிப்படுத்துகின்ற கடவுளாக இருப்பதால் மோசே தீர்க்கதரிசியால் எவ்வளவு தாங்கிக் கொள்ள முடியுமோ அவ்வளவு மட்டும் தம்மை அவனுக்குக் காண்பித்தார். கடவுள் மட்டும் தம்மை இன்னும் அதிகமாக அவனுக்குக் காண்பித்திருப்பாரானால், அவரது சமூகத்தின் பிரகாசத்தினால் மோசே முற்றிலுமாகத் தகிக்கப் பட்டுப் போயிருப்பான். கடவுள் தமது மகிமையின் முழுமையை மறைத்துக் கொண்ட போதிலும் கூட, மோசே இருந்த

இடத்தை அவர் கடந்து செல்கையில், அந்தக் கன்மலையின் வெடிப்பிலே மோசேயை வைத்துத் தம் கரத்தால் அவனை மூட வேண்டியதாயிற்று (யாத்திராகமம் 33:22).

பூமத்திய ரேகைப் பிரதேசத்தில் வாழ்வதால், தங்கள் கண்கள் மேல் கைகளை வைத்து மறைக்காமல் நடுப்பகல் சூரியனை நேரடியாகக் காணவே முடியாது என்பதை எனது இளம் நண்பர்கள் நன்றாக அறிந்திருந்தனர். இருள் சூழ்ந்த ஓரிரவில் விட்டில் பூச்சிகள் விளக்கினிடமாக ஈர்க்கப்படும் என்பதும் அவர்கள் அறிந்த விஷயமே. விட்டில் பூச்சிகள் விளக்குக்கு வெகு அருகே செல்லுமானால் என்ன நேரிடும் என்று நான் அவர்களிடம் கேட்டபோது, ஏகோபித்த குரலில் "அவை மாண்டு போகும்" என்று பதில் வந்தது. அளவுக்கு மிஞ்சிய ஒளியின் அபாயங்களைக் குறித்து அவர்கள் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தனர்.

அவர்களது கேள்விக்கான பதிலை அவர்கள் இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள உதவக் கூடிய வேறு உதாரணம் ஏதாவது கிடைக்குமா என்று சிந்தித்துப் பார்த்தேன். எனது புதிய இளம் நண்பர்கள் யாவரும், தங்களுடைய சிறு தம்பி தங்கையரைத் துணிகளில் சுற்றி, தங்கள் தாய்மார் தங்களது அன்பும் பட்சமும் நிறைந்த நெஞ்சத்தருகே குழந்தை இருக்குமாறு பழைய புடவைத் துணியால் சுற்றிக் கட்டிச் சுமந்து செல்வதை நன்றாக அறிந்திருந்தனர். எனவே நான், கடவுள் பூமியைச் சுற்றிக் கட்டி வைத்துள்ள பாதுகாப்பான புடவை *(யோபு 38:9)* பற்றி அவர்களிடம் கூறினேன்.

(விஞ்ஞானிகள் அதை ஓஜோன் அடுக்கு (Ozone layer) என அழைக்கின்றனர். பல்வேறு நிலைகளிலுள்ள பிராணவாயுவினால் (oxygen) ஆகிய இந்த மிருதுவான போர்வை, கதிரவனிலிருந்து வெளிப்படும், சேதம் விளைவிக்கும் புற ஊதாக் கதிர்களை மேலேயே வடிகட்டி விடுகிறது. சூரியன் இன்றி பூமி என்னும் கிரகத்தில் உயிர்களே வாழ முடியாது, உண்மைதான். ஆனால் கடவுளுடைய பட்சமான பராமரிப்பு நம்மை சூரியனின் அதிகப்படி சக்தியினின்றும் அதன் புற்றுநோய் ஏற்படுத்தும் விளைவுகளினின்றும் நம்மைப் பாதுகாக்கிறது.)

கடவுள் பூமியைச் சுற்றிக் கட்டி வைத்துள்ள புடவைத் துணி (Ozone Layer) பற்றி அறிவதில் என் சிறு நண்பர்கள் அதிக ஆர்வம் காட்டினர். அது பயங்கரமான சூட்டுக் காயங்களிலிருந்து நம்மை எப்படிக் காக்கிறது என்பதை நான் எளிய முறையில் விளக்க முயன்றேன். நான் சொன்னது எல்லாவற்றையும் அவர்கள் விளங்கிக் கொண்டார்களா என்பது எனக்குத் தெரியவில்லை, ஆனால் அவர்களது சிறு உள்ளங்கள் கடவுளின் அன்புக்கும் மகிமைக்கும் பட்சமாய்ச் செவி கொடுத்தன. நாங்கள் எல்லாரும் சேர்ந்து ஜெபித்த அந்த நேரம் வெகு அருமையாக இருந்தது. கடவுளைப் பார்க்க நாடிய போது, மோசேக்கு எந்த விதமான பாதுகாப்பு அருளப் பட்டதோ அதே பாதுகாப்பு தங்களுக்கும் கிடைத்திருக்கிறது என்பதை ஒரு தனிப்பட்ட விதத்தில் நன்றாகப் புரிந்து கொண்டனர் என்பது மட்டும் தெளிவானது.

தாம் எப்படிப் பட்டவர் என்பதை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகக் கடவுள் தமது பெயர்களை, நாமங்களை நமக்குக் கூறியுள்ளார்.

வேதாகமத்தில் பெயர்கள் மிக முக்கியமானவையாகக் கருதப் படுகின்றன. காரணம் அந்தப் பெயர்கள் தரும் பொருள்கள், அந்தப் பெயருள்ள நபரின் சில குணங்களை, பண்பு நலன்களைக் குறிப்பிட்டுக் காட்டுவதாக உள்ளன. கடவுளைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு நாமத்திற்கும் ஒரு சிறப்பான அர்த்தம் உண்டு, அவை ஒவ்வொன்றும் அவரது தெய்வீக நபரின் தன்னிகரற்ற ஒரு அம்சத்தை, ஒரு குணத்தை வெளிப்படுத்துவதாக உள்ளன.

பழைய ஏற்பாட்டில் தேவனைக் குறிக்க மூன்று முக்கிய நாமங்கள் பயன்படுத்தப் படுகின்றன: யாவே, ஏலோஹிம் மற்றும் அடோனாய். ஒவ்வொரு பெயருக்கும் ஒரு சிறப்பான முக்கியத்துவம் உண்டு. ஏலோஹிம் என்ற பெயரே முதன் முதலாகப் பயன்படுத்தப் படுகிறது. ஏறக்குறைய இரண்டாயிரம் தடவைகளுக்கு மேல் குறிப்பிடவும் படுகிறது. யாவே என்ற பெயரே அதிமுக்கியமானதாக இருந்தபோதிலும், ஏலோஹிம் என்ற தமது நாமத்தின் முக்கியத்துவத்தை நாம் கவனிக்கத் தவறக் கூடாது என்பது கடவுளின் எண்ணம். அந்த முக்கியத்துவம் என்னவாக இருக்கும்?

ஆங்கில மொழியில் (தமிழ் மொழியிலும் கூட) ஒன்றுக்கு மேற்பட்டவற்றைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது

நாம் பன்மையில் பேசுகிறோம். ஒன்றே ஒன்றைப் பற்றிப் பேசும் பொழுது ஒருமையைப் பயன்படுத்துகிறோம். ஆனால் எபிரேய மொழி இதைவிடவும் திட்டவட்டமாகக் கூறக் கூடியது. அது இரண்டைக் குறிக்கையில் இரட்டையையும், இரண்டுக்கும் மேற்பட்டதைக் குறிக்கையில் பன்மையையும் பயன்படுத்துகிறது. தேவனைக் குறிப்பதற்கு வேதாகமம் பயன்படுத்தும் முதல் பெயரில் இரட்டைக்கும் பன்மைக்கும் இடையேயுள்ள வேறுபாடு (இரண்டிற்கும், மூன்று அல்லது அதற்கு மேற்பட்டதற்கும்) மிக முக்கியத்துவம் வாய்ந்தது. "ஏலோஹிம்" பன்மையில் உள்ளது.

எனினும், வேதபுத்தகத்தில் கடவுளைப் பற்றிய மற்றொரு வாக்கியம் இப்படியும் கூறுகிறது.

நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் *(உபாகமம் 6:4)*. மனிதனுக்குக் கடவுள் தம்மைப் பற்றி வெளிப்படுத்திய வெளிப்பாடாகிய வேதாகமத்தின் முதல் வசனத்திலேயே மூவரில் ஒருவர் மற்றும் ஒருவரில் மூவரான கடவுளின் தத்துவத்திற்கு நாம் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறோம். *ஆதியிலே தேவன்* (ஏலோஹிம்) *வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். (ஆதியாகமம் 1:1)*. இந்த மூன்றில் ஒருமை சில வேளைகளில் திரித்துவம் என்று அழைக்கப்பட்டுள்ளது.

தேவனுடைய மூன்றில் ஒருமை பற்றிய இந்த முதலாவது குறிப்புக்குப் பிறகு, இன்னும் சில வாக்கியங்களை வாசித்த பின், தேவன் மனிதனைப் படைத்தது பற்றிய வரலாற்றைப் பார்க்கிறோம். இங்கே

தேவனுடைய மூன்றில் ஒருமை மிகத் திட்டவட்டமான விதத்தில் வலியுறுத்திக் கூறப்படுகிறது: பின்பு தேவன் சொன்னார்: ***நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக*** *(ஆதியாகமம் 1:26)* ஆங்கிலத்தில் 'Our' மற்றும் 'Us' என்பவை (தமிழில் 'நமது' மற்றும் 'உண்டாக்குவோமாக' என்பது) பன்மையைக் குறிக்கின்றன என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் அடுத்த வாக்கியமே இப்படியாகக் கூறுகிறது

***ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்*** *(ஆதியாகமம் 1:27)* 'சிருஷ்டித்தார்' என்பது ஒருமையைக் குறிப்பதை மீண்டும் காண்கிறோம். எனவே, 'ஒருவர்' மற்றும் 'ஒன்றுக்கு மேற்பட்டவர்' என்பவற்றைப் பார்க்கிறோம். ஆனால் அவை ஒவ்வொன்றும் தேவனையே குறிக்கின்றன என்றும் காண்கிறோம். இந்தத் தேவன் ஏற்கனவே 'ஏலோஹிம்' என்று அறிமுகம் செய்து வைக்கப் பட்டு விட்டார்.

இப்படிப்பட்ட ஒரு கடவுள் உலக ஞானத்தால் புரிந்து கொள்ளப் படுவதற்கு அப்பாற்பட்டவர். ஆகவே தான் தேவன், *தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும் படிக்குத் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியை* (1 கொரிந்தியர் 2:12) நமக்குத் தந்துள்ளார். தேவன் எப்படிப் பட்டவர் என்பதைக் காட்டும் இத்தகைய ஆரம்பக் குறிப்புகளில் தொடங்கி, அவர் தமது புரிந்து கொள்ள முடியாத புதிரான மூன்றில் ஒருமையையும் நித்திய மகிமையையும் மெல்ல மெல்ல

வெளிப்படுத்துகின்றார். தேவனுடைய இந்த மூவரில் ஒருவரான, ஒருவரில் மூவரான தன்மையைப் புரிந்து கொள்வதானது, உன் மீது உள்ள தேவனின் அன்பின் நீளத்தையும், அகலத்தையும், ஆழத்தையும், உயரத்தையும் ஓரளவிற்காவது நீ பின்னர் புரிந்து கொள்வதற்குப் பெருத்த உதவியாக இருக்கும்.

ஆம், தமது மாபெரும் அன்பை நாம் ஓரளவாவது அறிந்து கொள்ள உதவும் பொருட்டு, கடவுள் வேதாகமம் முழுவதிலும் தம்மைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப் படுத்திக் கொண்டே போகிறார். அங்கே நாம் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கு அறிமுகம் செய்து வைக்கப் படுகிறோம். எனினும் அவர் தம்மை ஒருவராக, என்றென்றுமான, ஒரே தேவனாக வெளிப்படுத்துகின்றார். இத்தகைய மாபெரும் தத்துவத்தின் ஓர் ஓரத்தைக் கூட நமது மனித மூளைகள் புரிந்து கொள்வது கடினம். மனிதன் மேலேறி, மெய்யான ஜீவனுள்ள தேவனை அறிந்து கொள்வது முடியாத காரியம் என்பதால், அவரே முதலடி எடுத்து வைத்து, தம்மை மனிதனுக்கு வெளிப்படுத்தினார்.

தேவனுடைய மகிமை மற்றும் பரிசுத்தத்தின் முழுமையான வெளிப்பாடு மோசேயின் கண்களுக்கு மறைக்கப் பட்டது. எனினும், குமாரனாகிய தேவன் என்ற நபரில், ஏலோஹிம் தம்மைப் பற்றி எவ்வளவுக்கு எவ்வளவு மனிதன் தாங்கிக் கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு வெளிப் படுத்தி விட்டார்.

எனவே புதிய ஏற்பாட்டில் இப்படியாக வாசிக்கிறோம்:

*இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன், இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டாக எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார் (2 கொரிந்தியர் 4:6).*

சற்றே எண்ணிப் பார்: யோவான், இயேசு கிறிஸ்துவின் முகத்தை உற்றுப் பார்த்தபொழுது, இப்படி உரைத்தார்: *அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது* (யோவான் 1:14).

பிறகு யோவான் தான் தனிப்பட்ட முறையில் தேவனைச் சந்தித்ததைப் பற்றி எழுதினார், ஏலோஹிமை அவர் இயேசு என்ற நபரில் கண்ட ஒரே காரணத்தினால், அப்படி தாம் கண்ட கதையைக் கூற அவர் உயிரோடு இருந்தார்! என்ற போதிலும், தாம் சந்தித்தது உண்மையில் நித்தியத்தின் தேவனையே, படைப்பின் தேவனையே, மோசேயின் தேவனையே என்பதையும் தெளிவு படுத்தினார்.

இந்தச் சந்திப்பு காதால் கேட்கக் கூடியதாக, கண்ணால் காணக் கூடியதாக, தொட்டு உணரக் கூடியதாக அமைந்தது:

*ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டது-மாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம் (1 யோவான் 1:1)*

யோவான் இங்கே எழுதி வைத்திருப்பது ஏதோ, வேறு யார் மூலமோ கேட்ட இறையியல் அல்ல; அது ஜீவனுள்ள தேவனுடன் அவரது சந்திப்பைப் பற்றிய அந்தரங்க சாட்சி.

"இவையெல்லாம் இன்று எனக்கு எப்படி உதவக் கூடும்?" என்று நீ ஒருவேளை கேட்கலாம் அந்தக் கேள்விக்கும் யோவான் பதிலளிக்கிறார். *உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம்* (1 யோவான் 1:4). அதைப் போலவே, நீங்களும் ஜீவனுள்ள தேவனைச் சந்திப்பதன் மூலம் உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்க வேண்டும் என்று ஒரு நண்பன் ஏங்குவதால் தான், இப்பொழுது இந்தப் புத்தகம் உங்கள் கரங்களில் இருக்கிறது.

யோவான் விளக்குகின்றார்:

*நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும் படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம். எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி*

*இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம் (1 யோவான் 1:3,4)*

ஆம், இருள் சூழ்ந்த ஓர் இரவில், வெளிச்சம் மிகக் கவர்ச்சிகரமாகத் தோன்றுவது போலவே, தேவனுடைய மகிமை என்னும் ஒளி இன்றும் மக்களைத் தன் பக்கமாக ஈர்க்கிறது. இன்று கடவுள் எப்படிப் பட்டவர் என்று அறிந்து கொள்ளும் உனது ஆவலில் நீயும் கூட மோசேயுடன் சேர்ந்து 'உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்' என்று ஜெபிக்கலாம்.

## சிந்தித்துப் பார்

1. கடவுளை நாடித் தேடுதலில் நீ வேதாகமத்தை கவனத்துடன் படித்துப் பார்த்ததுண்டா?

2. நீ வேதாகமத்தை வாசிக்கையில் கடவுள் தம்மை உனக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்பாயா?

   ஒரு மாதிரி ஜெபம்: "கடவுளே, இந்த அண்டசராசரத்தைப் படைத்தவரும், என்னை நேசிப்பவருமான கடவுள் நீரேயானால், உம்மை எனக்கு வெளிப்படுத்தியருளும். இயேசு கிறிஸ்துதான் உமது குமாரனாகிய வாக்களிக்கப் பட்ட மேசியாவா என்பதை எனக்குக் காண்பியும்!"

3. கடவுளை உண்மையாகவே நீ வணங்க வேண்டுமெனில், அவர் இப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதை உணருகின்றாயா?

   மனித ஆராய்ச்சியால் அவரைக் கண்டறியக் கூடிய உன் திறனுக்கு அப்பாற்பட்டவராக; உனது மனித மூளையின் ஆற்றலால் அவரை முழுமையாகப் புரிந்து கொள்ளக் கூடாதவராக, அவ்வளவு பெரியவராக இருக்க வேண்டும்.

மனித இயல்பைப் பற்றி நானும் ஓரளவு புரிந்து
வைத்திருக்கிறேன் என்று நினைக்கிறேன்,
ஒன்று சொல்கிறேன், பண்டைக் காலத்தின்
வரலாற்று நாயகர்கள் அத்தனைப் பேரும்
மனிதர்களே, நானும் ஒரு மனிதன் தான்; ஆனால்
இவரைப் போல வேறொருவர் இல்லை;
இயேசு கிறிஸ்து மனிதனுக்கும் மேற்பட்டவர்

நெப்போலியன்.

## அத்தியாயம் 4

# மக்களை உண்மையில் பிரிப்பது எது?

இன்றைய உலகம் ஓர் உலகளாவிய கிராமம் என்று வருணிக்கப் படுகிறது. என்றாலும், அதில் பகையுணர்வு கொண்ட அயலகத்தார் குடியிருப்பதால் இந்த உலகளாவிய கிராமம் வசிப்பதற்கு அபாயகரமான இடமாக மாறிக் கொண்டே வருகின்றது.

மேலோட்டமாகப் பார்க்கையில், மனுக்குலத்தைப் பிரிக்கின்ற பிரச்சினைகள் அரசியல் ரீதியானவை, பொருளாதார ரீதியானவை, குடும்ப ரீதியானவை, தொழில் ரீதியானவை எனப் பரந்து விரிந்து இருப்பது போல் காணப் படலாம். இவ்வகையான பிரச்சினைகள் மக்களைத் துண்டாடி வருவது உண்மை தான் என்றாலும், நமது உலகத்தில் இருக்கின்ற இந்தப் பிரிவினை உணர்வுக்கு இவற்றையெல்லாம் விடப் பெரிய, ஆனால் எளிதில் அறிய முடியாத ஒரு காரணம் உண்டு.

முதலாவது, நாம் மக்களிடையே உள்ள பிரிவினைகளுக்கு எளிதில் வெளிப்படையாகத் தெரிகின்ற காரணங்களைப் பார்த்து விட்டு, அதன் பிறகு உண்மையான முக்கியக் காரணத்தை ஆராய்வோம்.

## வெளிப்படையான பிரச்சினைகள்

அரசியல் ரீதியானவை: அரசியல் வாதிகள் பயத்தாலும் சந்தேகத்தாலும் நிறைந்து, ஒருவரையொருவர் தாக்கிக் கொள்கின்றனர். விட்டுக் கொடுத்து, ஒத்துப் போக முடியாமல் முரண்பட்ட கருத்துக்கள் உடையவர்களாக இருப்பதால் தங்கள் நாட்டின் எதிர்காலப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடியது இராணுவ வலிமையே என்று எண்ணுகின்றனர்.

இதற்கிடையே, நாட்டு நலன் மீது அக்கறை கொண்ட குடிமக்கள் சிலர் அமைதி மற்றும் அணு ஆயுதத் தடையை ஆதரித்துக் குரலெழுப்புகின்றனர். வேடிக்கை என்னவெனில் இந்த அமைதிப் பேரணிகளைத் தொலைக் காட்சி மூலம் நாம் பார்க்கின்ற போது, அமைதிப் பேரணி நடத்துவோர் யுத்தங்கள் நடைபெறக் காரணமாக அமையும் அதே வித வெறியினால் ஆட்கொள்ளப் பட்டு நடந்து கொள்வதைக் காணமுடிகிறது.

பொருளாதார ரீதியானவை: வறட்சி, பஞ்சம், பட்டினி, நில நடுக்கங்கள் ஆகிய இயற்கை நாசங்கள் பெரிதும் அதிகரித்து வருகின்றன, குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் இவை ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளன. பணக்கார மற்றும் ஏழை நாடுகளுக்கிடையே காணப்படும் பெரும் பொருளாதார ஏற்றத் தாழ்வு கொணரும் வேதனையை இவ்விதமான இயற்கைச் சேதங்கள் பெருக்கி விடுகின்றன. உதவி செய்ய முன்வரும் நல்ல மனம் படைத்தோர் ஆங்காங்கே தியாகத்துடன்

மனமுவந்து வழங்கினாலும் கூட, செல்வந்தன் செல்வந்தனாகிக் கொண்டே போகிறான், ஏழை இன்னும் பரம ஏழையாகின்றான் என்பது வேதனை தரும் உண்மையாகும்.

குடும்ப ரீதியானவை: திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கையின் சீரழிவு இன்று கொள்ளை நோய் போல் பரவிக் கொண்டிருக்கிறது என்பது யாவரும் அறிந்ததே. கண்களில் கண்ணீர் மல்க, லெட் சோலே என்னிடம், "என் வீடு உடைந்து விட்டது" என்றார். நான் அவரது நான்கு சுவர் கொண்ட ஆப்பிரிக்கக் குடிசையை யாரோ இடித்து விட்டார்களாக்கும் என்று எண்ணிக் கொண்டேன். ஆனால் விரைவிலேயே, லெட் சோலே உடைந்து போனது என்று உடைந்த உள்ளத்துடன் கூறியது தன் மனைவி தன்னை விட்டு விட்டுப் போய் விட்டதையே என்று உணர்ந்தேன். இன்று ஏராளமான வீடுகள் உடைக்கப் பட்டு வருகின்றன. தன்னலம் நிறைந்த வாழ்க்கை முறைகள் அன்பு நிறைந்த உறவுகளை அழித்துப் போடுகின்றன. (எனினும், நாம் பின்னர் ஒரு அத்தியாயத்தில் பார்க்க இருக்கின்ற வண்ணமாக, தங்கள் திருமணத்தை நிரந்தரமாக நிலைக்கச் செய்யும் விருப்பம் கொண்ட எந்தத் தம்பதியருக்கும் தேவனுடைய அன்பு கிட்டக் கூடியதாய் இருக்கிறது.)

தொழில் ரீதியானவை: பணி புரியும் இடங்களில் திருப்தியற்ற தன்மை, மன இறுக்கம் இவை பற்றிக் கேள்விப் படுவது பரவலாகி விட்டது. 1985 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருபதாம் நூற்றாண்டின் மிகக் கசப்பான தொழில் துறை மோதல் ஒன்று பிரிட்டனில்

முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. வேலை நிறுத்தமும், தெருக்களில் நடைபெற்ற வன்முறை மோதல்களும் முடிவுக்கு வந்தன என்றாலும், மனத் தாங்கல்களும் கசப்புணர்வுகளும் முதலாளி - தொழிலாளி உறவுகளிலும் தொழில் துறை சமுதாயம் முழுவதிலுமே ஆறாத வடுக்களாகி விட்டன. 1904 இல், இதே போன்ற ஒரு தொழிலாளர் கலவரம் வேல்ஸ் நாட்டு நிலக்கரிச் சுரங்கங்களில் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப் பட்ட போது முதலாளி-தொழிலாளி உறவுகளின் நிலைக்கும் இதற்கும் இடையே தான் எத்தனை வித்தியாசம். தமது அனுபவத்திலிருந்து ஜான் பாரி இந்தக் கதையை என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

நான் முதல் முறையாக ஜானைச் சந்தித்தபோது அவருக்கு 91 வயது. சுரங்கத் தொழிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார். முழுமையாகப் பார்வையை இழந்திருந்தார். சுரங்கத் தொழிலாளர் நோய் என்று அழைக்கப்படும் ஒரு வித நுரையீரல் நோயினால் நீண்ட காலமாக அவதிப் பட்டு வந்தார். எப்பொழுதெல்லாம் முடியுமோ அப்பொழுதெல்லாம் நானும் என் மனைவியும், வடக்கு வேல்ஸில் உள்ள இந்த ஏழ்மையான சுரங்கத் தொழிலாளியின் குடிசைக்குச் செல்வதுண்டு. உள்ளம் பொங்கும் உவகையுடனும், மனம் நிறைந்த சிரிப்புடனும் ஜான், 1904 மற்றும் 1905 இல் நடைபெற்ற எழுப்புதலின் போது தேவன் வல்லமையுடனும் பாவத்தைக் கண்டித்து உணர்த்தியும் அசைவாடியதைப் பற்றியெல்லாம் எங்களுக்கு விவரிப்பார். அந்தச் சமயத்தில் சுரங்கத் தொழிலாளர்களும், அவர்களது முதலாளிகளும் ஜீவனுள்ள தேவனைச் சந்தித்து

விட்டனர். அதன் நேரடி விளைவாக அவர்களுக்கிடையே ஓர் பிணைப்பும், பரஸ்பர நம்பிக்கையும், மரியாதையும் எழுந்தன. 1905க்கும் 1985க்கும் இடையே தான் எவ்வளவு பெரிய வேறுபாடு!

அந்த நாட்களைத் திரும்பிப் பார்த்து வருணித்த போது ஜான் கொண்ட ஆனந்தத்திற்கு அளவேயில்லை. மது அருந்த ஆள் இல்லாததால் ஏராளமான மதுபானக் கடைகள் நஷ்டமடைந்து மூடப்பட வேண்டியதாயிற்று என்று சொன்னார். சுரங்கத் தொழிலாளர்கள் வேலை செய்வதற்காகச் சுரங்கத்திற்குள் இறங்குகையில் ஒன்று சேர்ந்து தேவனைத் துதித்துப் பாடிக் கொண்டே சென்றதை நினைவு கூர்ந்தார். அந்த நாட்களைப் பற்றிய எண்ணவோட்டத்தில் மூழ்கியவராக, "மக்கள் இன்றும் என்னிடம் வந்து அந்த எழுப்புதல் எங்கே என்று கேட்கின்றனர்" என்றார். அதற்கு அவர் மார்தட்டிக் கொண்டு "அது இதற்குக் கீழே இருக்கிறது, இப்பொழுதே இருக்கிறது" என்று கூறுவாராம்.

## உண்மையான பிரிவினை

எவ்வளவு தான் ஆழமானவையாக இந்தப் பிரிவினைகள் இருந்தாலும், இவற்றை விடத் திடுக்கிடச் செய்யும் விதத்திலும் நிரந்தரமாகவும் மனுக்குலத்தைப் பிரிக்கக் கூடியதொன்று இருக்கிறது. பல நாடுகளின் அமைதியைக் குலைத்துப் போட்டுப் போவதாக இன்று அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஓர் அபாயம் அது. மக்களை முடிவாகப் பிரிப்பது, கடவுளைப் பற்றித் தவறாகப் புரிந்து கொள்ளுதல் ஆகும்!

தம்மை மனுக்குலத்திற்கு வெளிப்படுத்துவதில், கடவுள் தமது தெய்வீகத் தன்மை பற்றிய சத்தியத்தை ஒரு நாளும் விட்டுக் கொடுக்கவில்லை. இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு முன்பாக, தாம் உண்மையில் இருக்கிற வண்ணமாகவே மக்கள் தம்மை அறிந்து கொள்ள உதவும் பொருட்டு ஒரு பெரிய வெளிச்சத்தை அனுப்பப் போவதாக வாக்குப் பண்ணினார். அவர் சொன்னார் *இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் (ஏசாயா 9:2)* இந்த ஒளியை அடையாளம் கண்டு கொள்வது எப்படி என்ற விபரங்களையும் கடவுள் தந்தார்: *நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப் பட்டார் (ஏசாயா 9:6)*

கடவுள் ஒரு குழந்தை பிறக்கப் போகிறது என்று மட்டும் சொல்லியிருந்தால் அதில் எந்த முக்கியத்துவமும் இருந்திருக்காது. குழந்தைகள் தாம் எப்பொழுதும் பிறந்து கொண்டே இருக்கின்றனரே! ஒரு குழந்தை பிறக்கப் போகிறது என்ற உண்மை, ஒரு குமாரன் கொடுக்கப் படுவார் என்ற வாக்குத் தத்தத்துடன் இணைக்கப் பட்டிருக்கவில்லை என்றால், அந்தக் குழந்தையின் பிறப்பைப் பற்றி எழுதவே அவசியம் இருந்திருக்காதே. ஆனால் இப்பொழுதோ, ஒரு நாள் தீர்க்கதரிசனமாக இருந்தது இன்று வரலாறாகி விட்டது. ஏனெனில் எது நடக்கும் என்று கடவுள் சொன்னாரோ அது அப்படியே நடந்து விட்டது. பூமியிலே ஒரு பாலகன் பிறந்தார். பரலோகில் இருந்து ஒரு குமாரன் கொடுக்கப் பட்டார். குமாரன் என்ற பரிசான குழந்தையின் பிறப்பின் மூலமாக, இருளில் தடவி அலைந்து கொண்டிருந்த மக்களுக்குக் கடவுள் ஒளியை அனுப்பினார். கடவுளை நமது

கண்களுக்கு மறைக்கக் கூடிய காரிருளையும், சந்தேகத்தையும் அந்த ஒளியானது இந்த நாள் வரை விரட்டியடித்து வருகின்றது.

கடவுளுடைய ஒப்புயர்வற்ற குழந்தையின் பிறப்பை, பிற குழந்தைகளின் பிறப்பிலிருந்து வேறுபிரித்து காட்டுவதற்காக, கடவுள் தமது குமாரனின் பிறப்புக்கு ஓர் அதிசயமான 'அடையாளம்' தரப் போவதாகவும் வாக்களித்திருந்தார் *இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் (ஏசாயா 7:14)*

இம்மானுவேல் என்ற அவரது நாமமே, "கடவுள் நம்முடன் இருக்கிறார்" என்று பொருள் படும் என்பது எத்தனை அருமையானது! அந்த நாமத்தின் அர்த்தத்தின் மூலமாக, வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள இந்த நற்செய்தியானது எவ்வளவு மேன்மையானது, பிற மதங்களின் போதனைகளிலிருந்து வெகுவாக மாறுபட்டது என்பதை அறிந்து பாராட்ட முடியும். போலி மார்க்கங்கள் எல்லாம் மனிதன் கடவுளை எட்டுவது எப்படி என்பதைக் காட்ட முயற்சிக்கையில், வேதமோ கடவுள் மனிதனை எட்ட எப்படி இறங்கி வருகிறார் என்பதன் வரலாறாக அமைகின்றது.

வேதத்தில் உரைக்கப் பட்டுள்ள வண்ணமாக கடவுள், எதிரி வசமுள்ள பூமி என்னும் கிரகத்தில் தமது முதலாவது தாக்கு முனையை நிறுவிய போது ஒரு கன்னிகை கர்ப்பவதியானாள். அந்த நாளிலே அண்ட சராசரத்தைப் படைத்த சிருஷ்டிகர், காலம் மற்றும்

இடத்தின் பங்காக மாறத் தம்மைத் தாழ்த்தி இறங்கினார் என்பது இன்று சரித்திரமாகி விட்ட விஷயம்: *கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: "தாவீதின் குமாரனாகிய யோசேப்பே உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது" என்றான். (மத்தேயு 1:20).* பின்னர், இயேசு பிறந்து, முழு மனிதனாக வளர்ச்சியடைந்த பிறகு, தமது எதிர்ப்பாளர்களின் முன்னிலையில், *நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்று கூறி (யோவான் 10:30)* தமது தெய்வீகத்தை நிலை நாட்டினார்.

அப்பொல்லோ XV இன விண்வெளி வீரரான ஜிம் இர்வின் "மனிதன் நிலவில் நடப்பதைக் காட்டிலும் கடவுள் பூமியில் நடப்பது அதிக முக்கியமானது" என்று எழுதினார். மனிதன் விண்வெளியில் சாதித்துள்ள எந்த சாதனையையும், கடவுள் நித்தியத்தை விட்டுக் காலத்திற்குள் காலடி எடுத்து வைத்த அந்த வேளையின் அற்புதத்துடன் ஒப்பிடக் கூட முடியாது என்பது நிச்சயம்.

ஒரு பாலகன் பிறப்பான், ஒரு குமாரன் கொடுக்கப்படுவார் என்றெல்லாம் தீர்க்கதரிசனம் உரைக்கப் பட்டபின், அந்த அபூர்வ புருஷனைப் பற்றி இன்னும் விரிவான தீர்க்கதரிசன 'சுருக்கத்தை' வழங்குகின்றது: "*அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப் படும். ...... அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும் அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை" (ஏசாயா 9:6,7)*

ஒருவர் வெற்றிகரமான உலக அதிபதியாக ஆகப் போகிறார் என்றால், இவ்வளவு பயங்கரமான வல்லமையும் நோக்கமும் அவரிடம் ஒருசேர அமைந்திருப்பது நல்லது தானே! இன்றைய உலகிலும் கூட, நாம் நல்லதைச் செய்ய அறிந்த தலைவர்களை மட்டுமல்ல, அந்த நல்லதைச் செய்யத் திறனும் உள்ள தலைவர்களையே தேடிக் கொண்டிருக்கிறோம். சில தலைவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்திருக்கலாம், ஆனால் வரலாற்றில் எந்தத் தலைவருமே நிலையான, மாறாத அமைதியை உருவாக்கக் கூடிய ஆற்றலும், ஞானமும் ஒருசேர அமைந்தவர்களாக இருந்ததில்லை.

சமாதானப் பிரபுவோ இந்த உலகிற்கு நிலையான நிரந்தரமான அமைதியைக் கொடுக்கக் கூடிய அறிவும், ஆற்றலும் ஒரு சேரக் கொண்டவர். ஒரு நாள் இபேக பூமி என்ற இந்தக் கோளின் மீது ஆட்சி புரியத் திரும்ப வருவார். அந்த நாள் விடியும் பொழுது, சகல ஆயுதத் தொழிற் சாலைகளும் மூடப் பட்டுப் போகும், அதுவரை வெடிக்காத அத்தனை அணுகுண்டுகளும் திறனிழந்து போகும், எல்லை காக்கும் காவலர்களும் போர்வீரர்களும் ஒரேயடியாகத் தத்தம் வீடுகளுக்குத் திருப்பி அனுப்பப் படுவார்கள்!

மனுக்குலத்தை ஆளுவதற்குத் தான் சற்றும் இலாயக்கற்றவன் என்பதை மனிதன் ஏற்கனவே வெளிப் படுத்தி விட்டான். உலகப் போரசின் செங்கோலை சமாதானப் பிரபு பிடிக்கும் வரை, தற்போதைக்கு அனைவருக்கும் நீதி, சமாதானம் என்பது காத்திருக்கவே வேண்டும்! அந்த நாள் வரும் பொழுது, அவர்கள் தங்கள்

பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்: ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை (ஏசாயா 2:4) சமாதானத்தின் அந்த நாளிலே: சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் (ஆபகூக் 2:14). நித்தியத்தின் கடவுளுக்குத் திருப்தி அளிக்கக் கூடிய வேறெந்த முடிவும் வரலாற்றுக்கு இருக்க முடியாது.

ஆண்டவராகிய இயேசுவின் ஆட்சியின் கீழ் உலகம் அனைத்தும் அமைதி நிலைபெறும் அந்த நாள் வருமுன்னே, மக்களிடையே உள்ள ஆழமான, உண்மையான பிரிவினை தெளிவாகப் புலனாகும். வரப் போகும் யுத்தம் இயேசு கிறிஸ்து என்ற நபரை மையமாகக் கொண்டு நடைபெறும். எனவே அவர் யார், அவர் ஏன் வந்தார், அவர் இங்கே இருந்தபொழுது உனக்காக என்ன செய்தார் என்பதையெல்லாம் குறித்த நிச்சயம் உடையவனாக நீ இருக்க வேண்டியது மிக மிக அவசியம்.

ஆதியாகமமும், யோவான் சுவிசேஷமும் ஒன்று போல் தொடங்குகின்றன. ஆதியாகமத்தில் "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்று வாசிக்கிறோம் (ஆதியாகமம் 1:1). யோவான் சுவிசேஷத்தில், "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனாய் இருந்தது ..... சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று" (யோவான் 1:1,3) என்று வாசிக்கிறோம். ஆதியாகமத்தில் ஏலோஹிம் என்று அழைக்கப்படும்

கடவுள், யோவான் சுவிசேஷத்தில் "வார்த்தை" என்று குறிப்பிடப் படுகிறார். ஏலோஹிம் தாம் வார்த்தை ஆவார், அவர் தமது சிருஷ்டியின் மத்தியில் நடக்க தம்மைத் தாமே சரீரத்தினால் மூடிக் கொண்டார். வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்; இந்தப் பயங்கரமும் மகத்துவமுமான கூற்று அடங்கியுள்ள முழுப் பகுதியும் என்ன கூறுகிறது:

> *ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை தேவனாய் இருந்தது. அவர் ஆதியிலே தேவனோடு இருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலே அல்லாமல் உண்டாகவில்லை ...... அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகள் ஆகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்..... அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. (யோவான் 1:1-3,10-12,14).*

அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னர் மோசேயைப் போல, எல்லாக் காலங்களிலும் இருந்த மக்களைப் போல, சீஷனாகிய பிலிப்புவும் கடவுள் எப்படிப்பட்டவர் என்று பார்க்க ஆவல் கொண்டான்.

இயேசுவிடம் பிலிப்பு ஒரு சிறப்பான வேண்டுகோள் விடுத்தான்: *ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும் (யோவான் 14:8).* வியப்பளிக்கும் விதமாக, இயேசு *என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்* (யோவான் 14:9) என்று பதிலளித்தார். இயேசு மட்டும் தேவனாகவே இல்லை என்றால், இத்தகைய திகைப்பூட்டும் பதில் ஒன்று அவரை முட்டாளாகக் காட்ட வேண்டும், அல்லது ஏமாற்றுக் காரனாகக் காட்ட வேண்டும். அவர் முட்டாள் என்றோ, எத்தன் என்றோ யாரும் குற்றம் சாட்டுவதற்கில்லை. அவர் மட்டும் கடவுளாக இல்லையெனில் இந்த உலகத்திலே அவரைப் போல ஆள்மாறாட்டக் காரன் யாரும் இருக்கவோ, இருந்திருக்கவோ முடியாது. எனவே, இயேசுவை நாம் பார்க்கையில் கடவுளையே காண்கிறோம் என்பதை நாம் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்.

இந்த விஷயத்தில் தான் - அதாவது இயேசு யார் என்று அறிக்கை செய்வதில் - மக்கள் இரு பிரிவாகப் பிரிகின்றனர். ஒரு விதத்தில் பார்க்கப் போனால் *நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் (யோவான் 10:30)* என்று இயேசு சொன்னபொழுது, தேவனை நாடித் தேடிய சிலர் அவரில் தங்கள் பதிலைக் கண்டு கொண்டனர். எனினும், கடவுள் இவ்வளவு தாழ்ம் தம்மைத் தாழ்த்துவது என்ற சாத்தியக் கூற்றை எண்ணிக்

கூடப் பார்க்க முடியாத மற்றவர்களோ மிகுந்த வெறுப்புணர்ச்சியைக் காட்டினர். இயேசு சிலரைக் கவர்ந்தார்; பிறரையோ அந்நியர்களாக்கி விட்டார்; அவரைப் பின்பற்றிய சிலர் இருந்தபோதிலும், அவரைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டியவர்களும் இருக்கவே செய்தனர்.

தமது வாழ்நாளிலும் கூட இயேசு மக்களைப் பிரித்து விட்டார். அவர் தெளிவாகச் சொன்னார்:

*என்னோடே இராதவன் எனக்கு விரோதியாய் இருக்கிறான்* (மத்தேயு 12:30)

**ஆனாலும், முதல் பதிலே முடிவான மறுமொழியாக இருக்க வேண்டிய அவசியமில்லை.**

முதலில் இயேசுவுக்கு எதிராக இருந்து பின்னர் அவரைப் பின்பற்றுபவனாக மாறின ஒரு மனிதனைப் பற்றி நாம் பார்ப்போம். தனது ஆரம்ப நாட்களில் சவுல், ஒரு யூத ரபியாக இருந்தவர். இயேசுவைப் பின்பற்றியவர்களை மிகவும் வெறுத்தார். அவர்களை உபத்திரவப்படுத்தினார், அவர்களைக் கொலை செய்யவும் கூடச் சம்மதித்திருந்தார். ஆனால், தான் மனம் திரும்பிய பிறகு, தனது மீதியான நாட்களை இயேசுவைத் தன் ஆண்டவராகவும், கர்த்தராகவும் கனம் பண்ணுவதிலேயே செலவிட்டார். பிற்காலத்தில், தான் கிறிஸ்துவுக்கு விசுவாசமுள்ளவராக இருந்ததன் காரணமாக மிகுந்த பாடுகளைச் சந்தோஷத்துடன் சகித்தார். இந்த மாற்றத்திற்குக் காரணம் என்ன?

சவுல் தமஸ்கு பட்டணத்திற்குப் பயணமாகப் போகையில் ஒரு 'பேரொளி'யைக் கண்டார். அவரைத் தற்காலிகமாகக் குருடாக்கி விடுமளவிற்கு அந்த ஒளி

அவ்வளவு பிரகாசமாக இருந்தது. என்றாலும், தான் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கிறோம் என்பதைச் சவுல் தமது உள்ளுணர்வில் உணர முடிந்தது.

யாவே என்பதன் கிரேக்கப் பதத்தைப் பயன்படுத்தி, அவர் கேட்டார்: *ஆண்டவரே நீர் யார்?* கடவுள் சொன்னார்: *நீ துன்பப் படுத்துகிற இயேசு நானே (அப்போஸ்தலர் 9:5).* அந்த நாளிலேயே சவுல் யாவேயும் இயேசுவும் ஒன்று எனபதை அறிந்து கொண்டார்.

இந்த வெளிப்படுத்தல் சவுலை இயேசுவின் பகைவன் என்பதிலிருந்து அப்போஸ்தலனாகிய பவுல் என்பவராக மாற்றியது. அந்த நாளிலிருந்து அவர் தமது வாழ்வை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கென்று முற்றிலும் அர்ப்பணம் செய்து விட்டார். தனது விசுவாசத்தின் நிமித்தமாக அவர் வெகு பாடு பட்ட போதிலும், தமது மீதியான வாழ்நாளை, கடவுள் பூமி என்ற கோளுக்கு வந்து விட்டார் என்ற நற்செய்தியைப் பறைசாற்றுவதில் செலவிட்டார். பவுலின் வாழ்க்கையில் தத்ரூபமாக இருந்த இயேசு கிறிஸ்து, அவரைக் காலாகாலங்களுக்கும் மிகச் சிறந்த மிஷனெரியாக மாற்றம் பெறச் செய்தார். சகலமும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாகவும், அவருக்காகவுமே சிருஷ்டிக்கப் பட்டன *(கொலோசெயர் 1:16)* என்ற அவரது திடமான நம்பிக்கை அவரது நிருபங்கள் அனைத்திலும் தொனிக்கின்றது.

நாம் ஏற்கனவே பார்த்த படி, வேதபுத்தகமானது நாசரேத்தூர் இயேசு தேவனுடைய குமாரன் என்று திட்டவட்டமாக உரைக்கின்றது. மார்மான் மார்க்கத்தாரோ, யேகோவாவின் சாட்சிகளோ அல்லது

மற்றும் பலரோ விசுவாசிப்பது போல அவர் தேவனுடைய குமாரர்களில் ஒருவர் அல்லர். இஸ்லாமிய மதம் போதிப்பது போல அவர் தீர்க்கதரிசிகளில் ஒருவரும் அல்லர். இப்படிப்பட்ட பல குழுக்களின் போலியான போதனைகளுக்கு இடம் கொடுக்கும் முயற்சியில் அநேகர், கடவுள் தம்மைக் குறித்துக் கொடுத்துள்ள வெளிப்படுத்தலை அசட்டை செய்து விடுகின்றனர். இது 'சர்வ சமய ஒருமைப்பாடு' என்று அழைக்கப் படுகிறது. ஆங்கிலத்தில் 'Syncretism' என்ற இந்தச் சொல்லுக்கு வெப்ஸ்டர் ஆங்கிலச் சொல்லகராதி தரும் பொருள் "வேறுபட்ட சமயக் கருத்துகளை ஒன்று படுத்தும் முயற்சி" என்பதாகும்.

உதாரணமாக, இந்து மதத்தவர் 'இயேசு'வை ஏற்றுக் கொள்வதாகச் சொல்லி, தங்கள் அலமாரியில் உள்ள ஏராளமான தெய்வங்களுடன் அவரையும் ஒருவராகச் சேர்த்துக் கொள்கின்றனர். எலியாவின் தேவனான, மெய்யான, ஜீவனுள்ள தேவன் பாகாலின் தெய்வங்களை எதிர் கொண்ட பொழுது அவர்களைத் தமக்கு முன்பாக முகங்குப்புற விழச் செய்தார் என்பதை நினைவு படுத்திக் கொள்வது நமக்கு நலமாயிருக்கும். அதே விதமாக மனிதன் உருவாக்கிய, மனிதன் ஏற்படுத்திய எந்தத் தெய்வமும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக முகங்கவிழ்ந்து விழ வேண்டும். காரணம், அவர் தேவனாகிய சுதன், நித்தியா நித்தியமாக பிதாவோடும், பரிசுத்த ஆவியானவரோடும் ஒன்றாய் இருப்பவர்.

இயேசு கிறிஸ்துவே கடவுள் என்று ஒருமுறை மட்டும் நாம் புரிந்து கொண்டு விட்டோமானால், அவரது கன்னிப் பிறப்பையோ, அவரது ஏராளமான

அற்புதங்களையோ, அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலையோ, அவரது பரமேறுதலையோ, மகிமையோடும் வல்லமையோடும் இப்பூமிக்கு அவர் திரும்ப வருவதையோ நம்புவது நமக்குக் கடினமாய் இருக்காது. இயேசு கிறிஸ்து "கடவுளே" ஆனதால், அண்ட சராசரத்தையும், அதன் விதிகளையும் அதன் ஜீவாதாரங்களையும் படைத்தவர் ஆனதால், தமது அன்பின், மீட்பின் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு, தாமே ஏற்படுத்திய நியமங்களை எல்லாம் கடந்து செயலாற்றக் கூடியவர்.

உலகமே, நாசரேத்தூர் இயேசுவின் நிமித்தமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒருவருக்கொருவர் அந்நியராகப் போய் விட்ட இந்த இரண்டு பிரிவுகளும், 'இருப்போர்,' 'இல்லாதோர்' என்றோ அரசியல் வலிமை மிக்கவர்கள், அரசியல் வலிமை குன்றியவர்கள் என்றோ, பல்வேறு கொள்கைகள் கொண்ட நாடுகள் என்றோ பிரிக்கப் படவில்லை. உலகில் காணப்படும் உண்மையான பிரிவினை, கடவுள் இவ்வுலகிற்கு வந்தபோது ஏற்பட்ட அந்தப் பிரிவினை மனுக்குலத்தைப் பிரிக்கின்ற வேறெந்த விஷயங்களையும் விட மிக மிக அடிப்படையானது.

இந்தத் திட்டவட்டமான கூற்று, உண்மைகளை அளவுக்கு மீறி மிகைப் படுத்திக் காட்டுவதல்ல, ஏனெனில் ஆண்டவராகிய இயேசு தாமே சொன்னார்:

*தேவன் உங்கள் பிதாவாய் இருந்தால் என்னிடத்தில் அன்பாய் இருப்பீர்கள்; ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்; நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார். என்*

*வசனத்தை நீங்கள் ஏன் அறியாமல் இருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா? நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின் படி செய்ய மனதாய் இருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலை பாதகனாய் இருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில் இல்லாத படியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாய் இருக்கிற படியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் (யோவான் 8:42-44)*

கடவுளைத் தங்கள் தகப்பனாகக் கொண்ட விசுவாசிகளின் குடும்பம் ஒன்று இருப்பதைப் போலவே பிசாசைத் தங்கள் தகப்பனாகக் கொண்ட அவிசுவாசிகளின் குடும்பம் ஒன்றும் இருக்கிறது என்பதைக் கேட்க வியப்பாய் இருக்கிறதா? எல்லாருமே தேவனுடைய பிள்ளைகள் அல்லர். கடவுளுடைய குடும்பத்தில் இருப்பது அல்லது சாத்தானுடைய குடும்பத்தில் இருப்பது இவையே எனக்கும் உனக்கும் முன்பாக நித்தியமாக உள்ள வழிகள். இந்த இரண்டில் ஒன்று தவிர வேறு வழியில்லை.

கடவுளைப் பற்றிய உனது நம்பிக்கை எவ்வளவு தான் உண்மையானதாக இருந்தாலும், அது 'உண்மையாகவே' தவறானதாகவும் இருக்கலாம். ஒரு நபர்

எதை நம்புகிறான் என்பது முக்கியமல்ல. அவன் அதை உண்மையாக நம்புகிறானா என்பது தான் முக்கியம் என்று கூறப்படுவது பொய்யாகும். அதே விதமாக, நீ உண்மையாகவே மருந்து என்று நம்பிக் கொண்டு விஷத்தை அருந்தலாம், என்றாலும் நீ மரணமடைவாயே!

மெய்யாகவே, மனுக்குலமானது இரண்டு குடும்பங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. ஒன்று கடவுளுடைய குடும்பம், மற்றது பிசாசின் குடும்பம். ஒவ்வொரு நபரும் இந்த இரண்டு குடும்பங்களில் ஏதாவது ஒன்றைச் சேர்ந்தவனாகவே இருக்கிறான். நீ எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதை நீ அறிந்திருக்க வேண்டியது மிக அவசியம். கடவுளுடைய குடும்பத்தில் அங்கமாக வேண்டும் என்றால் அதற்கு முதலடி, கடவுள் யார், தமது குமாரனாகிய இயேசுவை நமக்குக் கொடுத்ததில் அவர் செய்துள்ளது என்ன என்பதைப் புரிந்து கொள்ளுதல் ஆகும்.

இயேசு என்ற பெயரின் பொருள் 'யாவே இரட்சிப்பு ஆனவர்' என்பது. எனவே தேவதூதன் யோசேப்பிடம் ..... *அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான் (மத்தேயு 1:21).*

## சிந்தித்துப் பார்

1. நீ கடவுளைப் பற்றி உண்மையாக நம்பினால் போதும், அவரைப் பற்றி என்ன நம்புகிறாய் என்பது முக்கியம் தானா?

2. மக்கள் மத்தியில் காணப்படும் பிரிவினைக்கு முடிவான காரணம் என்ன? அரசியல் காரணமா, பொருளாதாரக் காரணமா, குடும்பக் காரணமா, அல்லது தொழில் காரணமா? அல்லது அது ஆவிக்குரிய, நித்திய காரணமா?

3. ஆண்டவராகிய இயேசு விவரித்த இரண்டு குடும்பங்களில் நீ எதைச் சேர்ந்தவனாக இருக்க விரும்புகிறாய்?

வேறு எதையும் விட, தீமையைப் பற்றிய ஆழமான உணர்வில் (விழிப்புணர்வில்) தான் தேவனை அறிகின்ற இரட்சிப்பின் அறிவு நிலைத்திருக்கிறது.

டாக்டர். அர்னால்ட்
(தலைமை ஆசிரியர், ரக்பி பப்ளிக் பள்ளி)

அத்தியாயம் 5

# உண்மையான பிரச்சினை என்ன?

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல மக்கள் இந்த உலகத்தின் எதிர்காலம் குறித்துப் பிரகாசமான நம்பிக்கை கொண்டிருந்தனர். உலகமானது அமைதியும் வளமும் கொழிக்கும் ஒரு பொற்காலத்திற்குள் அடியெடுத்து வைக்கவிருக்கின்றது என்று நம்பினர். இந்தப் புதிய யுகத்தின் ஆசீர்வாதங்களை ஒவ்வொரு நாட்டிலும் — வேதனையும், வியாதியும், கடும் வறுமையும் சொல்லொணாத் துயரங்களை விளைவித்து விட்ட நாடுகளிலும் கூடக் காணலாம் என்று அநேகர் எண்ணினர். ஆனால் 1914 ஆம் ஆண்டிலோ ஐரோப்பா எங்கிலும் போர்ச் சங்குகள் முழங்க ஆரம்பித்தன.

இந்த நூற்றாண்டில் நம்புவதற்கரிதான எத்தனையோ அறிவியல் சாதனைகளை நாம் கண்ணால் கண்டுள்ள போதிலும், இப்பொழுதெல்லாம் மனிதர்கள் ஒளிமயமான நாளையத் தினத்தைப் பற்றிப் பேசுவதில்லை. மாறாக, உலகைப் பூண்டோடு அழித்து விடும் ஆற்றலுள்ள அணு ஆயுதக் கிடங்குகளைப் பற்றி இலட்சோபலட்சம் பேர் கவலை கொள்கின்றனர். சிக்கல் நிறைந்த சர்வதேசப் பிரச்சினைகளும், தேசியப் பிரச்சினைகளும் சிந்தனைத் திறன் படைத்த பார்வையாளர்களை, நாம் மனித இனத்தின்

வரலாற்றிலேயே மிக இக்கட்டான, அபாயகரமான காலகட்டத்தில் வாழ்ந்து வருகின்றோம் என்ற முடிவுக்கு வரச் செய்துள்ளன. இன்றைய உலகில் மக்கள் இருவேறு துருவங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளனர் என்பதை ஏற்கனவே கவனித்தோம். நாகரிக சமுதாயத்தின் இழையே தாக்குதலுக்குள்ளாகி உள்ளது. எங்கே கோளாறு?

இந்தக் கேள்விக்கு விடை காணும் முயற்சியாக புகழ்பெற்ற உலகத் தலைவர்கள் சந்தித்துப் பேசுகின்றனர். அவர்கள் அங்கே உட்கார்ந்து பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து, ஒருவர் மற்றவரின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டுக் கொண்டிருக்க, இருக்க உலகமோ ஒரு இக்கட்டிலிருந்து மறு இக்கட்டிற்கு நகர்ந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு தான் சக்தியும் பணமும் முதலீடு செய்யப் பட்ட போதிலும், உலகம் சென்று கொண்டிருக்கும் திசையை மாற்றும் ஆற்றல் எவருக்குமே இருப்பதாகத் தெரியவில்லை. புகழ்பெற்ற இராஜதந்திரிகளும் அரசியல் வாதிகளும், புத்திக் கூர்மை மிக்க விஞ்ஞானிகளும் மேதைகளும், அறிவாற்றல் மிக்க வர்த்தகர்களும், உலக வங்கியாளர்களும், மரியாதைக்குரிய மருத்துவர்களும் சமூகவியல் அறிஞர்களும் தங்கள் தங்கள் துறையில் தங்கள் ஆற்றலையும் அறிவுத் திறனையும் கொடுக்கின்றனர். என்றாலும், இன்னும் விடை கிடைத்த பாடில்லை.

மெத்தப் படித்த இந்த மனிதர்களிடமிருந்து, மனிதனுடைய உண்மையான பிரச்சினை இன்னது என்று கடவுள் கூறுகிறாரோ அதைப் பற்றி ஒரு

வார்த்தையாகிலும் வெளி வருவதில்லை - ஒரு தீர்வு காணப்படுமுன் கண்டு பிடிக்கப் பட வேண்டிய அடிப்படையான பிரச்சினை அதுவே, கடவுள் ஒருவர் மட்டுமே நமது உண்மையான பிரச்சினையை நமக்குத் தெரியக் காட்ட முடியும். இந்த இடத்தில் தான் பொதுவாக நாம், கடவுளை உண்மையாகவே நாடித் தேடுபவர்களுக்கும் வெறுமனே மதரீதியான ஆர்வம் கொண்டுள்ளவர்களுக்கும் இடையேயான வேறுபாட்டை உணருகின்றோம்.

தேவன் சொன்னார்: *நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக (ஆதியாகமம் 1:26).* "எந்த விதத்தில் மனிதன் தேவனுடைய சாயலில் உருவாக்கப் பட்டான்?" என்று நீ கேட்கலாம். நிச்சயமாக சரீரத் தோற்றத்தின் படி அல்ல, ஏனெனில் ஆண்டவராகிய இயேசு சொன்னார்: *தேவன் ஆவியாய் இருக்கிறார் (யோவான் 4:24).* நமக்கு இருப்பது போன்ற கால்களும், கைகளும், கண்களும் கடவுளுக்கு இல்லை. கடவுள் *சேரக் கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாய் இருக்கிறவர் (1 தீமோத்தேயு 6:16).* கண்ணுக்குப் புலனாகாத மனிதன் என்று ஒருவன் ஒருபோதும் இருந்ததில்லை. எனவே மனிதர்களுக்கு, அவர்கள் வசிக்கின்ற சரீரங்களை விட மதிப்பு மிக்க ஏதோ ஒன்று இருந்தாக வேண்டும்! அந்த உண்மையான நபர், சரீரம் மரித்த பிறகும் தொடர்ந்து வாழ்கின்றான். இந்த நபர் தான் தேவனுடைய சாயலில் உருவாக்கப் பட்டவன்.

தேவனுக்கு ஒரு மனதும், உணர்ச்சிகளும் ஒரு சித்தமும் உண்டு என்று வேதாகமம் வெளிப்படுத்துகிறது. இந்த மூன்று பகுதிகளிலும் தான் மனிதன் தேவ சாயலில் படைக்கப்பட்டான். அவர் கடவுளாக இருப்பதினாலே, அவரது அறிவு, உணர்வுகள் மற்றும் சித்தம் ஆகியவை அளவு கடந்தவை; அதாவது, அவற்றுக்கு ஓர் எல்லையே கிடையாது. அது அவருடைய தன்மை, இயல்பு. ஆனால், அதற்கு மாறாக, மனிதன் வரையறைக்குட் பட்டவன். புத்திக் கூர்மை மிக்க ஐன்ஸ்டீனுக்கும் கூட ஓர் எல்லைக்குட்பட்ட மூளை தான் இருந்தது. எல்லாம் அறிந்த மனிதர் யாரும் கிடையாது, அளவே இல்லாமல் அன்பு செலுத்தக் கூடிய மனிதர் யாரும் இல்லை, மனிதனுடைய சித்தம் இந்த அண்ட சராசரத்தில் நிச்சயமாக நிறைவேறப் போவதில்லை. அவன் தன் தலைவிதியைத் தானே நிர்ணயித்துக் கொள்ள முடியாது. தன் தலையெழுத்தைத் தானே மாற்றிக் கொள்ளவும் முடியாது.

ஆனால் மனிதனுடைய ஆன்தத்துவத்தில், கடவுளை அறிந்து கொள்ளவும், அவரோடு உறவு கொள்ளவும் தக்கதாக ஆவிக்குரிய திறன் ஒன்று உண்டு. ஆகவே தான் வேதாகமம், மனிதன் *ஆவியாகவும், ஆத்மாவாகவும், சரீரமாகவும் இருக்கிறான் என்று தெளிவாய்க் கூறுகிறது (1 தெசலோனிக்கேயர் 5:23)*

தனது ஆவியின் மூலமாக, மனிதன் தன் பெருஷ்டிகருடன் நெருக்கமான உறவு கொள்ளக் கூடிய கடவுளால் - அருளப்பட்ட - ஆற்றலைப் பெற்றுள்ளான். அவனது சரீரத்தின் மூலமாக மனிதனுடைய

ஆன்மத்துவமானது (அல்லது ஆத்துமா அதாவது, சிந்திக்கும், தீர்மானிக்கும், அன்பு செலுத்தும் அவனது திறன்) பொருள் (லௌகீக) உலகோடு தொடர்பு கொள்கின்றது.

ஆவி முதலாவது, ஆத்துமா இரண்டாவது, சரீரம் மூன்றாவது என்று வேதாகமம் கூறும் முன்னுரிமையை நாம் கைக்கொள்ளும் வரை எல்லாம் நலம் தான்!

ஆனால் ஏதோ ஒன்று தவறாகி விட்டது. அதன் விளைவாக, அநேக மனிதர்களுக்கு இந்தக் கிரமம் தலைகீழாகி விட்டது: சரீரமே முதல் முன்னுரிமை என்றானது; ஆத்துமா இரண்டாவது முன்னுரிமையும், ஆவி முன்னுரிமையில் மூன்றாம் இடமும் பெறுகின்றன. துரதிருஷ்டவசமாக, இன்றைய உலகில், அநேக மக்களின் சிந்தனை, தீர்மானங்கள், பாசங்கள் ஆகியவை அவர்களது சரீர, பொருளியல், உணர்ச்சிப் பூர்வமான இச்சைகளினாலேயே ஆளப்படுகின்றன; அவர்களது ஆவிக்குரிய திறனோ தணிந்து, மடிந்து போய்க் கிடக்கின்றது. ஆக, கடவுள் தாம் படைத்த நபரின் ஆவிக்குரிய வாழ்க்கையைப் புதுப்பித்து அவனை ஆள அனுமதிக்கப் படுவதற்குப் பதிலாக, அவர் அடக்கி வைக்கப் படுகிறார், அல்லது இந்தத் தவறான கருத்துக்கள் கொண்ட மனிதர்களுக்கும் இவர்களை உருவாக்கிய கடவுளுக்கும் இடையே எந்தத் தகவல் தொடர்புக்கும் வழியே இல்லாத அளவிற்கு அவர் மனித வாழ்க்கையிலிருந்து வெளியேற்றவும் படுகிறார்

கடவுள் ஏதோ தொலை தூரத்தில் இருப்பது போல, தன் வாழ்க்கையில் கடவுளைத் தத்ரூபமாக உணராத எந்த

நடபரும் உண்மையில் ஆவிக்குரிய ரீதியில் மரித்துப் போய் விட்டவன். இதற்கு மாறாக, கடவுளுடன் உறவை, ஓர் ஐக்கியத்தை அனுபவிக்கும் ஒரு மனிதனோ உண்மையாகவும் முழுமையாகவும் உயிர் பெற்றிருக்கிறான்.

> *தேவனோ இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாய் இருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார் (எபேசியர் 2:4,5)*

இந்த உலகத்தின் பிரச்சினைகள் அனைத்தும் மனிதனின் சித்தத்தில் (விருப்பத்தில்) தான் ஆரம்பித்தன. கடவுள் மனிதர்களைப் பிறர் விருப்பத்திற்கேற்றபடி அசைந்தாடும் தலையாட்டி பொம்மைகளாகப் படைக்கவில்லை. பொம்மை வித்தை காட்டுபவன் சில நூல்களை அங்குமிங்கும் இழுப்பதன் மூலம் பொம்மையின் ஒவ்வொரு அங்க அசைவையும் தனது பிடியில் வைத்திருக்கிறான். இதற்கு மாறாக, கடவுளோ, நாம் நமது விருப்பத்தின் படி நடக்கக் கூடிய சுதந்தரத்தை, நமக்கென்று ஒரு சுயசித்தத்தைக் கொடுத்திருக்கின்றார். ஆனால் அந்த சுயசித்தத்தை நாம் ஈவாக, பரிசாகப் பெற்றிருப்பதனால், நாம் செய்கின்ற தீர்மானங்களுக்கு நாம் பொறுப்பாளிகளாவும் ஆகின்றோம். (வேதத்தின் சத்தியத்தைப் புறக்கணித்து விடும் அநேக மனநல மருத்துவர்கள் இதையெல்லாம் உனக்குச் சொல்ல மாட்டார்கள்.)

மனிதன் உருவாக்கப் பட்ட பின் மனுக்குலத்தில் மகா பெரிய சோகம் ஒன்று சம்பவித்தது. ஏதேன் தோட்டத்தில் இருந்த ஏராளமான மரங்களில் இரண்டு சிறப்பான மரங்களும் இருந்தன. ஒன்று *ஜீவ விருட்சம்; மற்றது, நன்மை தீமை அறியும் விருட்சம். (ஆதியாகமம் 2:9).* கடவுள், நன்மை தீமை அறியும் மரம் தவிர மற்றெந்த மரத்தின் கனியையும் புசிக்கலாம் என்று ஆதாம், ஏவாளிடம் கூறியிருந்தார். இந்தத் தெரிந்தெடுப்பை, அதாவது கீழ்ப்படிவது மற்றும் கீழ்ப்படியாமல் இருப்பது என்ற இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ளும் அனுமதியை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் கடவுள் தாம் மனிதனை - ஆணையும் பெண்ணையும் - சுய சித்தம் உள்ளவர்களாகப் படைத்திருக்கிறார் என்பதைத் தெளிவாகத் தெரியப் படுத்தியிருந்தார். கடவுளுக்குக் கீழ்ப்படியப் போகிறார்களா, இல்லையா என்பது அவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது. இது அவர்களுடைய சொந்த, தனிப்பட்ட தீர்மானமாகும்.

வருத்தம் என்னவென்றால், கடவுள் மனுக்குலத்திற்குக் கிடைக்குமாறு செய்திருந்த மிகச் சிறந்ததற்கு எதிராக ஆதாமும் ஏவாளும் கலகம் செய்தனர். கீழ்ப்படியக் கூடாது என்ற அவர்களது தீர்மானம் தமக்கு விவரிக்க முடியாத துன்பத்தையும் முழு மனுக்குலத்திற்கும் வேதனையையும் கொண்டு வரும் என்பதைக் கடவுள் முன்னமே அறிந்திருந்தார். ஆனால், தமது படைப்பின் மீது தாம் வைத்திருந்த அன்பின் காரணமாகவும், சரியான தெரிந்தெடுப்பைச் செய்கின்றவர்களுக்குப் பின்னர் கிடைக்கவிருக்கும் மகிமையின் நிமித்தமும் கடவுள் ஒவ்வொரு நபருக்கும்

எதையும் தெரிந்தெடுக்கின்ற சுதந்திரத்தை வழங்கியிருக்கின்றார்.

பொய்யனாகிய சாத்தான், தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, ஆதாமும் ஏவாளும் தவறான தெரிந்தெடுப்பைச் செய்யுமாறு அவர்களைச் சோதனைக்கு உட்படுத்தினான். விலக்கப் பட்ட கனியை அவர்கள் உண்டால், அவர்களும் கடவுளைப் போலாவார்கள் என்று கூறி அக்கனியைக் கவர்ச்சிகரமாகக் காட்டினான். (சாத்தான் இன்னும் கூட மனிதனே தனக்குக் கடவுளாக இருக்க முடியும் என்று கூறுகின்றான். ஆனால் எப்படி கடவுள் கடவுள் தான், கடவுளை விடச் சற்றுக் குறைந்தவர் ஆக முடியாதோ, அப்படியே மனிதன் மனிதன் தான், ஒருபோதும் மனிதனை விட மேலானவன் ஆக முடியாது). என்றாலும், சாத்தான் ஆதாமும் ஏவாளும் தேவனுடைய சித்தத்திற்கு எதிராக தங்கள் சித்தத்தை நிறைவேற்ற அவர்களை வசீகரித்தான். அதன் விளைவாக, ஒவ்வொரு தலைமுறை மக்களும் தங்கள் சிருஷ்டிகருடன் ஓர் உயிர்த்துடிப்புள்ள, தனிப்பட்ட, அந்தரங்கமான ஐக்கியம் துண்டிக்கப்பட்ட நிலையில் பிறக்கின்றனர், ஏனெனில் எல்லாரும் ஆதாமின் வழி வந்தவர்களே. இப்படியாக, ஒரே *மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவம் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவும் ஆயிற்று (ரோமர் 5:12).*

உலகம் இதுவரை அறிந்துள்ள ஒவ்வொரு மயானமும், ஒவ்வொரு மருத்துவமனையும், ஒவ்வொரு

இராணுவமும், ஒவ்வொரு சிறைச் சாலையும் படைப்பின் தொடக்கத்தில் மனிதன் செய்த தவறான தெரிந்தெடுப்பின் விளைவே ஆகும். மனுக்குலத்தில் காணப்படும் இந்தப் பயங்கரமான தீமை, நாம் பாவம் என்று அழைக்கிறோமே அது, மனுக்குலம் முழுவதையும் பாதித்துள்ள, நம்மோடு ஒட்டிப் பிறந்த வியாதி ஆகும். பாவம் கடவுளோடு மனிதனுக்கு உள்ள உண்மையான ஐக்கியத்தைத் துண்டித்ததோடு மாத்திரம் அல்ல, அது அவனை அவனது சக மனிதனிடமிருந்தும் பிரித்துப் போட்டது.

ஆனால், நீயும் நானும் பிறப்பினால் மட்டும் பாவிகள் அல்லர்; நாம் செய்கைகளினாலும் பாவிகள் தாம்.

நமது பிறப்பைப் பொறுத்தமட்டில், சங்கீதக்காரன்: *இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந் தரித்தாள் (சங்கீதம் 51:5)* என்று கூறிய போது, அதை நம் எல்லாருக்காகவும் சேர்த்துத் தான் சொன்னான். ஆனால் நாம் பாவத்தோடு பிறந்தோம் என்பது, நாம் செய்துள்ள பாவச் செய்கைகளுக்கு ஒரு சாக்குப் போக்காக ஆக முடியாது. வேதம் இன்னொன்றும் கூறுகிறது - நாம் *கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் ...... நாம் எல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின் படியே நடந்து, நமது மாம்சமும் மனமும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாய் இருந்தோம் (எபேசியர் 2:2,3)*

ஆம், நமது சொந்தக் கீழ்ப்படியாமையின் நிமித்தம் நாம் கடவுளுக்கு முன்பாகக் குற்றமுள்ளவர்கள். வேறு யார் மீதும் - ஒரு மனைவி மீதோ, நண்பன் மீதோ, பெற்றோர் மீதோ நாம் பழிபோட முடியாது. நாம் வருகின்ற பின்னணியோ, நாம் வாழ்கின்ற சூழலோ கூட குறை கூறப்பட முடியாது. உனது பாவத்துக்கு நீயே பொறுப்பாளி. அதே போல் என்னுடைய பாவத்துக்கு நானே பொறுப்பாளி.

மக்களிடையே நாம் காணும் இவ்வளவு பகைமைக்கும் பிரிவினைக்கும் உண்மையான காரணம் பாவம் நம் எல்லாருக்கும் பொதுவான காரணி என்பதே. பாவமானது ஒரு நாஸ்திகனையும், ஒரு விசுவாசியையும் ஒன்றாகக் கட்டிப் போடுகின்றது. ஓர் அரபியனையும் ஒரு யூதனையும் ஒன்றாகப் பிணைத்து விடுகின்றது. பாவமானது மூன்றாம் உலக நாடுகளின் மக்களை முன்னேறிய நாடுகளின் மக்களோடு ஒன்றாக்கி விடுகின்றது. பாவம் ஒரு கம்யூனிசவாதியை ஒரு முதலாளியுடனும், ஒரு போலீஸ்காரனை ஒரு குற்றவாளியுடனும், ஒரு பெண் விடுதலை இயக்கத்தினளை ஆண் அதிகார வர்க்கத்தவனோடும் சேர்த்துக் கட்டி விடுகிறது. மனிதர்கள் விபசாரக்காரர்களானாலும் சரி, பிரசங்கம் செய்பவர்களானாலும் சரி, உல்லாசத்தின் உச்சகட்டத்தில் வாழ்பவர்களானாலும் சரி, வறுமையின் அடித்தளத்தில் வாடுபவர்களானாலும் சரி, படித்தவர்களானாலும் சரி, படியாதவர்களானாலும் சரி *எல்லாரும் பாவம் செய்து, தேவ மகிமை அற்றவர்களானார்கள் (ரோமர் 3:23).* மனிதர்கள் மத்தியில் நிலவும் அத்தனைப் பதட்டங்களுக்கும் அடிப்படைக் காரணம் பாவமே.

ஆனால் இயேசு பாவியின் ஒரே நம்பிக்கை ஆவார்! அவர் சொன்னார்: *நீதிமான்களை அல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் (மத்தேயு 9:13).* கொஞ்சமாகவோ, அதிகமாகவோ, நீயும் நானும் தேவனுடைய பரிசுத்தத்தின் இலக்கை அடையத் தவறியிருக்கிறோம். 'பாவம்' என்ற பதத்தின் பொருள் 'இலக்கை அடையத் தவறுதல்' என்பதாகும். அதைச் சரி செய்ய நாமாகவே எதையும் செய்து கொள்ள முடியாது. நாம் நல்லவர்களாக இருப்பதன் மூலமாகவோ, நற்செயல்கள் செய்வதன் மூலமாகவோ தேவனுடன் சமாதானத்தைக் கண்டு கொள்ள முடியும் என்பது வீண் நம்பிக்கையாகும். *ஒருவரும் பெருமை பாராட்டாத படிக்கு, இது கிரியைகளினால் உண்டானதல்ல (எபேசியர் 2:9).* ஆகவே தான் இரட்சிப்பைப் பற்றிப் பேசியபோது இயேசு, *பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்றார் (மத்தேயு 9:13)*

தங்களது அந்தரங்க பாவத்தின் கடூரத்தினால் பீடிக்கப் பட்ட மக்களுக்கு கடவுளின் இரக்கத்தைப் பற்றிய மெய்யான புரிந்து கொள்ளுதலானது மிகுந்த நிம்மதியைத் தருகின்றது.

கடவுள் *இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவராக (எபேசியர் 2:4)* இருப்பதால், அவர் உன்னிடம் கேட்பதெல்லாம் நீ இரட்சிப்பை அவரது இலவசமான பரிசாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே. *கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (அன்பளிப்பு) (எபேசியர் 2:8).* ஒரு

பாவி தேவனுடைய பரிசுத்த சந்நிதிக்குள் நுழைவதற்கான வாசலைத் திறக்க கிறிஸ்து தாமே உன்னத பலியைச் செலுத்தினார்.

இரக்கத்தின் தேவன், இப்பொழுது பரிபூரண ஜீவனை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக இலவசமாக வழங்குகிறார். ஆனால் அவர் உனக்கென்று ஒரு சுய சித்தத்தைக் கொடுத்திருப்பதனால், அந்த ஜீவனில் பங்கடைய உன்னைக் கட்டாயப்படுத்தமாட்டார். கடவுள் வழங்கும் இலவச அன்பளிப்பை நீ என்ன செய்யப் போகிறாய் என்பது மிக மிக அவசரமான காரியமாகும்: கடவுள் சொல்கிறார்: *இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள் (2 கொரிந்தியர் 6:2).* இப்பொழுதே நீயாகவே உன் வாழ்க்கையைச் செம்மையாக்க முயன்ற பிறகு, எதிர் காலத்தில் என்றோ ஒரு நாளில் அல்ல. இயேசு சொன்னதை நினைவில் கொள்: *நீதிமான்களை அல்ல, பாவிகளையே ..... அழைக்க வந்தேன் (மத்தேயு 9:13).*

உனது உண்மையான பிரச்சினை பற்றி, பாவம் என்ற பிரச்சினை பற்றி வெளிப்படையாக, உண்மையாக வருவதே அதன் தீர்வுக்கு நேரான முதலடி ஆகும். நீ எங்கே இருந்தாலும் சரி, என்ன நிலைமையில் இருந்தாலும் சரி, இன்றே உன்னை ஏற்றுக் கொள்ள இயேசுவின் கரங்கள் ஆவலாய் விரிந்திருக்கின்றன. உன்னிடமிருந்து அவர் கேட்க விரும்புவதெல்லாம்: *தேவனே, பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் (லூக்கா 18:13)* என்ற ஒன்றை மட்டுமே.

## சிந்தித்துப் பார்

1. இன்றைய சமுதாயத்திலே ஏதோ ஒரு கோளாறு இருக்கிறது என்பதை உன்னால் காண முடிகிறதா?

2. நீ சுகவீனமாய் இருக்கையில், மருத்துவர் உனக்கு மருந்து கொடுப்பதற்கு முன்பாக, உனக்கு உள்ள வியாதி என்ன என்பதைச் சரியாகக் கண்டுபிடிப்பது முக்கியமான காரியமா?

3. வேதாகமம்: உன் பிரச்சினையை எவ்வாறு கண்டறிகிறது? உன் பிரச்சினைக்கு எப்படிப் பரிகாரம் தருகிறது?

சீமோன் என்று பேர்கொண்ட ஒரு மனுஷன் அந்தப் பட்டணத்திலே மாயவித்தைக் காரனாய் இருந்து, தன்னை ஒரு பெரியவன் என்று சொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப் பண்ணிக் கொண்டிருந்தான். தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி, சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவிகொடுத்து வந்தார்கள்.

டாக்டர். ஹூக்கா.

அத்தியாயம் 6

# மக்கள் இவ்வளவு தவறான பாதையில் செல்வது ஏன்?

நான் சிறுவனாக இருந்தபொழுது, பிரிட்டிஷ் தீவுகளில் எதிரிப் படைகளின் போர் விமானங்கள் மிகத் தாழ்வாகப் பறக்கும் ஒரு பகுதியில் வாழ்ந்தேன். அது போர் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம். அந்தப் போர் விமானங்கள் தொழில் வளமிக்க மத்தியப் பகுதிகளிலும், வட இங்கிலாந்து பகுதியிலும் உள்ள தங்கள் இலக்குகளைத் தாக்க எங்கள் ஊர் வழியே சென்றன. எனது நண்பர்களும் நானும் எங்கள் போர் விமானங்கள் எவை, எதிரியின் விமானங்கள் எவை என்பதை அவை இரைந்து கொண்டு செல்லும் சத்தத்திலிருந்தே வேறுபடுத்தி அறியக் கற்றுக் கொண்டிருந்தோம். தரையிலுள்ள துருவ விளக்குகள் வானில் சென்று கொண்டிருக்கும் ஒரு எதிரி விமானத்தின் மேல் ஒளி உமிழ்ந்து அதை அடையாளம் காட்டும் பொழுது நாங்கள் அடையும் பரவசத்திற்கு அளவேயில்லை. தரையில் பதிக்கப்பட்டுள்ள துப்பாக்கிகளோ அல்லது வானில் நடைபெறும் சண்டையோ ஒரு விமானத்தைச் சுட்டு வீழ்த்தக் கூடும் என்பதை நாங்கள் அறிந்திருந்தோம்.

எதிரி விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப் படும் போது, அதன் விமானிகள் யாராவது "பாராசூட்" மூலம் பத்திரமாகத் தரையிறங்கக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. அப்படி இறங்கி உயிர்பிழைத்தவர்களுக்கு வழி கண்டு பிடிப்பதையும் அதன் மூலம் தப்பியோடுவதையும் சிரமமாக்கவும், மீண்டும் அவர்கள் இன்னொரு விமானத்தில் குண்டுகள் ஏற்றிக் கொண்டு வருவதைத் தடுக்கவும் எண்ணிய அதிகாரிகள் சாலைச் சந்திப்புகளில் வைக்கப்பட்டிருந்த கைகாட்டிப் பலகைகளை எல்லாம் அகற்றிவிட்டிருந்தனர். இதன் காரணமாக சாலைச் சந்திப்புகளில் எங்குமே திசைகாட்டிப் பலகைகள் தென்படவில்லை.

எனினும், ஊருக்கு வெளியே ஊட்டன் உட்ஸ் என்ற பகுதியில் முக்கியத்துவமற்ற ஒரு சாலைச் சந்திப்பில் ஒரேயொரு சிறிய கைகாட்டிப் பலகை இருந்ததை சிறுவர்களாகிய நாங்கள் தெரிந்து வைத்திருந்தோம். அந்தப் பலகையை நாங்கள் திருப்பி, வேறு திசையைக் காட்டுமாறு மாற்றி வைத்த பொழுது உதவுவதாக எண்ணிக் கொண்டோம். உள்ளூர் அதிகாரிகளைப் போலவே, நாங்களும் எங்கள் கடற்கரையில் வந்து சேரும் வேண்டாத விருந்தாளிகளைக் குழப்பி விட விரும்பினோம்.

என்றாலும், அப்படி உயிர் தப்பும் ஒரு நபர் தன் கையில் ஒரு நம்பகமான வரைபடத்தை வைத்திருப்பான் என்றால் அங்கே கைகாட்டிப் பலகைகள் இல்லை என்பது அவனுக்கு ஒரு பிரச்சினையாகவே இருக்காது.

கைகாட்டிப் பலகையைத் திசை திருப்பி வைக்கும் எங்கள் விளையாட்டுத் தனமான 'ஐடியா' கூட, தன் வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களை எதிரியானவன் அசட்டை செய்தால் ஒழிய, அதிகப் பிரச்சினையை உண்டு பண்ணாது.

கடவுளை நாடித் தேடும் விருப்பத்தில் போலியான பெயர்ப் பலகைகளால் வழி தவறிச் செல்லக் கூடிய மக்கள் யார் யார் என்பதைக் கடவுள் நமக்குக் கூறுகின்றார்.

முதலாவதாக, இந்த அற்புதமான அண்ட சராசரம் கடவுள் என்ற சிருஷ்டிகர் இருக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது என்ற உண்மையைப் புறக்கணிக்கத் தீர்மானிக்கும் எந்த நபரும் உண்மையில் குழப்பமே அடைவான்!

> *அவர்கள் தங்களை ஞானிகள் என்று சொல்லியும் பைத்தியக் காரராகி, ... தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுத்தார் (ரோமர் 1:22, 28)*

அந்தக் கேடான சிந்தை சிருஷ்டிகரை வழிபடுவதை விட்டு விட்டு சிருஷ்டிகளைத் தொழுது வணங்குகிறது. இதற்கு மாறாக, தெளிவான சிந்தையுள்ள ஒரு மனிதன் தனது சிருஷ்டிகரையே வணங்குவான். இப்படியாக, கடவுளே அண்ட சராசரத்தைப் படைத்து உருவாக்கினார்

என்பதை நம்ப நீ மறுப்பாயானால் கடவுளும் உன்னைக் கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுப்பார், நீ இந்த அண்ட சராசரம் எப்படி உருவாயிற்று என்பது பற்றி ஏதாவது ஒரு ஆகாத கொள்கையை நம்பும்படி விட்டு விடுவார். கேடான சிந்தை வஞ்சிக்கப் பட்ட சிந்தையாகும்!

தேவனுடைய வசனத்தை சத்தியம் என்று ஏற்றுக் கொள்ள மறுக்கும் மக்கள் எளிதில் வஞ்சகமான வழியைப் பின்பற்றுவார்கள், அது அவர்களை அழிவுக்கு நேராக வழிநடத்தும் என்றும் கடவுள் எச்சரிக்கிறார். உண்மையாகவே, தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தை நேர்மறையாகவும், செயலாற்றும் அன்புடனும் நேசிக்கத் தவறும் ஒரு மனிதன் தன்னை மிக அபாயகரமான ஒரு நிலையில் அகப்படுத்திக் கொள்கிறான்.

> *இரட்சிக்கப் படத் தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமல் போன படியால் ..... சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப் படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப் படும்படிக்கும், அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார் ... (2 தெசலோனிக்கேயர் 2:10,11).*

ஒரு நபர் சத்தியத்தை ஒரு முறை நிராகரித்து விட்டால் அல்லது புறக்கணிதது விட்டால் போதும், அவ்வளவுதான். வெகு எளிதில் பொய்யை, போலியானதைத் தழுவிக் கொள்வான்.

ஒருமுறை லண்டனில் அடர்பனியின் ஊடே என் வீட்டிற்குச் செல்ல நான் வழி தேடியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. பாதையின் ஓரம் எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிப்பதற்கே எனக்கு ஏகப்பட்ட உதவி தேவையாயிற்று. என் கையிலிருந்த 'டார்ச்' விளக்கின் ஒளி கூட என் கண்ணுக்குத் தெரிவது கடினமாயிருந்தது. மாயம் அல்லது வஞ்சகம், உண்மையில் மனதில் எழும் அடர்பனியாகும், அது பூமி என்ற கோளின் கடைசி நாட்களில் அடர்ந்து சூழ்ந்து நிற்கும், காரணம் மக்கள் தேவனுடைய வார்த்தை என்ற சத்தியத்தை நிராகரித்து விட்டதே என்பதாகக் கடவுள் கூறுகின்றார். இயேசுவின் சிஷர்கள் அவரிடம், *உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?* என்று கேட்டனர். அப்பொழுது அவர் கூறியதாவது:

> *ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் (மத்தேயு 24:24)*

இப்பொழுது கூட நீ உன்னிடம்: "எல்லாம் சரிதான், ஆனால் நான் வஞ்சிக்கப் படவில்லை" என்று கூறிக் கொண்டிருக்கலாம். ஒரு கள்ளக் கிறிஸ்துவையோ அல்லது கள்ளத் தீர்க்கதரிசியையோ எளிதில் அடையாளம் கண்டு கொள்ளுவேன் என்று பெருமை கூடப் பாராட்டிக் கொள்ளலாம். ஆனால் ஒரு விநாடி நின்று உனது முடிவைக் குறித்துச் சிந்தித்துப் பார். நீ

சத்தியத்தை நேசிக்கத் தவறியிருப்பாயானால் கடவுள், சாத்தான் உன்னை வஞ்சிக்க அனுமதித்திருப்பார், நிச்சயமாக நீ அந்த வஞ்சகத்தை அறிந்து கொள்ள முடியாது. ஏதோ ஒரு கள்ளத் தீர்க்கதரிசி உன்னை ஏமாற்றி விட்டான் என்று உனக்கு உண்மையிலேயே தெரிந்திருந்தால் நீ உண்மையில் ஏமாற்றப் பட்டிருக்கவே மாட்டாய். எல்லா ஏமாற்றமும் சிந்தையிலேயே நடைபெறுகிறது. தன் அறிவுக் கூர்மையைக் குறித்துப் பெருமை பாராட்டும் யாரும் தன் மனம் ஒரு பொய்யை நம்பும் படியாக வஞ்சிக்கப் பட்டிருக்கிறது என்பதை அவ்வளவு எளிதில் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

வேதத்தை வாசிக்கும்பொழுது அதன் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கும், அதன் மூலமாக உலகம் கற்றுத் தரும் வஞ்சகங்களுக்குத் தங்களைத் திறந்து கொடுக்கும் இரு விதமான மக்கள் உள்ளனர். ஒரு விதத்தினர், தங்கள் அறிவுக் கூர்மையைக் குறித்துப் பெருமை பாராட்டும், தன்னிறைவு பெற்றவர்கள் போல் தோற்றம் தரும் மக்கள். அடுத்த சாரார், ஒழுக்க ரீதியாகக் கீழ்ப்படியாமையில் வாழ்வோர். ஆனால் உண்மையாகவே கடவுளுடைய சித்தத்தைச் செய்ய ஆசிக்கும் ஒவ்வொரு நபருக்கும் ஆண்டவராகிய இயேசு ஒரு சிறப்பான வாக்குத்தத்தை வைத்திருக்கிறார்: "*அவருடைய சித்தத்தின் படி செய்ய மனதுள்ளவன் எவனோ, அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான்*" *(யோவான் 7:17)*

நீ உண்மையாகவே கடவுளுடைய சித்தத்தைச் செய்ய விரும்புவாய் என்றால் நீ எதை நம்ப வேண்டும், எதை நம்பக் கூடாது, நீ எப்படி நடந்து கொள்ள வேண்டும், எப்படி நடந்து கொள்ளக் கூடாது என்றெல்லாம் கடவுள் தமது வேதத்தின் மூலமாக உனக்குக் கற்றுத் தருவார் என்பது நிச்சயம்.

எனினும், உண்மையான தேவனுடைய வார்த்தையைப் போதிக்காதபடி தவறான காரியங்களை நீ நம்பவும் செய்யவும் ஏவக்கூடிய, தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்டுள்ள மத போதகர்களைக் குறித்து, அவர்களது வார்த்தைகளை நிராகரிக்க நீ கவனமுள்ளவனாய் இருக்க வேண்டும்.

இந்தத் தலைமுறையில், மக்களைத் தவறான வழிகளில் திசை திருப்பி விடும் சாத்தானின் தூதுவர்கள் போலி கிறிஸ்தவ வழிபாட்டுக் கும்பல்களின் உறுப்பினர்களே ஆவர். தேவனாகிய பிதா, தேவனாகிய குமாரன், தேவனாகிய பரிசுத்த ஆவியானவர், - மூவரில் ஒருவர், ஒருவரில் மூவர் என்ற இந்த சத்தியத்தை நிராகரிக்கும் எந்த நபரும் ஒரு கள்ளத் தீர்க்கதரிசியே. இப்படிப் பட்ட நபர்கள் வேதத்திலிருந்து அங்கொன்றும், இங்கொன்றுமாக வசனங்களை எடுத்துப் பேசினாலும் அந்த வசனங்கள் கூறப் பட்ட பின்னணியை விடுத்து, வேதாகமத்திற்குப் புறம்பான ஒரு மதத்தையே போதிக்கின்றனர். "இயேசு கிறிஸ்து யார்?" என்ற கேள்வியைக் கேட்பதன் மூலம் கள்ளப் போதகர்களை நீ எளிதாக அடையாளம் கண்டு கொள்ள முடியும். அவர்

யார் என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இயேசு தேவனாகிய குமாரன் என்பதை நீ உண்மையாகவே அறிந்திருக்கும் பட்சத்தில், ஒருவருக்கொருவர் உதவி செய்யும் நல்லெண்ணம் படைத்தவையாக விளங்கும் இரகசிய சங்கங்களும் இவ்விதமான ஆவிக்குரிய வஞ்சகமே என்பதைக் காண்பாய். இப்படிப் பட்ட சங்கங்களில் கடவுளின் பெயர் உச்சரிக்கப் படலாம், ஆனால் இயேசு கிறிஸ்துவின் போதனைகளோ புறக்கணிக்கப் படுகின்றன; இயேசு சொன்னார்:

*என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6).* கடவுளைப் பற்றிய தவறான எண்ணம் கொண்டுள்ள மக்களைக் குறித்து வேதம் கடுமையான வார்த்தைகளைக் கூறுகிறது: *தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லது தான்; பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன (யாக்கோபு 2:19).*

வேதாகமம் கூறும் கடவுளை மறுதலிக்கின்ற முக்கியமான மதங்கள் தங்கள் செயல்பாடுகளை வெகுவாக அதிகரித்து வருவதை இன்று நாம் காண்கிறோம். இந்து மதத்தின் பல்வேறு பிரிவுகளும் புதிது புதிதாக மக்களைக் கவர்ந்து இழுக்க முயன்று வருகின்றன. ஒரு காலத்தில் வேதாகமப் பண்பாட்டிற்குப் பெயர் போன பல நாடுகளில் இன்று இந்து மதத்

தத்துவம் கிழக்கத்திய தியானக் கொள்கை என்ற வடிவிலோ அல்லது யோகா மற்றும் துறவு நெறி என்ற வடிவிலோ வழங்கப் படுகிறது. இந்து மதத்திலிருந்து துளிர்த்து வந்துள்ள பல்வேறு போலி வழிபாட்டுக் குழுக்கள் சிருஷ்டிகளின் கடவுளைத் தொழுது வணங்குவதற்குப் பதிலாக சிருஷ்டிகளையே கடவுளாகத் தொழுது வணங்குகின்றன. அநேக வஞ்சிக்கப் பட்ட மனங்கள், இப்பூமிக்கு வரத் தம்மைத் தாமே தாழ்த்தின சிருஷ்டிப்பின் கடவுளை விட, தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளும் ஒரு "குரு"வின் பால் அதிகமாக ஈர்க்கப் படுகின்றன என்பது அதிக வேதனை தரும் விஷயம்.

முஸ்லீம் உலகமும் தனது நம்பிக்கையைப் பரப்புவதில் அதிதீவிரம் காட்டுகிறது. எண்ணெய் வளம் சம்பாதித்துத் தரும் டாலர்களும், பெருகி வரும் அரசியல் செல்வாக்கும் சேர்ந்து கொண்டு சில ஆண்டுகள் முன் வரை யாரும் நினைத்துக் கூடப் பார்த்திராத அளவில் அவர்கள் தங்கள் எல்லைகளை விரிவாக்க உதவுகின்றன.

*Freemasonry என்பது உலகிலுள்ள சர்வதேச இரகசியச் சங்கங்கள் அனைத்திலும் மிகப் பெரியது. இதன் உறுப்பினர் எண்ணிக்கை அகில உலகத்திலும் சுமார் 1 கோடி ஆகும். இதன் கொள்கைகளான "சகோதரத்துவ அன்பு, நிம்மதி, சத்தியம்" ஆகியவை பலரைக் கவர்ந்த போதிலும், வெளியே இருப்பவர்கள் எண்ணுமளவிற்கு Masonry அவ்வளவு சாதாரணமானது அல்ல. ஒரு மேசன் (Mason) ஆக விரும்பும் எந்த நபரும் தான் இருளில் இருப்பதாகவும் ஒளியைத் தேடுவதாகவும் அறிக்கையிட வேண்டும். இயேசுவைப் பின்பற்றும் ஒரு நபரோ தான் ஏற்கனவே ஒளியை அடைந்தாயிற்று என்று நம்புகிறான். இயேசு சொன்னார்; நான்*

உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன், என்னைப் பின் பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் (யோவான் 8:12). மேசானிக் இரகசியக் கழகத்தில் ஒரு நபரைப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளும் வைபவம் மிகமிக உணர்ச்சி வயப் படுத்தும் நிகழ்ச்சிகளையும், உள்ளான அர்த்தம் கொண்ட வெளிப்புற அடையாளங்களையும் ஏராளமாக உடையதாகும். அந்த வேளையில் மேசானிக் கழகத்தில் சேருகின்ற நபர் "கவுடோ" (Gauto) என்ற பெயருக்கு அறிமுகப் படுத்தப் படுவதன் மூலம், வேதாகமத்தில் காணப் படும் கடவுள் பற்றிய தத்துவங்களை விட்டு வழி விலக்கப் படுகிறான். கவுடோ என்பது "கடவுளின் தொலைந்து போன பெயர்" என்றும், கவுடோ தான் "அண்ட சராசரத்தின் அற்புதமிக்க சிற்பி" என்றும் அவனிடம் கூறப்படுகிறது. கொள்கை ரீதியாகப் பார்க்கப் போனால், புத்த மதத்தவரோ, இந்து மதத்தவரோ, முஸ்லீம் மதத்தவரோ, யூத மதத்தவரோ அல்லது கிறிஸ்தவ மதத்தவரோ, எவராக இருந்தாலும் சரி, கடவுள் நம்பிக்கை உள்ள யாரும் இந்த (Freemason) ஆக முடியும். எனவே கவுடோ (கடவுளைப் பற்றி மனிதனாகவே உருவாக்கிக் கொண்ட தத்துவம்) என்பது ஒரு நபரின் சிந்தனைகளை, மெய்யான ஒளி என்று வேதம் கூறும் இயேசுவிடமிருந்து அகற்றி (1 யோவான் 1:9) வேறு பக்கமாகத் திசை திருப்புகிறது. பின்னர் ஒரு மேசன், மாஸ்டர் மேசன் ஆகும் போது அவனுக்கு கடவுளின் இன்னொரு பெயர் - 'ஜாபுலோன்' என்பது கற்பிக்கப் படுகிறது. இந்தப் பெயர் உண்மையில் கடவுளைக் குறிக்கும் யூத மற்றும் மத்திய கிழக்குப் பெயர்களின் சேர்க்கை ஆகும். இது யாவே என்பதில் உள்ள ஜா, புல் (பாகால் என்பதன் ஒரு வடிவம்) மற்றும் ஓன், அதாவது எகிப்தியரின் சூரியக் கடவுள் ஆகிய பெயர்களிலிருந்து மருவி வருகிறது. இது, வேறுபட்ட பல சமயக் கருத்துக்களை ஒன்றிணைக்க வீணாக முயலும் சமய ஒருமைப்பாட்டுக் கொள்கைக்கு (syncretism) ஒரு சிறந்த உதாரணமாகும். இயேசு தாமே சொன்னார்:- உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாய் இருக்கும்! (மத்தேயு 6:23)

அவர்களது மிகப் புனித ஸ்தலங்களில் ஒன்றான, எருசலேமில் டெம்பில் மவுண்ட் என்ற இடத்திலுள்ள பாறை மண்டபத்தில் இருந்து கடவுளுடைய நற்செய்தியின் மையமாக அமைந்துள்ள சத்தியத்தையே மறுதலிக்கின்றனர். பாறை மண்டபத்தின் சுவரில் (Dome of the Rock) உள்ள அரபிய மொழி வாசகம் "கடவுள் பிறப்பிக்கப் படவில்லை அவரால் பிறப்பிக்கவும் முடியாது" என்கிறது. ஆனால் வேதமோ:

> *தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவான் 3:16) என்கிறது.*

ஆவிக்குரிய வஞ்சகம் வெறும் சமயம் சார்ந்த உலகுடன் நின்று விடுவதில்லை. மதச் சார்பற்ற உலகமானது ஒரு மனிதாபிமான தத்துவத்தைத் தழுவியுள்ளது. அதாவது மனிதனே அண்டசராசரத்தின் மையம், சமுதாயத்தின் உன்னதமான நோக்கம் மனிதனை முன்னேற்றுவதே என்பது அத்தத்துவம். மனிதாபிமானத் தத்துவம், பல்கலைக் கழகங்களிலும், செய்தித் தாள்களிலும், பன்னாட்டு கம்பெனிக் கருத்தரங்குகளிலும், பிரபல பத்திரிகைகளிலும், மற்றும் வானொலி, தொலைக்காட்சி வாயிலாகவும் கூறி அறிவிக்கப் படுகின்றது. உனக்கு நீயே செல்லம் கொடுத்து சீராட்டிக் கொள் என்பதே விளம்பர உலகம் இன்று பிரபலப் படுத்தி வரும் சுயநலமிக்க கருத்தாகும்.

மனிதாபிமானம் அல்லது மனிதநேயம் என்பது மனிதனை வணங்குவதே அன்றி வேறல்ல, சிலர் எண்ணுவது போல இது ஏதோ ஒரு புதிய தத்துவமும் அல்ல. பவுலின் நாட்களிலேயே கடவுள் கூறினார்: *தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள் ... (ரோமர் 1:25)* மனிதநேய ஆதரவாளர்களைப் பார்த்து ஆண்டவர் கேட்கும் இந்தக் கேள்வி நிச்சயமாக அவர்களைத் தலைவணங்கச் செய்யும்: *நான் பூமியை அஸ்திபாரப் படுத்துகிறபோது நீ எங்கே இருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி (யோபு 38:4).* இது அன்று நடந்த அதே பழைய கதை தான். சாத்தான் ஏவாளிடம் வந்த போது, *நீங்கள் தேவர்களைப் போல் இருப்பீர்கள் (ஆதி 3:5)* என்று கூறியதன் மூலம் நடக்க முடியாத ஒன்றை நடக்கக் கூடியது போல் காட்டினான். நமது காலத்திலும் மதச் சார்பற்ற மனித நேயம் என்னும் வஞ்சகமான போதனைகளின் மூலமாக தனது நாச வேலையைத் தொடருகிறான்.

நீ ஒருவேளை அரசியலினாலோ, மதத்தினாலோ 'தொடப் படாத' ஒரு நவநாகரீக இளைஞனாக இருக்கலாம் உன்னைப் பொறுத்தவரை, அரசியல் வாதிகள் எல்லாரும் சந்தேகத்துக்கிடமான நபர்கள், மதம் பொருத்தமற்ற, சம்பந்தமற்ற ஒன்று. நீ விரும்புவதெல்லாம் உன் நண்பர்களுடன் சேர்ந்து நிம்மதியையும் மகிழ்ச்சியையும் எங்காவது தேடி அலைய வேண்டும் என்பது தான். பல்வேறு நவீன கால இசை வகைகளில்

வெளிப்படும் பாடல் வார்த்தைகள் நீ சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் தனிமை நிறைந்த உலகிலிருந்து தப்பியோட உனக்கு வழி காட்டாதா என்று ஏங்குகிறாய்.

ஆனால் நீ விரும்பிக் கேட்கின்ற, கேட்டு ஆடிப் பாடுகின்ற அந்த வார்த்தைகள் என்னவென்பது உனக்குத் தெரியும். இப்படி நீ அவற்றை வருணிக்க விரும்ப மாட்டாய் தான், என்றாலும் பெருமளவிற்கு அவை சாத்தான் வணக்கம், பிறர் துன்பம் கண்டு தான் மகிழும் பழக்கமான 'ஸாடிஸம்', பாலுறவு இவற்றின் சேர்க்கை என்பதை ஒத்துக் கொள்வாய். அர்த்தமற்ற வாழ்க்கைக்குக் கவர்ச்சியூட்டும் மாற்று வழியாக சில நேரங்களில் நரகத்தின் பயங்கரங்களும் இசைகளில் சேர்த்து வழங்கப் படுகின்றன. சில சமயங்களில் வெறி பிடித்த வன்முறையை எட்டும் இந்தச் சூழல், இளைஞர்களைத் தங்களைத் தாங்களேயும் தாங்கள் பிறரையும் ஒழித்துக் கட்ட ஊக்குவிக்கிறது.

லாஸ் ஏஞ்சல்ஸ் மாநகரில் உள்ள ஓர் இடத்தைப் பற்றி நான் உனக்குக் கூறட்டும். அது 'குளிர் பதனப் பெட்டி' என்று அழைக்கப் படும் ஒரு சவக் கிடங்கு. அங்கே 600 சடலங்கள், அவற்றில் பெரும்பாலானவை இளைஞர்களுடையவை, யாராவது அவர்கள் உடலை அடையாளம் காண மாட்டார்களா என்ற நப்பாசையில் மூன்று மாதங்களுக்குப் பத்திரப் படுத்தி வைக்கப் படுகின்றன. 'பெயர் தெரியவில்லை' என்ற சீட்டுகள் அந்தச் சடலங்களின் கால் பெருவிரல்களில் கட்டப் பட்டுள்ளன. நாளடைவில் இந்தத் துரதிருஷ்டவசமான

சடலங்கள் அடையாளம் அறியப் படாமலேயே ஆண்டிகளின் கல்லறைகளில் புதைக்கப் படுகின்றன. இவர்களில் பெரும்பாலானோர் போதை மருந்து உலகத்திலிருந்து வந்தவர்கள், இன்று டிஸ்கோகளிலும், இலட்சோபலட்சம் வீடுகளில் CD ஒலி நாடாக்களிலும் இருந்து அறிவிக்கப் படும் அதே கருத்துகளைக் கேட்டு அதன் படியே வாழ்ந்தவர்கள். இவர்கள் தவறான வழிகாட்டிப் பலகையைப் பின்பற்றிச் சென்றவர்கள். இப்பொழுது சாலையின் இறுதி வரை வந்து விட்ட பிறகோ, திரும்பிச் செல்வது என்பது முடியாத காரியம் - நேரம் மிகப் பிந்தி விட்டது. இவர்கள் மட்டும், *நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப் படவும் வந்தேன் (யோவான் 10:10)* என்று சொன்ன ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு அவற்றுக்குச் செவி சாய்த்திருந்தால் எவ்வளவு நலமாய் இருந்திருக்கும்!

இப்பொழுது இந்த எல்லாக் குழப்பத்தோடும் கூட 'கறுப்புக் கலைகள்' (Black arts) என்பதில் அதிகரித்து வரும் நாட்டமும் சேர்ந்து கொண்டு விட்டது. இருண்ட யுகம் என்று அழைக்கப் படும் ஒரு காலகட்டத்தில் எந்த அளவிற்கு இருந்ததோ அந்த அளவிற்கு இன்றும் கூட மாய மந்திர உலகத்தின் பேரில் ஆர்வம் மேலோங்கி நிற்கிறது என்பதை நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இன்று, அதாவது 'விஞ்ஞானத் துறையில் அறிவு மேலோங்கி விட்ட' இந்தக் காலத்திலும் இது நடைபெறவே செய்கிறது.

எதிர்பாராத இடங்களில் எல்லாம் சாத்தானை வணங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இலண்டன் மாநகரிலிருந்து தொழில் நிபுணர்கள் 'கறுப்பு பூஜை' ஆசரிப்பதற்காக கென்ஸிங்டன் என்னும் இடத்தில் கூடி வருகின்றனர். சூனியக்காரிகள் ஐரோப்பா எங்கிலும், தொலை தூரத்தில் உள்ள அழகான வான் கூவர் தீவு போன்ற மூலை முடுக்குகளிலும் ஏராளமாகப் பரவியுள்ளனர். ஆப்பிரிக்கக் கண்டத்தில் நடைபெற்று வந்த மூதாதையர்களின் ஆவிகளை வழிபடும் பழக்கம் இன்று உலகெங்கிலும் ஆவி தியானங்கள் என்ற பெயரில் இடம் பெறுகின்றது. "இருட்டறைகளும் அரக்கன்களும்" (Dungeons & Dragons) மற்றும் "வீஜே" பலகைகள் போன்ற விளையாட்டுகள் தீய மற்றும் மாய மந்திர காரியங்களில் நாட்டமுள்ள மக்களுக்குத் தீனியாக அமைகின்றன. இவையெல்லாம் பெருகி வருவது, மேலோட்டமான ஆவிக்குரிய ஆர்வத்தின் விளைவே, கடவுளை நாடித் தேட வேண்டும் என்ற ஆர்வத்தில் தவறான வழியில் சென்று விட்ட அநேகர் கடவுள் என்ற ஒளியை விட்டு விட்டதும் அல்லாமல் ஏதோ ஒரு போலியான, வறட்டுத் திருப்தியை அளிக்கக் கூடிய மாய மந்திர உலகின் இருளை நோக்கியும் திரும்பி விட்டனர். இவையெல்லாம், இன்று நாம் நாகரீக உலகம் என்று சொல்லிக் கொள்கிறோமே, அந்த உலகத்தில் தான் நடைபெறுகின்றன.

கடைசி நாட்களைக் குறித்துக் கடவுள் என்ன சொல்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்வது நமக்கு

நல்லது. கள்ளத் தீர்க்கதரிசிகளைப் பற்றியும் கடைசிக் காலங்களில் வரப்போகும் கொடிய வஞ்சகம் போலியான அடையாளங்கள், அற்புதங்கள் உடையதாக இருப்பதைப் பற்றியும் அவர் நம்மை எச்சரிக்கிறார். உண்மையில் ஒரு பெரிய ஏமாற்றுக்காரன் வரவிருக்கிறான், அவனது கேடுகள், *சாத்தானுடைய செயலின் படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். (2 தெசலோனிக்கேயர் 2:9,10)* என்று கடவுள் கூறுகின்றார்.

பொய்யான போதனைகளிலும், தீமையான பழக்க வழக்கங்களிலும் அதிகரித்து வரும் இந்த நாட்டத்தினால், அநேக நாடுகளும் சமுதாயங்களும் ஏன் நாஸ்திகம், நடப்பது நடக்கட்டும் என்ற விரக்தி, நம்பிக்கையின்மை ஆகிய ஒடுக்கும் சக்திகளால் ஆளப் பட்டு வருகின்றன என்பது ஓரளவிற்குப் புரிகிறது. சாத்தானுடைய கைகாட்டிப் பலகைகள் கணக்கற்றவை. அவை அனைத்தையும் நாம் இங்கே குறிப்பிடுவது முடியாத காரியம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், அவற்றில் ஒன்று கூட, மனிதர்களை விடுவிக்கக் கூடிய ஒரே நபர் என ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைச் சுட்டிக் காட்டாது என்பது உறுதி.

கடவுளுடைய செய்தியோ இந்த உலகம் வாழ்க்கையைப் பரிதாபமாகச் சித்தரித்துக் காட்டுகிறதே அதற்கு முற்றிலும் மாறானது. அவருடைய செய்தி

இருளின் செய்தியோ, குழப்பத்தின் செய்தியோ, சாவின் செய்தியோ அல்ல. அவருடைய செய்தி நம்பிக்கையின் செய்தி, நிச்சயத்தின் செய்தி, கிறிஸ்துவில் காணக் கூடிய துடிதுடிப்பு மிக்க ஜீவனின் செய்தி. கடவுளைத் தேடும் உனது நாட்டத்தில் நீ வேதபுத்தகத்தைப் படிப்பாயானால் பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் உன்னை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நேராக நடத்துவார். அவரே: *நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்* என்றவர். அவரைத் தவிர வேறொருவர் இல்லை. இருக்கவும் முடியாது. ஏனெனில் இயேசு மேலும் கூறுகிறார்: *என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6)*

நீ தவறான பெயர்ப் பலகைகளைப் பார்த்து அவற்றினால் வழிதப்பிப் போய் விடாதபடி கடவுள் உன்னை எச்சரித்திருக்கிறார். உன் சிந்தனையைத் தடுமாறச் செய்யக் கூடிய வஞ்சகத்தைப் பற்றியும் முன் கூட்டியே உனக்கு விபரங்கள் தந்திருக்கிறார். இப்பொழுது அவர் உனக்கு ஒரு வாக்குத்தத்தமும் அருளிச் செய்கிறார்:

> *நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும் படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கு ஏதுவான நினைவுகளே. அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுது கொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்*

பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன். உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டு பிடிப்பீர்கள். நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா 29:11-14)

## சிந்தித்துப் பார்

1. சிருஷ்டிகரை அன்றி சிருஷ்டியை வணங்கும் மனது எப்படிப் பட்டது? *(ரோமர் 1:22-28 படிக்க)*

2. கடவுளை நாடித் தேடுதலில், உனக்கு இருக்கக் கூடிய அறிவுப் பூர்வமான பிரச்சினை எதையும் தீர்க்கக் கூடிய சாவி எது? *(யோவான் 7:17 படித்துப் பார்)*
   அது உனது சிந்தையா?
   அது உனது விருப்பமா, சித்தமா?

3. கடவுள் தம்மிடம் உன்னை நடத்தக் கூடிய தெளிவான 'கைகாட்டிப் பலகை' எதையும் உனக்குத் தந்துள்ளாரா? *(யோவான் 8:12 படித்துப் பார்).*

அநேக வருடங்களுக்கு முன், இங்கிலாந்தில்
ஓர் ஓய்வுநாள் பள்ளியில் ஒரு சிறுவன்
தனது ஓய்வு நாள் பள்ளி ஆசிரியரிடம்,
"தேவன் குறும்புக்காரச் சிறுவர்களை நேசிக்கிறாரா?"
என்று கேட்டான், ஆசிரியரோ, "இல்லை,
நிச்சயமாக இல்லை" என்று பதில் அளித்தார்.
ஓ, சற்றும் யோசியாமல் ஒரு பையனிடம்
கூறும் தூஷணம் அல்லவா இது! தேவன்
குறும்புக்காரச் சிறுவர்களை நேசிக்கவில்லை
என்றால், அவர் ஒரு நாளும் என்னை
நேசித்திருக்க முடியாது! ஷேக்ஸ்பியர் கூறுகின்றார்.
'மாற்றம் கண்டு மாறும் அன்பு அன்பேயல்ல'.

G. கேம்பெல் மோர்கன்

# கடவுள் உண்மையிலேயே என்னை நேசிக்கிறாரா?

உனக்கு மிக முக்கியமான யாராவது ஒருவரின் அன்பை நீ எப்பொழுதாகிலும் சந்தேகித்தது உண்டா? அல்லது நீ தன்னை நேசிக்கிறாய் என்பதை நம்ப மறுத்த யாருக்காகிலும் உனது அன்பை நிரூபிக்க முயன்றது உண்டா? இந்த இரண்டு நிலைகளிலுமே உண்மை அன்பு சொற்களைக் காட்டிலும் செயல்களின் மூலமாகச் சிறப்பாக வெளிப்படுத்தப் படும் வேளைகள் உண்டு என்பதை நீ அறிந்திருப்பாய்.

சொற்களைக் காட்டிலும் செயல்கள் மிகவும் வலிமை வாய்ந்தவை என்பதால், கடவுள் உன் மீதுள்ள தமது அன்பை, இயேசு சிலுவையின் மீது மரிக்கும்படி செய்ததன் மூலம் விளங்கப் பண்ணினார். இதன் முக்கியத்துவத்தை மட்டும் நீ புரிந்து கொண்டாயானால், கடவுள் உண்மையிலேயே உன்னை நேசிக்கிறார் என்பதை விளங்கிக் கொள்ள உனக்கு வேறெந்தக் காரண காரியமும் தேவைப்படாது.

நான் கிறிஸ்துவண்டை மனந்திரும்பிய புதிதில் எக்காளம் (bugle) ஊதும் ஒரு சிறுவனையும் ஒரு போர் வீரனையும் பற்றிய ஓர் உண்மைக் கதையைப் படித்தேன்.

போயர் யுத்தத்தின் போது இவர்கள் இருவரும் ஒன்றாக இராணுவத்தில் இருந்தனர். எக்காளம் ஊதும் சிறுவன், வில் ஹெரால்ட், பன்னிரண்டு வயது உடையவன். கடவுள் பயமே இல்லாத எழு போர் வீரர்கள் இருந்த கூடாரத்தில் பணி செய்ய நியமிக்கப்பட்டான். இந்த எழு பேரில் ஒருவன் பெயர் பில். ஆனால் பில்லைப் போல அல்லாமல், வில்லி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்த ஒருவன் ஒவ்வொரு நாளிரவிலும் தன் படுக்கையருகே அமைதியாக மண்டியிட்டு, ஜெபிப்பான், வேதம் வாசிப்பான். அவன் செய்வதைப் பார்த்து மற்ற போர் வீரர்கள் அவனைப் பகடி செய்து சிரிப்பார்கள். கெட்ட வார்த்தைகளால் சபிப்பார்கள்.

ஒரு நாள் அந்தச் சேனைக்குத் தலைவராக இருந்த கர்னல் அவர்களை அணிவகுத்து வரச் சொன்னார். வில்லியும், பில்லும் இருந்த கூடாரத்தில் உள்ள யாரோ ஒருவர் திருடுகிறார்கள் என்று கண்டுபிடிக்கப் பட்டிருந்தது. குற்றவாளி யார் என்று கண்டு பிடிக்கும் முயற்சியில் கர்னல் தனது முழுப் படைப் பிரிவுக்கும் எச்சரிக்கை விடுத்திருந்தார் : "எனது முந்தைய எச்சரிப்புகளினால் எந்தப் பயனும் இருப்பதாகத் தெரியவில்லை. நேற்றிரவு மீண்டும் அந்தத் திருடன் தன் கைவரிசையைக் காட்டியிருக்கிறான். இன்று, குற்றவாளி தன்னை நேரே வந்து அடையாளம் காட்டி ஓர் உண்மையான ஆண் மகனாகத் தனக்குரிய தண்டனையைப் பெற்றுக் கொள்ளக் கடைசியாக நான் ஒரு தருணம் கொடுக்கிறேன் அப்படி அவன் முன் வராவிட்டால், முழுப் படைப்பிரிவிலும் உள்ள ஒவ்வொரு

போர் வீரனும் தனது வெறுமையான முதுகில் பத்துச் சாட்டையடிகளை ஏற்றுக் கொள்ள வேண்டியதாகும். ஆனால் உங்களில் யாராவது ஒருவர் முன் வந்து தண்டனையை ஏற்றுக் கொள்வீர்களானால் மற்றவர்கள் தண்டிக்கப் பட மாட்டார்கள்" என்று அறிவித்தார் அவர்.

சில நிமிடங்கள் நிசப்தத்திற்குப் பிறகு, வில்லி முன்னே வந்து, "சார், 'உங்களில் யாராவது ஒருவர் முன்வந்து தண்டனையை ஏற்றுக் கொள்வீர்களானால் மற்றவர்கள் தண்டிக்கப்பட மாட்டார்கள்' என்று இப்பொழுது சொன்னீர்களே, சார், நான் அந்த ஒரு ஆண் மகனாக இருப்பேன்". என்று சொன்னான். மிகுந்த கோபத்தோடு கர்னல், அந்தக் கோழைகளின் கூட்டத்தைப் பார்த்து, "உங்களுடைய தண்டனையை இந்தப் பாவமறியாச் சிறுவன் ஏற்றுக் கொள்ளும்படி விட உங்களுக்கு எப்படித் தான் மனது வந்ததோ?" என்று இரைந்தார். யாரும் அசையவில்லை. அப்பொழுது அந்த கர்னல்,"அப்படியானால், ஒரு குற்றமுள்ள மனிதனுக்காக ஒரு பாவமும் அறியாத ஒரு சிறுவன் தண்டிக்கப் படும் கொடுமையான காட்சியை நீங்கள் எல்லாரும் பார்ப்பீர்கள்" என்றார்.

தாம் சொன்னபடியே, கர்னல் சிறுவனின் ஆடைகளைக் களைந்து, வெறும் முதுகைக் காட்டச் சொன்னார். சாட்டையின் கொடூர அடிகள் ஆரம்பித்தன. கடுமையான அடிகள் தாங்காமல் வில்லி மயக்கமுற்றபோது, அதற்கு மேலும் அந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக்காதவனாக, திடீரென்று பில் முன்னுக்கு வந்தான் :

"நிறுத்துங்கள் ! நான்தான் அந்தத் திருடன். நானே எனக்குரிய தண்டனையைப் பெற்றுக் கொள்வேன்!" என்று அலறினான். சற்றே மயக்கம் தெளிந்த வில்லி அன்புடன் பில்லை நோக்கியவனாக, "பரவாயில்லை, பில், கர்னல் தான் சொன்ன வார்த்தையை இப்பொழுது மீற முடியாது. நானே உனது தண்டனை முழுவதையும் ஏற்றுக் கொள்கிறேன்" என்றான். அப்படியே ஏற்றுக் கொண்டான்!

அந்தக் கடுமையான அடிகளின் வேதனையிலிருந்து சிறு வில்லி மீளவேயில்லை. ஆனால் வில்லி பரலோகம் செல்வதற்கு முன், இப்பொழுது மனமுடைந்து போயிருந்த பில், அவனது படுக்கையருகில் மண்டியிட்டு அழுதவாறே கேட்டான் : "ஏன் வில்லி? ஏன் எனக்காக இதைச் செய்தாய்? நீ இதைச் செய்ய நான் தகுதியுள்ளவனே அல்ல" என்றான். "பில், நான் எப்பொழுதுமே உன்னிடம் கடவுள் உன்னை எவ்வளவாக நேசிக்கிறார் என்பதைக் கூற முயன்றிருக்கிறேன், ஆனால் நீயோ அதைக் கேட்டு எப்பொழுதும் சிரிப்பாய்; நான் உன் தண்டனையை ஏற்றுக் கொண்டால், உன் பாவத்திற்காக மரிக்க உனக்குப் பதிலாக இயேசு சிலுவைக்குச் சென்றபோது அவர் உன்னை எவ்வளவாக நேசித்தார் என்பதை நீ விளங்கிக் கொள்ள அது உதவியாக இருக்கும் என்று நான் நினைத்தேன்" என்று வில்லி தெளிவாகவும், எளிமையாகவும் பதில் அளித்தான். வில்லி பரலோகம் செல்வதற்கு முன்பாக அன்பு நிறைந்த இயேசுவால் இவ்வளவு இலவசமாக வழங்கப்படும் இரட்சிப்பை பில் ஏற்றுக் கொண்டான்.

கிறிஸ்துவில், பரலோகமானது தொலைந்து போன மனுக் குலத்திற்காகத் தனது வெற்றிகரமான மீட்பின் செயல்திட்டத்தை நிறைவேற்றி முடித்தது. கிறிஸ்துவின் நம்புதற்கரிய இந்த மாபெரும் தியாகம் மற்றும் பாடுகளைத் தூண்டியெழுப்பியது அன்பு - நமது ஒவ்வொருவர் பேரிலும் தேவன் வைத்துள்ள அன்பே.

### *பரிபூரண மனிதர்*

கொல்கொதா மலை மீது மூன்று சிலுவைகள் நாட்டப்பட்டன. அவற்றில் இரண்டில் திருடர்கள் அறையப்பட்டனர். அந்தக் குற்றவாளிகளுக்கு நடுவே ஆண்டவர் இயேசுவும் ஆணிகள் கடாவப் பட்டவராய்த் தொங்கினார், அங்கேயே மரித்தார்.

தனது இறுதி வேளையில், வேதனையின் உச்ச கட்டதில் அந்தத் திருடர்களில் ஒருவன் தாங்கள் மூவருமே மரணத்திற்கு நியமிக்கப்பட்ட அந்த அரைகுறை நியாய, நீதி முறைமை பற்றிய தனது கருத்தைக் கூற விழைந்தான். தாங்கொணா வேதனையால் சித்திரவதைப் படும் தனது சொந்த உடலைப் பற்றிக் கவலை கொள்வதை விட்டு வேறு எதையோ பற்றி அவன் பேசுவது வியப்புத்தான். அவனது எண்ணங்களெல்லாம், திருடர்களாகிய தங்களுக்கும், இயேசுவுக்கும் ஒரே மாதிரியான மரணத்தை விதித்த ரோமர்களின் சட்ட திட்டங்களை நோக்கித் திரும்பின. இந்த அநியாயம் அவனை வேதனைப் படுத்தியது போல் தோன்றுகிறது. தனது மரண வேளையை நெருங்கிக் கொண்டிருந்த அந்தத் திருடன் தெளிவுடனும், தாழ்மையுடனும் மூன்று நுட்பமான காரியங்களை நிதானிக்கிறான்.

முதலாவது : *நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம்.* அந்தச் சுருக்கமான பணிவான கூற்றில் மரித்துக் கொண்டிருந்த திருடன் தான் புரிந்த குற்றங்களுக்குத் தானே பொறுப்பேற்றுக் கொள்கிறான். ஆகவே தனது சொந்தக் குற்றத்தை ஒப்புக் கொள்கிறான்.

இரண்டாவது : *நாமோ நியாயப்படித் தண்டிக்கப்படுகிறோம்....*

சிறு திருட்டுக்களும், ஏன் பெரிய கொள்ளைக் குற்றங்களும் கூட மலிந்து விட்ட நமது நாட்களில் இந்தக் குற்றங்கள் எல்லாம் முதலாம் நூற்றாண்டில் எவ்வளவு கடுமையாகக் கருதப்பட்டன என்பதை நாம் புரிந்து கொள்வது சற்றுக் கடினம் தான். ஆனால் மூன்றே மூன்று சுருக்கமான சொற்களில் மரித்துக் கொண்டிருந்த கள்ளன் தனது நாட்களில் தனக்குக் கொடுக்கப்பட்ட மரண தண்டனை நியாயமானது, நீதிக்கு ஏற்றது என்பதை அறிக்கையிட்டான். நாமோ... நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்.

மூன்றாவது : *இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே.* அந்தத் திருடன் எப்படித் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டான் என்றும் சட்ட அமைப்பு வழங்கிய தண்டனையை எப்படி நியாயமானது என்று அறிக்கையிட்டான் என்றும் வாசிப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாக இருந்த போதிலும், தனக்கு அருகே சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவைப் பற்றிய அவனது கரிசனையைப் பற்றி வாசிப்பது நம்மைத் திகைப்பில் ஆழ்த்துகிறது. இவர் - இந்த இயேசு, குற்றமற்றவர் - எனவே அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது அநியாயம் என்று அந்த மரிக்கும் கள்ளன் நிதானிக்கிறான்.

தனது பாவத்திற்காகப் பாவ உணர்வடைந்த கள்ளனுக்கு சிலுவையில் தொங்கியவாறே, இயேசுவை நோக்கிப் பார்ப்பதை விட வேறு வழியில்லை. எனவே அவன் மனமுருகி வேண்டிக் கொண்டான்: ஆண்டவரே *நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்,* இப்படிப்பட்ட உண்மையான பாவ அறிக்கையையும், உதவிக்கான கெஞ்சுதலையும் கேட்கும்போதெல்லாம் தாம் எப்பொழுதும் பதிலளிக்கும் வண்ணமாகவே அவனுக்கும் ஆண்டவர் இயேசு உடனடியாக : *இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசில் இருப்பாய் என்று வாக்குப் பண்ணினார். (லூக்கா 23:39-43).*

அந்த நாளிலே மரித்துக் கொண்டிருந்த அந்த கள்ளன் தங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி ஆண்டவரை நோக்கித் திரும்பும் மற்ற எல்லாப் பாவிகளையும் போலவே நித்திய ஜீவனின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டான், அவன் சரியான நபரிடம் - ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் திரும்பி சரியான இடத்திலே - இயேசு மரித்த சிலுவையிலே அவரது இரக்கத்திற்காகக் கெஞ்சினான்.

ஆம், அந்தப் பயங்கரமான நாளிலே மரித்துக் கொண்டிருந்த இரு கள்வர்களில் ஒருவனது கண்களுக்கு கர்த்தராகிய இயேசு குற்றமற்றவராகக் காட்சியளித்தார். எனினும் சில காலங்களுக்குப் பிறகு இரண்டு சீடர்கள் இதையும் விடத் திட்டவட்டமாக நிதானித்துக் கூறினர். அவர்கள் இயேசு பாவமற்றவர் என்று சாட்சி கொடுத்தனர். இந்தச் சீஷர்கள் இருவருமே

அப்போஸ்தலனாகிய பவுலுடன் சேர்ந்து இயேசுவின் பாவமற்ற தன்மை குறித்து தனிப்பட்ட முறையில் சாட்சியிட்டனர்.

ஆண்டவர் இயேசுவின் நெருங்கிய நண்பரான பேதுரு செயலிலிறங்கத் துடிக்கும் வேகம் மிக்க மனிதர். எனவே இயேசுவின் பாவமற்ற தன்மை பற்றி சாட்சி பகர தனது இயல்புக்கு இசைந்தவாறு செய்கையைத் தெரிவிக்கும் ஒரு பதத்தைப் பயன்படுத்தினார். அவர் (ஆண்டவராகிய இயேசு) *பாவம்* செய்யவில்லை. *(1 பேது. 2:22).*

யோவானும், ஆண்டவர் இயேசுவுடம் நட்புறவு கொண்டவர். விளைவாக அவர் இயேசு மக்களை விட்டு, கூட்டத்தை விட்டு, தனியே இருக்கும் 'வேளைகளில் அவரை நன்றாக நிதானித்து அறியக்கூடிய வாய்ப்பை அடிக்கடி பெற்றார். இந்தக் கண்ணோட்டத்திலிருந்து யோவான் தெளிவாக சாட்சி பகருகின்றார். *அவரிடத்தில்* (ஆண்டவராகிய இயேசுவில்) பாவமில்லை. *(1 யோவான் 3:5).*

இதற்கு மாறாக, பவுல், பெயரும் புகழும் பெற்ற சிறந்த அறிஞராகக் கருதப்பட்டவர். எனவே கல்வித் திறனும், அறிவுக்கூர்மையும் படைத்த மனிதராகிய பவுல், இயேசுவைப் பற்றிக் கூறியபோது: பாவம் அறியாத அவர் இன்று குறிப்பிட்டதில் வியப்பு எதும் இல்லை. (2 கொரிந்தியர் 5:21).

இப்படி கிறிஸ்துவின் பாவமற்ற வாழ்க்கையைக் குறித்து மூவர் உண்மையாகச் சாட்சியிடுவது அதி

அற்புதமான காரியம் என்றாலும், இந்த நுட்பமான கருத்துக்களை சிலர் ஏற்க மறுக்கலாம் "ஆஹா, மரித்துக் கொண்டிருந்த கள்ளனும் சரி, பேதுரு, யோவான், பவுல் ஆகிய அப்போஸ்தலர்களும் சரி, உணர்ச்சி வயப்படாத சரியான சாட்சிகளாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. மரித்துக்கொண்டிருந்த திருடன் நிர்ப்பந்தமான நிலையில் தொங்கிக் கொண்டிருந்தான். அப்போஸ்தலர்கள் ஆண்டவர் இயேசுவின் மீது வைத்திருந்த பக்தியின் மிகுதியினால் இப்படிப் பேசினார்கள்" என்று அவர்கள் கூறலாம். அதெல்லாம் சரிதான், அப்படியானால் யூதேயாவை ஆட்சி செய்த ரோம ஆளுநரான பொந்தியு பிலாத்து கூறியது என்னாவது? அவன் நிச்சயமாக கிறிஸ்துவின் நண்பனல்லன், இருந்த போதிலும் இயேசுவிற்கு எதிராகப் பொய்க்குற்றங்களைச் சாட்டிய அவரை மரண தண்டனைக்கு உள்ளாக்கும் எண்ணத்துடன் போலியான சாட்சிகளை உருவாக்கிய மனிதர்களைப் பார்த்து பிலாத்து கூறியதாவது.

> *நான் உங்களுக்கு முன்பாக விசாரித்த போது, இவன் மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. (லூக்கா 23:14).*

ஆனால் பிதாவாகிய தேவன் பரலோக சிங்காசனத்திலிருந்து கொடுக்கும் அறிவிப்பிற்கு முன் இந்த மனித சாட்சியங்கள் எல்லாம் எம்மாத்திரம்? ஒரு நபர் பொது மேடையொன்றில் பேசுவதற்கு முன் அவர் மரியாதையுடன் கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டியது சரியான தகுதியான காரியம். அது போலவே, இயேசு தமது பொது ஊழியத்தை ஆரம்பிக்க

இருக்கையில் தமது அன்பின் குமாரனை அறிமுகம் செய்து வைக்கும் சிலாக்கியத்தை பிதாவாகிய தேவன் தமக்கென ஒதுக்கிக் கொண்டார். பரலோகத்திலிருந்து எக்காளம் போன்ற தொனியாய் முழங்கி, பிதாவானவர் அறிவித்தார்: *இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். (மத்தேயு 3:17).*

இயேசு இந்த உலகில் மனித உருவில் வாழ்ந்தபோது, மனிதன் எவ்விதமாக வாழ வேண்டுமென்று கடவுள் அவனைப் படைத்திருந்தாரோ அவ்விதமாக வாழ்ந்தார் என்பதைப் பிதாவானவர் அறிந்திருந்தார். அவரைத் தவிர மற்ற அனைவரும் *கடவுளின் மகிமைக்குக் குறைவு பட்டவர்களே (ரோம 3:23).* ஆனால் இயேசு அப்படியல்ல! அவர் எல்லா விதங்களிலும் பரிபூரணர், சற்குணர். எனவே, இயேசு தமது பொது ஊழியத்தை ஆரம்பிக்கப் போகையில், அவரது பிதா அவரை அறிமுகப்படுத்தி வைத்தார், தமது குமாரன் வாழ்ந்த விதத்தைக் கண்டு தமது மனமகிழ்ச்சியை வெளிப்படுத்தியவர் அந்தப் *பரிசுத்தப் பிதாவே (யோவான் 17:11).*

நாம் ஏற்கனவே விளக்கியபடி, ஆண்டவராகிய இயேசு ஒருபொழுதும் கடவுளை விடக் குறைவானவராக இருந்ததில்லை. எனவே, கடவுள் தம்மைத் தாழ்த்தினார். ஒரு கன்னியாகிய தாயின் வயிற்றில் பிறக்கும் அளவிற்குத் தம்மைத் தாழ்த்திக் கொண்டார், மனித உருவை எடுத்துக் கொண்டார் என்பதை உணர்ந்து பார்க்கும்போது அது மிகுந்த ஆச்சரியமாய் இருக்கிறது. எனினும், ஒரு மனிதனாக இயேசு தமது பரம பிதாவுக்கு முற்றிலும் பணிந்து நடந்திருக்கவில்லை எனில், அவர் தமது

பிதாவுக்கு இவ்வளவு மகிழ்ச்சியை நிச்சயமாகத் தந்திருக்க முடியாது. ஆனாலும், தாம் பூமியில் ஒரு வழிப்போக்கன் போல வாழ்ந்த காலம் எல்லாம், இயேசு தமது பிதாவுக்குக் கீழ்ப்படிந்தும், அவரைச் சார்ந்துமே வாழ்ந்தார். இப்படியாக அவரது மானிடத் தன்மையானது, அவரது பரம பிதாவின் பரிசுத்தம், அன்பு மற்றும் நோக்கத்தின் பூலோக வெளிப்பாடு ஆயிற்று.

ஆம், ஒரு மனிதனாக இயேசு, தாம் கடவுளாக உருவாக்கிய அதே பூமியின் மீது நடந்து திரிந்தார். ஆண்டவராகிய இயேசு ஒரு போதும் கடவுளை விடக் குறைவானவராக இருந்ததில்லை என்ற போதிலும், மனிதன் எப்படி வாழும்படி கடவுள் விரும்புகிறார் என்பதை 33 ஆண்டுகளாக மனிதனுக்கு எடுத்துக்காட்டி வாழ்ந்தார். இயேசுவின் மானிடத்தன்மையில் இருந்த எதுவும் கடவுள் மனிதனை எப்படி இருக்கும்படி உருவாக்கினாரோ அதற்கு விரோதமானதாக இருக்கவில்லை. அந்த வருடங்களில் அவர் பரலோகத்திலிருந்த தமது பிதாவுக்கு எப்பொழுதும் முற்றிலும் ஒட்டக் கூடியவராய் இருந்தார். எனவேதான், மானிடர் நடுவில் பரிபூரண மனிதராக வாழ்ந்த தமது அன்பின் குமாரனைப் பார்த்தபோது பிதா அவரில் மிகவும் மகிழ்ந்தார்.

குற்றம் இல்லாதவர்! பாவம் அற்றவர்! பரிபூரணர்! மரித்துக் கொண்டிருந்த திருடனுக்கும், பொந்தியு பிலாத்துவுக்கும் இயேசு குற்றமற்றவராய் தோன்றினார். பேதுரு, யோவான், பவுலுக்கு அவர் பாவமில்லாதவராகக் காணப் பட்டார். பரலோகத்தின் பரிசுத்த பிதாவுக்கு இயேசு பரிபூரண சற்குணராக இருந்தார்.

குற்றமில்லாதவர்! பாவமற்றவர்! பரிபூரணர்! - என்ற போதிலும் அவர் நமக்காக மரித்தார் : நம் ஒவ்வொருவர் பேரிலும் வைத்த அன்பின் மிகுதியினால் நமக்காக மரித்தார் !

## எல்லையில்லா அன்பு

இப்பொழுது, உனது கற்பனையில், அந்த முதல் "பெரிய வெள்ளி" தினத்தன்று நடைபெற்ற பயங்கரமான காட்சிகளைக் கண்ட மற்றவர்களுடன் நீயும் சேர்ந்து கொள். சிலுவையைச் சுற்றி நின்ற மக்கள் வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தக் கோரக் காட்சியை அவர்கள் பார்த்து நிற்கையில், வித்தியாசமானதொரு அதிர்ச்சி தரும் பயங்கரக் காட்சியையும் எதிர் கொண்டனர்.

இயேசுவின் இரு பக்கங்களிலும் இரு குற்றவாளிகள் தொங்கிக் கொண்டிருந்தனர். இவர்கள் இருவரும் தங்கள் சக மனிதர்கள் முன்பாகக் குற்றமுள்ளவர்கள், இருவருமே தங்களைப் படைத்த கடவுள் முன்பாகக் குற்றமுள்ளவர்கள், அவர்கள் இருவருக்கும் நாட்டுச் சட்டத்தின்படி மரண தண்டனை அளிக்கப்பட வேண்டும்.

இவர்கள் இருவருக்கும் நடுவே இயேசு தமது சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தார். அந்தக் கள்வர்களோடு ஒப்பிடுகையில் இயேசு மனிதர்கள் முன்பாகப் பாவமற்றவர், குற்றமில்லாதவர் என்பதோடு கூட, தமது பரிசுத்த பிதாவின் முன்பாகப் பரிபூரணம் உள்ளவராயும் இருந்தார். *கடவுள்... கிறிஸ்துவுக்குள் (2 கொரிந்தியர் 5:19) குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்*

குட்டியாக *(1 பேதுரு 1:19)* சிலுவைக்குச் சென்றார். பாவமுள்ள மனிதனுக்குப் பதிலாக கிறிஸ்துவின் மரணமானது கடவுளுடைய அன்பு நிறைந்த இருதயத்தால் மனமுவந்து அருளப்பட்டது.

திருடர்கள் மரிக்க வேண்டியவர்கள் தான், ஆனால் ஆண்டவராகிய இயேசுவோ நிச்சயமாக மரிக்க வேண்டியவர் அல்லர். முன்னர், தம்மைக் குறை கூறியவர்களிடம் பேசுகையில் இயேசு : *நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும் படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாய் இருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ள மாட்டான் நானே அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு... (யோவான் 10:17,18)* என்று உறுதிபட உரைத்தார். தமது அன்பு எந்த அளவிற்கு விரைவில் பரந்து வியாபிக்கப் போகிறது என்பதைத் தமது சீஷர்களிடம் விளக்குகையில் அவர் : *ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை* என்றார். *(யோவான் 15:13).*

ஆண்டவராகிய இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அப்போஸ்தலனாகிய பவுல் மேலும் வலியுறுத்தினார் : கடவுள் கிறிஸ்துவில் வெளிப்பட்டார்... *நாம் அவருக்குள் (கிறிஸ்து) தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். (2 கொரி. 5:21).* பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, நமது பாவங்களுக்காக நமது இடத்தில் கிறிஸ்து மரித்தார் என்ற உண்மை இந்த

வார்த்தைகளில் மிக அழகாக, அர்த்தத்துடன் வெளிப்படுகிறது.

நீர் என் நீதியானீர்,
நான் உமது பாவமானேன்,
என்னுடையதை நீர் ஏற்று
உம்முடையதை எனக்குத் தந்தீர்,
நான் எப்படி இருக்கவில்லையோ அப்படி
ஆவதற்காக
நீர் எப்படி இருக்கவில்லையோ அப்படியானீர்.

## கோதுமை மணி

தனது மரணம் சமீபித்து விட்டது என்று நன்றாக அறிந்திருந்த ஆண்டவர் இயேசு தமது உள்ளம் திறந்து தமது சீஷர்களிடம் கூறியதாவது :

*இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது. நான் என்ன சொல்லுவேன், பிதாவே இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ, ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்.* இப்படி தேவ மகிமைக்கு முழுமனதோடு அவர் செய்த அர்ப்பணத்திற்குப் பதிலளிக்கும் விதமாக : *மகிமைப் படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன்* என்று பிதா வெற்றி முழங்கும் தொனியில் கூறினார். (யோவான் 12:27,28).

இப்பொழுது நீ ஒரு வேளை, "சிலுவையில் அறையப்படுதல் போன்ற ஒரு கோரக் காட்சியின் மூலம் கடவுள் மகிமைப்படுவாரா, என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?" என்று கேட்கலாம்.

சரி, பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையே நடைபெற்ற இந்த உரையாடலின் முக்கியக் கூற்றைக் கவனிப்போம். இயேசு அப்பொழுதுதான் தமது சீஷர்களுக்கு என்ன கற்றுக் கொடுத்தார் என்பதை நினைவு படுத்திக் கொள் :

*மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும் (யோவான் 12:24).*

ஆம், பரிபூரண மனிதராகிய இயேசு ஒரு போதும் சாகாமலே நேராகப் பரலோகம் சென்றிருக்க முடியும். மரணத்திற்கு அவர் மேல் எந்த உரிமையும் கிடையாது, ஏனெனில் மனுக்குலம் முழுவதிலும் அவர் ஒருவரே குற்றமில்லாதவர், பாவமற்றவர், பரிபூரண பரிசுத்தர். ஆனால் நீயும் நானும் பரலோகம் சென்று அவரோடு வாழ்வதைச் சாத்தியமாக்குவதன் மூலமாகத் தமது பிதாவை மகிமைப் படுத்துவதை அவர் தெரிந்து கொண்டார். என்ன அற்புதம்! என்னே அவரது அன்பின் மாட்சி!

அவர் மட்டும் மரித்திருக்கவில்லை என்றால், தம்மோடு பரலோகத்திற்கு எடுத்துச் செல்ல ஆவிக்குரிய விளைச்சல் எதுவும் இயேசுவுக்கு இருந்திருக்காது. நானும் நீயுமோ என்றென்றுமாய், நித்திய காலமாய் தொலைந்து போயிருப்போம்.

இப்பொழுதோ, இயேசுவின் மரணத்திற்கு நீ தனிப்பட்ட விதத்தில் என்ன உத்தரவு கொடுக்கிறாய்

என்பதன் மூலம் உனது நித்தியத்தை எங்கே கழிக்கப் போகிறாய் என்பதை நீயே தீர்மானிக்க முடியும். இது உனக்கு நம்புவதற்கு அரிதாக இருக்கலாம் - ஆனால் அவர் வழங்கும் மன்னிப்பைச் சிலர் நிராகரித்து விடுவார்கள். வேறு சிலர் அவரது அன்பின் தியாகத்தை நிராகரிக்கவும் செய்யாமல், ஏற்றுக் கொள்ளவும் இல்லாமல் நடுநிலை வகித்தார்கள். ஒரு நபர் இயேசுவை ஏற்காமல் நிராகரித்தாலும், அல்லது அவரைப் பற்றி ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டாலும் இரண்டிற்கும் ஒரே பலன்தான் : ஜீவன், ஒளி மற்றும் அன்பின் ஒரே ஆதாரத்திடம் இருந்து என்றென்றுமாய் பிரிக்கப்படுவது. இந்தப் பயங்கரமான நிலைமை பின்வரும் வரிகளில் விவரிக்கப் படுகிறது

நீ சாகவே சாவாய்,
அப்படியொரு சாவாக சாவாய்,
நித்திய காலமாக சாவாய்,
எப்பொழுதும் செத்துக் கொண்டே இருப்பாய்,
எனினும் சாகவே மாட்டாய்

ஆனால், தேவனுடைய அன்பின் இரக்கத்தினால்: இயேசுவிடம் நீ ஒரு பாவி என்றும் உனது பாவத்தின் பரிகாரத்திற்கு எதையும் செய்ய முடியாதவன் என்றும் நீ அறிக்கையிட்டால்; உனது பாவங்களுக்காக, உனக்குப் பதிலாக இயேசு மரித்தார் என்று நம்பி அவரது மரணத்தில் நீ விசுவாசம் வைத்தால்; நீ உனது பாவத்தை விட்டுத் திரும்பி உனக்காக மரித்ததற்காக அவருக்கு நன்றி சொல்லி, அவரை உனது உள்ளத்திற்குள்ளும் வாழ்க்கையினுள்ளும் வர அழைத்தால்; அப்பொழுது

ஆண்டவராகிய இயேசு உலக்கென்று தனிப்பட்ட விதத்தில் இந்த வாக்குத்தத்தத்தை அருளுகின்றார்.

*நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் ..... நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும் படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன் (யோவான் 16:28;14:3)*

எனினும், நித்திய ஜீவன் என்பது எனக்கு எதிர்காலத்தில் பரலோகம் உண்டு என்ற நிச்சயம் மட்டுமல்ல, அது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்பும், நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் மகிமை நிறைந்த, தற்கால உண்மை நிலையும் ஆகும். அப்படிப்பட்ட மக்களுக்குக் கடவுள் வாக்களிப்பதாவது:

*தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது என்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன் ... (1 யோவான் 5:11,12).*

நித்திய ஜீவன் என்பது ஒரு நபரில் - ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் இருக்கிறது. அவர் மனித உள்ளத்தை தமது வாசஸ்தலமாக ஆக்கிக் கொள்ளும் பொழுது, அந்த விநாடியில் தானே நித்திய ஜீவன் ஆரம்பமாகிறது.

## அளவிடற்கரிய கிரயம்

நாம் ஏற்கனவே பார்த்தபடி, நாம் கடவுளோடு என்றென்றுமாய் வாழ வேண்டுமெனில் நமது பாவம் என்ற பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டு பிடித்தாக வேண்டும். நமது வாழ்க்கையில் உள்ள பாவத்திற்குப் பரிகாரம், இயேசுவின் மரணத்தில் கிடைக்கிறது. கடவுளின் பரிசுத்தம், கடவுளின் நீதி மற்றும் கடவுளின் அன்பு ஆகிய அனைத்தும் கிறிஸ்துவின் சிலுவையில் சந்தித்தன. அங்கே, அவரது பரிசுத்தம் பாதுகாக்கப் பட்டது; அவரது நீதி நிறைவேற்றப் பட்டது; அங்கே கடவுளின் அன்பு உன்னையும் என்னையும் போன்ற பாவம் நிறைந்த மக்களைத் தழுவிக் கொண்டது.

தமது தின தியான நூலாகிய "My Utmost for His Highest" (அவரது மிக உன்னதமானதற்காக எனது மிக உயர்ந்தது) என்பதில் ஆஸ்வால்ட் சேம்பர்ஸ் இந்த எச்சரிப்பை விடுக்கிறார்:

"தேவன் மிகுந்த தயவும் அன்புமுள்ளவர், நிச்சயமாக நம்மை மன்னித்து விடுவார்' என்று கூறும் கடவுளின் பிதாத் தன்மை குறித்த இன்பமான கண்ணோட்டத்தைப் பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். இந்த உணர்ச்சி வசப் பட்ட முடிவுக்கு புதிய ஏற்பாட்டில் எங்குமே ஆதாரம் கிடையாது. கடவுள் நமது பாவத்தை மன்னித்து, மீண்டும் தமக்குப் பிரியமானவர்களாக நம்மை ஆக்கிக் கொள்ள ஒரேயொரு ஆதாரம் கிறிஸ்துவின் சிலுவை மட்டுமே, அதையன்றி வேறு வழியேதும் கிடையாது. இது உண்மை என்பதை நாம் புரிந்து கொண்டாலும் கூட, எளிய

விசுவாசத்தினால் பாவ மன்னிப்பை ஏற்றுக் கொண்டு அதன் பிறகு, அது நமக்குச் சொந்தமாவதற்குக் கடவுள் எவ்வளவு பெரிய விலைக் கிரயம் செலுத்த வேண்டியதாயிற்று என்பதை நாம் மறந்து விடக் கூடும்."

வில்லி ஹேறால்ட் என்ற சிறுவனின் தன்னலமற்ற செய்கையை நாம் முன்னர் குறிப்பிட்டிருந்தாலும், கடவுள் நம் மீது வைத்த தமது அன்பை விளக்கிக் காட்டுவதற்காகக் கல்வாரியில் எவ்வளவாய்ப் பாடுபட்டார் என்பதற்கு எந்த மானிடப் பாடுகளும் எவ்விதத்திலும் ஈடு இணையாகா. இப்படிப்பட்ட தமது தியாக அன்பின் முழு மாட்சிமையையும் நமக்குக் காண்பிக்கும் படியாகக் கடவுளே தாம் போட்டிருந்த திரையை, நாம் பரிசுத்த வேதாகமம் என்று அழைக்கும் ஆவியானவரின் ஏவுதலினால் எழுதப் பட்ட திருவசனத்தின் மூலமாக நீக்கிப் போடுகிறார். அப்பொழுதும் கூட, அவரது அன்பின் மாட்சியானது, ஒரு வரையறைக்குட்பட்ட நமது புரிந்து கொள்ளும் திறனுக்கு மிக மிக அப்பாற்பட்டதாகவே இருக்கிறது. எனினும் வியத்தகும் இந்த அன்பின் செயலை மீண்டும் மீண்டும் தியானிப்பதன் மூலமாக, கடவுளுடைய அன்பின் நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும் ஆழத்தையும் ஓரளவிற்கு நாம் மதித்துப் பாராட்ட ஆரம்பிப்போம்.

இயேசு சிலுவையில் மரித்தபொழுது நமது பாவங்களுக்காக அவர் மூன்று விதத்தில் பாடுபட்டார்.

சிலுவை மீதிலே இயேசுவின் சரீரம் தாங்கொணா வேதனைக்குட்பட்டது; சிலுவை மீதிலே அவரது அன்பு இனி தாங்காது என்று சொல்லுமளவிற்கு இழுக்கப்பட்டது; இதையெல்லாம் விட பெரிய வேதனை

என்னவென்றால், சிலுவை மீதிலே இயேசு, தாம் பிதாவோடு ஒன்றாய் இருப்பதன் மூலம் என்றென்றுமாய் அனுபவித்திருந்த ஒளி, மகிமை மற்றும் சமாதானம் ஆகியவற்றினின்று துண்டிக்கப் பட்டார்.

ஆம், சிலுவை மீதில் இயேசு சகித்த பாடுகளை மானிடர்களாகிய நாம் புரிந்து கொள்வது இயலாதது. ஆனாலும், அவரது சரீர வேதனை, அவரது உணர்ச்சிகளின் வேதனை இன்னும் குறிப்பாக அவரது ஆவிக்குரிய வேதனை இவை பற்றி நாம் தியானிக்க தியானிக்க, பாவம் நிறைந்த மக்கள் பேரில் அவர் எவ்வளவாய் அன்பு வைத்திருக்கிறார் என்பதை ஒரு புதிய விதத்தில் நாம் பாராட்ட ஆரம்பிப்போம்.

**சரீரத்தில் வேதனை:** விலைமதிப்பற்ற ரெம்ப்ரான்ட்ஸ் ஓவியம் ஒன்று நாசமாக்கப் படுவதையும், ஓர் அழுக்குப் படிந்த குப்பைக் காகிதம் கிழிக்கப் படுவதையும் ஒப்பிடுவது என்பது சாத்தியமற்ற காரியம். அதையும் விட அதிகமாக, பரிபூரண புருஷரான கிறிஸ்து இயேசுவின் மரணமானது, வேறெந்த மனிதனுடைய மரணத்தோடும் ஒப்பிடப் படுவது சாத்தியமே அல்ல.

பழைய ஏற்பாட்டில், பிற்காலத்தில் இயேசு சகிக்கப் போகிற அகோரமான சரீரப் பாடுகளைப் பற்றி வெகு திட்டவட்டமாக உரைக்கும் ஒரு தீர்க்கதரிசனத்தைக் காண்கிறோம். அவரது ரூபம் இவ்வளவு அந்தக் கேடு (அகோரம்) அடைந்தது என்று அங்கே பார்க்கிறோம் (ஏசாயா 52:14). எனினும், ஆங்கில மொழிபெயர்ப்போ, தமிழ் மொழிபெயர்ப்போ அந்தப் பதத்தின் மூல எபிரெயப் பதத்தின் முழுமையை, கடுமையைத் தெளிவு படுத்துவதாயில்லை. அந்த வாக்கியத்தில், தமது அன்பின்

குமாரன், மனிதனுடைய சாயல் அல்லது முகச் சாடையை முற்றிலுமாக இழந்து விடுமளவிற்கு அவ்வளவாய் மிருகத்தனமாகச் சித்திரவதை செய்யப் பட்டார் என்று கடவுள் விளக்குகின்றார். கிறிஸ்துவின் சரீரம் இவ்வளவாய் உபாதிக்கப் படுவது, சித்திரவதைக்கு உள்ளாவது பற்றி இயேசு தாமே தீர்க்கதரிசனமாக உரைத்தார்:

> *இதோ எருசலேமுக்குப் போகிறோம்: அங்கே மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப் படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, புறத்தேசத்தாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள். அவர்கள் அவரைப் பரியாசம் பண்ணி, அவரை வாரினால் அடித்து, அவர் மேல் துப்பி, அவரைக் கொலை செய்வார்கள் (மாற்கு 10:33, 34).*

அப்படியே தான் நடந்தது! பின்னர் மாற்கு கண்ணால் கண்ட சாட்சிகள் என்ன பார்த்தனர் என்பதை விவரிக்கிறார். முதலாவது அவர்கள் அவரை **அடித்தனர்,** பிறகு அவர் மேல் **துப்பினர்,** அவரைப் பரியாசம் **பண்ணினர்,** அதன் பிறகு அவரைச் சிலுவையில் **அறைந்தனர்** (மாற்கு 15:19, 20).

இரட்சகரின் உடலைச் சின்னாபின்னமாக்கிய ரோமர்களின் சாட்டையானது கூர்மையான எலும்புத் துண்டுகள் அல்லது கனமான ஈயக் குண்டுகள் பிணைக்கப் பட்ட தோலினால் ஆன வார்களைக் கொண்டது. இவை அவரது மார்பிலும் முதுகிலும் உள்ள

சதையைக் கொடூரமாகப் பிளந்தன. ஆகவே தான் மேசியா இப்படிக் கூறுவார் என்று சங்கீதத்தில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்படுகிறது.

....... *என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள். என் எலும்புகளை எல்லாம் நான் எண்ணலாம், அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் (சங்கீதம் 22:16,17).* ஆம், கர்த்தராகிய இயேசு - எல்லா விதங்களிலும் குறைவற்ற சம்பூரணர் - வேதனை மிக்க, கொடிய சாவை நோக்கிச் சென்றார். அவர் சகித்த கொடூரமான சரீர உபாதைகள் அவர் ஒரு மனிதர் என்று கூட அடையாளம் காண முடியாத அளவிற்கு அவரை அலங்கோலமான, அகோரக் காட்சியாக மாற்றிப் போட்டன.

கடவுள் உன்னை எவ்வளவாக நேசிக்கிறார் என்பதை நீ புரிந்து கொள்ள இது இன்னும் சற்று உதவுகிறதா?

**உணர்ச்சிகளில் வேதனை:** சிலுவையில் அறையுண்ட கர்த்தராகிய இயேசுவின் சரீரப் பாடுகள் நமது மானிடப் புரிந்து கொள்ளும் திறனுக்கு அப்பாற்பட்டது என்றாலும் அவை அவரது உண்மையான பாடுகளின் ஒரு பகுதி மட்டுமே. அவரது சரீர வேதனை, அவரது உள்ளான ஆழமான அகோர வேதனையின் மேற்பரப்பை மட்டுமே தொட்டது எனலாம்.

சிலுவையின் மீதில் அவர் மிகுந்த மனவேதனையையும் அனுபவித்தார். அந்தப் பயங்கரமான நேரத்தின் சம்பவங்களை யோவான் நமக்கு எடுத்துக் கூறுகின்றார்

*அவர்கள் (ரோமப் போர்ச்சேவகர்கள்) இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய கால் எலும்புகளை முறிக்கவில்லை. ஆகிலும் போர்ச் சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது (யோவான் 19:33, 34).*

இரத்தமும் தண்ணீரும் வெளி வந்தன என்பது இயேசு உடைந்த உள்ளத்தினால் மரித்தார் என்பதைக் காட்டுகிறது என மருத்துவ நிபுணர்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். சில இருதய நிபுணர்கள் இன்னும் ஒரு படி மேலே சென்று, இயேசுவின் இதயம் உண்மையாகவே உடைந்த பொழுது, அவரது இரத்தம் இதயத்தைச் சுற்றி ஒரு பை போல் அமைந்துள்ள பெரிகார்டியம் என்ற பகுதியில் கசிந்து பரவியது என்று விளக்கம் தருகின்றனர். போர் வீரன் அவரது விலாவில் குத்திய போது, இரட்சகரின் விலாவிலிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது எவ்வாறு என்பதை இது விளக்குகின்றது. அறுபத்து ஒன்பதாம் சங்கீதத்தில் கிறிஸ்துவின் மரணம் பற்றித் துல்லியமாக உரைக்கும் பல்வேறு தீர்க்கதரிசனங்களோடு கூட, இதயத்தைப் பிளக்கும் அவரது கொடிய துயரத்தின் சாயலையும் பற்றி வாசிக்கிறோம்: *நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது; நான் மிகவும் வேதனைப் படுகிறேன் ..... (சங்கீதம் 69:20).* ஆம், இயேசுவின் விவரிக்க முடியாத மன வேதனை அவரது அன்பின் உள்ளத்தைச் சுக்கு நூறாக உடைத்தது.

அவரது அன்பின் இதயத்தின் குறுக்கே, முழு மனுக்குலத்தின் மொத்தப் பாடுகளும் பொங்கிப் பாய்ந்த பொழுது; அவரது மாசற்ற ஆத்துமாவின் மீது பாவிகளிடம் சேராத, பரிசுத்தமான அவரது ஆத்துமாவின் மேல் (எபிரெயர் 7:26) - எண்ணியும் பார்க்க முடியாத, எழுதியும் காட்ட முடியாத நரகத்தின் அவ்வளவு அலங்கோலமும் பிரவாகித்துச் சென்ற பொழுது, கர்த்தராகிய இயேசு உடைந்த உள்ளத்தினால் மரித்தார்.

கடவுள் உன்னை எவ்வளவாக நேசிக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள இது இன்னும் உதவுகிறதா?

**ஆவியில் வேதனை:** இன்னும், சிலுவை மீதிலே ஆண்டவர் இயேசு: *என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? (மத்தேயு 27:46)* என்று கதறினார். நாம் ஏற்கனவே பார்த்தபடி, நமது பாவத்தின் காரணமாகவும், பிறப்பிலேயே நமக்குள்ள பாவத் தன்மையின் காரணமாகவும் நாம் எல்லாருமே கடவுளுடன் நெருங்கிய உறவினின்று துண்டிக்கப் பட்டிருந்தோம். பரத்திலிருந்து மட்டும் நமக்கு உதவி வரவில்லையானால் நாம் ஆவியில் மரித்தவர்களாகவே இருப்போம். ஆனால் கர்த்தராகிய இயேசு - பரிசுத்த ஆவியினாலே ஒரு கன்னியின் வயிற்றில் உற்பவித்திருந்தாலும் - தமது வாழ்க்கை முழுவதும் முழுக்க முழுக்கப் பாவமற்றவராக இருந்த போதிலும், சிலுவை மீதிலே அவரும் அவரது பிதாவினால் கைவிடப் பட்டார், என்னுடைய பாவத்தையும் உன்னுடைய பாவத்தையும் தம் மீது சுமந்து தீர்த்த ஒரே காரணத்துக்காக அவர் மரித்தார். நமக்காக அவர்

மரித்ததினால் அவர் தமது பிதாவினிடமிருந்து ஆவியில் உண்மையாகவே பிரிக்கப் பட்டதன் மூலம் கொடிய வேதனையை அனுபவித்தார்.

குமாரன் உனக்காகவும் எனக்காகவும் பாவமானதினாலே, பரம பிதா மற்றும் பரிசுத்த ஆவி-யானவரின் பரிசுத்த பிரசன்னம் அன்பின் நேச-குமாரனிடமிருந்து விலக்கப் பட வேண்டியதாயிற்று.

காலம் தொடங்குவதற்கு முன்னிருந்தே திரியேகக் கடவுளின் வார்த்தைகளால் விவரிக்க முடியாத மிகுந்த ஒளியில் வாசம் செய்திருந்த போதிலும், இப்பொழுதோ இயேசு தமது நித்திய மகிமையின் பரிசுத்தத்தினின்று துண்டிக்கப் பட்டார். அது தான் ஆவிக்குரிய மரணம் ஆகும்.

இயேசு சிலுவை மீதினில் தொங்கிய பொழுது நித்திய வெளிச்சமாக இருக்கும் கடவுள், பாவமாகிய இருளோடு ஒன்று சேர்ந்து வசிக்க முடியாமற் போனது. எனவே, இயேசு உன்னுடைய, என்னுடைய பாவத்துக்காக மரித்த பொழுது இந்தத் துன்மார்க்க உலகம் மூன்று மணி நேரங்கள் திகிலூட்டும் காரிருளில் மூழ்கிக் கிடந்தது என்பது ஒன்றும் வியப்பூட்டும் காரியமல்லவே.

கதிரவன் காரிருளுக்குள் ஒளித்துக் கொண்டது.
தன் மகிமையனைத்தும் மறைத்துக் கொண்டது.
கிறிஸ்து, மாவல்ல சிருஷ்டிகர், சிருஷ்டியாம்
மனிதனின் பாவத்துக்காய் மரித்த போது

*ஐசக் வாட்ஸ் (1674 - 1748)*

பிறகு, கடவுளின் சர்வ வல்லமையினால், இயேசு தமது பூதவுடலுடன் மீண்டும் உயிரோடு எழுப்பப் பட்டார், அவரது பிதாவுடன் அவரது ஆவிக்குரிய உறவு, ஐக்கியம் என்றென்றுமாக மீண்டும் நிலைநாட்டப் பட்டது. ஆம், சரீரப் பிரகாரமாக, ஆவியில், நித்தியா நித்தியமாய் கர்த்தராகிய இயேசு இனி என்றென்றுமாய் மாட்சியுடன் ஜீவிக்கின்றார்! இந்த ஜீவன் - அவரது உயிர்த்தெழுந்த ஜீவன் தனக்காக அவர் சிலுவையில் என்ன செய்தார் என்பதற்காக நன்றியுடன் அவரைத் துதிக்கும், தனிப்பட்ட விதத்தில் அவரைத் தன் சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்ளும் ஒவ்வொரு நபருக்கும் இப்பொழுது கிட்டக் கூடியதாய் உள்ளது. அப்படிப் பட்டோரைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார்:

> *தேவனோ இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாய் இருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப் பட்டீர்கள் ... கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார் (எபேசியர் 2:4,5,7).*

கிறிஸ்துவே *மரித்தோர் உயிர்த்தெழுதலில் முதல்வரானார் (அப்போஸ்தலர் 26:23)* என்று அப்போஸ்தலனாகிய பவுல் அறிவித்த போது, ஒரு முறை சரீரத்தின் படி மரித்த பிறகு, அதே சரீரத்தில் மீண்டும் உயிர்பெற்று எழுந்திருந்தவர்கள் பற்றியும் அவர்

அறிந்திருந்தார். ஆனால் பவுல் சொன்னார் - இயேசுவே முதல்வர்! சரீர ரீதியிலும், ஆவியிலும், நித்தியா நித்தியமாகவும் மரித்தோரிலிருந்து உயிருடன் எழுப்பப் பட்ட முதல் நபர்!

அநேக மக்கள் கர்த்தராகிய இயேசுவின் ஆவிக்குரிய வேதனையை விட அவரது சரீர மற்றும் உணர்வுகளின் வேதனையுடன் தங்களை எளிதாக இணங்கண்டு கொள்கின்றனர். எனினும், அவரது மிகப் பெரிய வேதனை அவர் தமது பரிசுத்த தகப்பனுடன் என்றென்றுமாய் அனுபவித்து அறிந்திருந்த அந்த ஐக்கியம் துண்டிக்கப் பட்டதன் காரணமாக வந்த வேதனையே ஆகும்.

காலம் தொடங்கு முன்னரே, இயேசு அண்ட சராசரத்தைப் படைத்து உருவாக்குவதற்கு முன்பே, பாவிகளைத் தமது இக்கியத்தில் மீண்டும் நிலைநாட்டும் பொருட்டு எவ்வளவு பெரிய விலைக் கிரயம் செலுத்தப் பட வேண்டியதிருக்கும் என்பதைக் கடவுள் அறிந்திருந்தார். என்றாலும் தமது நித்திய அன்பின் உள்ளத்தால் திரியேக தேவன், உனக்காகவும் எனக்காகவும் தாம் சரீரத்திலும், உணர்ச்சிகளிலும், ஆவியிலும் அளவுக்கடங்கா வேதனையைச் சகிப்போம் என்று தீர்மானம் செய்து கொண்டார். இந்தப் புரிந்து கொள்ள முடியாத அன்பின் மாட்சியை எண்ணியவராக சார்ல்ஸ் வெஸ்லி (1707 - 1788) எழுதினார்:

> விந்தை அன்பு இதெப்படி ஆகும்; என் தேவனாம்
> நீர் எனக்காய் மரிப்பது?

கடவுள் உன்னை எவ்வளவாக நேசிக்கிறார் என்பதை நீ புரிந்து கொள்ள இது இன்னும் சற்று உதவுகிறதா?

*மரணம் மரணத்தைக் கொன்று சாகடிக்கிறது*

காலம் சென்ற டாக்டர். சாங்ஸ்டர், நான் இதுவரை கேட்ட பேச்சாளர்களிலேயே மிகச் சிறந்த தாலந்து படைத்த ஒருவர். அவர் தமது வெள்ளி நாவை, தமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்து பற்றி உயர்வாகப் பேசுவதற்குப் பயன்படுத்துவதில் மகிழ்ச்சி காண்பவர். ஆனால் தான் மரிப்பதற்கு முன்பு, டாக்டர். சாங்ஸ்டர் தமது வாயில் புற்றுநோய் ஏற்பட்ட காரணத்தால் பேசவே இயலாதவராகி விட்டார். அவர் மோட்சத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பு, தமது மகளிடம் ஒரு காகிதமும், பேனாவும் கொண்டு வரும் படி சைகை காட்டினார். அந்த உயிர்த்தெழுந்த ஞாயிறன்று காலைப் பொழுதில் அவர், "நாவை வைத்துக் கொண்டு, 'கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்' என்று உரத்த சத்தமாய்க் கூற ஆசையற்று இருப்பதை விட, நாவே இல்லாமல் 'கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்' என்று கத்திக் கெம்பீரிக்க தணியாத ஆசை கொண்டிருப்பது மேல்!" என்று எழுதினார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிருஷ்டிப்பின் கடவுள் என்பதால் அவர் ஒன்றுமில்லாமையில் இருந்து, வெறுமையிலிருந்து ஜீவனைப் படைத்தார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இரட்சிப்பின் கடவுள் என்பதால், அவர் மரணத்தை வென்று, கல்லறையினின்று

ஜீவனைக் கொண்டு வந்தார். அழிவின், சாவின் கல்லறை, ஜீவனைப் படைத்தவரை, ஜீவாதிபதியை அடைத்து வைப்பது எங்ஙனம்?

கொரிந்து நகர விசுவாசிகளுக்கு எழுதுகையில், அப்போஸ்தலனாகிய பவுல், *கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின் படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப் பட்டு, வேத வாக்கியங்களின் படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (1 கொரிந்தியர் 15:3,4)* என்பதை ஏற்றுக் கொண்டதன் (நிலைத்திருந்தால்; கைக் கொண்டிருந்தால்) காரணமாக அவர்களது பாவங்களின் பின் விளைவுகளிலிருந்து இரட்சிக்கப் பட்டனர் என்பதை அவர்களுக்கு நினைவு படுத்தினார். இன்று ஒவ்வொரு மெய் விசுவாசியும், "கிறிஸ்து என்னுடைய பாவங்களுக்காக மரித்தார்; அவர் மீண்டும் உயிரோடு எழுந்தார், அவரில் எனக்குப் புது வாழ்வு தருகிறார்" என்ற மாட்சிமிகு உண்மையின் மீதே சார்ந்து வாழ்கிறான்.

"ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப் பட்டதற்கும் மூன்று நாட்கள் கழித்து அவர் உயிரோடு எழுந்ததற்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் அவருக்கு என்ன நடந்தது?" என்று இப்பொழுது நீ எண்ணி வியக்கலாம். அப்படிப்பட்ட ஒரு கேள்வி வரும் என்று எதிர்பார்த்தவராக கடவுள் ஏற்கனவே விடையை அருளியிருக்கிறார்:

> *ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா? இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத் தக்கதாக, எல்லா*

*வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாய் இருக்கிறார் (எபேசியர் 4:9,10).*

ஆம், உன்னதத்திற்கு ஏறுவதற்கு முன்பு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உண்மையில் பூமியின் தாழ்விடங்களுக்கு இறங்கினார் என்று வேதம் கூறுகிறது. பிறகு, பூமியின் தாழ்விடங்களில் இறங்கிய பின்னர், அவர் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களை (விசுவாசிகளாக மரித்தவர்களை) தமது வெற்றி ஊர்வலத்தில் வழி நடத்தியவராக உன்னதத்திற்கு ஏறிச் சென்றார். இன்று, மரணத்தின் வாசல் உண்மையில் தனது மகிமைக்கு வாசலே என்ற நிச்சயம் ஒவ்வொரு மெய் விசுவாசிக்கும் உண்டு. ஆம், கிறிஸ்து தாமே நமக்காக சரீர மற்றும் ஆவிக்குரிய மரணத்தின் மீது வெற்றி சிறந்தார். எத்தனை அற்புதமானது இது!

*மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப் பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொரிந்தியர் 15: 55-57).*

## *மரணம் மரணத்தின் அதிபதியை வெற்றிகொள்கிறது*

கடவுள் 'இரத்தமும் மாம்சமும்' ஆகக் காரணம் அவர் என்னுடைய, உன்னுடைய பாவங்களுக்காக மரிப்பதற்காக மட்டுமல்ல, *மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும் படியாகவுமே (எபிரெயர் 2:14).*

கோலியாத்தின் பட்டயத்தைக் கொண்டே அவனைத் தாவீது வெட்டிப் போட்டது போல இயேசுவும் சாத்தானின் சொந்த ஆயுதமாகிய மரணத்தைக் கொண்டே அவனை முறியடித்தார். மனிதர்களை - ஆண்களையும் பெண்களையும் உண்மையாகவே விடுதலை செய்பவர் இயேசுவே. அவரே கடவுளின் விடுதலையாளர் - மக்களை நித்திய மரணத்திலிருந்தும், ஆவிக்குரிய அடிமைத் தளையிலிருந்தும் விடுவிக்கக் கூடிய ஒரேயொருவர் அவர் மட்டுமே. தமது சாயலில் மனிதனைப் படைத்து உருவாக்கிய கடவுளுக்கு எதிராகக் கலகம் செய்யும் வண்ணமாக ஒவ்வொரு நபருக்கும் சாத்தான் திட்டமிட்டு வைத்துள்ள அந்த அடிமைத்தளையிலிருந்து விடுதலை.

இயேசு, உண்மையான தசையும், உண்மையான எலும்புகளும் உடைய தமது மானிட சரீரத்திலேயே சாத்தானை முறியடித்து, மரணத்தை வென்று, மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தார். பிறகு நாம் அவர் பரலோகத்திற்கு ஏறிச் சென்றதைக் குறித்து - *நமக்கு முன்னோடினவராகிய இயேசு நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருப்பது (எபிரெயர் 6:20)* பற்றி வாசிக்கிறோம். முதல் முறையாக ஒரு மனிதன் - குற்றமற்ற, பாவமற்ற, பரிபூரண புருஷர் - பரலோகத்திற்குள் சென்றிருக்கிறார். சிலுவையில் தமது மரணத்தின் மூலமாக, தம்மைப் பின்பற்றி மற்றவர்கள் பரலோகம் வரும்படியாக அவர் வழியைத் திறந்து தந்திருக்கிறார். என்ன அருமை!

## அன்பின் மரணசாசனம்

கர்த்தராகிய இயேசு மோட்சம் செல்லும் வழியை ஆயத்தமாக்கி விட்டார் என்பதை அறிவது அற்புதமான காரியம்! இப்பொழுது அவரது வெற்றி ஊர்வலத்தில் நாமும் சேர்ந்து கொள்ளலாம். இயேசு தமது மரணத்திற்கு முன்னரே, தமக்குச் சொந்தமானவர்கள் பேரில் வைத்த அன்பின் மிகுதியால், தாம் பரலோகம் சென்றபிறகு பூவுலகில் உள்ள விசுவாசிகளிடம் பரிசுத்த ஆவியானவரை அனுப்பி வைப்பதாக வாக்குக் கொடுத்திருந்தார் என்பதும் அற்புதமான காரியமே:

தமது சீஷர்களிடம் அவர் கூறினார்:

*வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்த படியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (யோவான் 7:38-39).*

*இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன் ..... நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது ..... சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் ..... நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாய் இருக்கும்; நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில்*

*அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன் ... அவர் என்னை மகிமைப் படுத்துவார் (யோவான் 16:5;14:16,17;16:7,14).*

தமது குமாரனின் மரணத்தில் கடவுள் எவ்வாறு மகிமைப் பட்டார் என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். இப்பொழுது நீ இன்னொரு கேள்வி கேட்கலாம்: "தமது பரிசுத்த ஆவியானவரை உனக்கும் எனக்கும் அனுப்பி வைப்பதன் மூலம் எப்படி இயேசு மகிமை அடைய முடியும்?"

கடவுளின் அன்பு யார் யார் மூலமாகப் பெருக்கெடுத்து ஓடுகின்றதோ அந்தந்த விசுவாசிகளின் வாழ்வில் இயேசு மகிமைப் படுகிறார் என்ற உண்மை இந்தக் கேள்விக்கு ஒரு பகுதி விடையைத் தருகின்றது. *நமக்கு அருளப் பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது (ரோமர் 5:5)* என்று நாம் வாசிக்கிறோம். கடவுளுடைய உள்வாசம் செய்யும் அன்பு - மனித நேயம் அல்லது மானுட பாசத்தின் உன்னதமான சிகரத்தையும் தாண்டி உயர்ந்து நிற்பதாகும். கர்த்தராகிய இயேசு சிலுவையின் மீது செய்து முடித்த கிரியையை நீ விசுவாசத்தின் மூலமாக ஏற்றுக் கொள்கையில், அவர், பரிசுத்த ஆவியானவரது ஆள்தத்துவத்தில், உன் மூலமாக மற்ற மக்களை நேசிக்க ஆரம்பிப்பார். இது எவ்வளவு பெரிய மாட்சிமை!

கிறிஸ்து உன்னுடைய பாவங்களுக்காக மரித்தார் என்று நம்புவதும், அந்த உண்மைக்காக உன் உள்ளத்தில்

அவருக்கு நன்றி செலுத்துவதும் கடவுளின் பாவ மன்னிப்பையும், மீட்கும் அன்பையும் தனிப்பட்ட நிச்சயத்துடன் அனுபவிப்பதாகும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உள்வாசம் செய்யும் பிரசன்னத்திற்கு உன் வாழ்க்கையைத் திறந்து கொடுப்பதானது, அன்பற்ற உலகிற்கு கிறிஸ்துவின் அன்பின் வாய்க்காலாக மாறுவதாகும்.

தனது அறிவுத் திறமைக்குப் பெயர் போன ஒரு ஜெர்மானிய இறையியல் அறிஞரிடம் ஒருமுறை, "கடவுளைப் பற்றி உங்களது மிக ஆழமான கருத்து என்ன?" என்று கேட்கப் பட்டது. வியத்தகு வண்ணமாக 1அவர் ஒரு சிறுவர்கள் பாடலைப் பாடிக் காட்டினார்: "இயேசு என் நேசர்; இயேசு என் நேசர், மெய் வேத வாக்கிதே."

ஆம், கடவுள் மெய்யாகவே என்னை நேசிக்கிறார்! ஆம், கடவுள் மெய்யாகவே உன்னை நேசிக்கிறார்!

இரட்சிப்பின் திட்டத்தை வரைந்த அன்பே!
மனிதனுக்கு அதைக் கொணர்ந்த கிருபையே!
தேவன் பாலம் அமைத்த பெரும் பிளவே!
அந்தக் கல்வாரியில்.

பெருகியது இரக்கம், இலவசமானது கிருபை,
திரள் திரளானது மன்னிப்பு எனக்கு,
விடுதலை பெற்றது பாரம் சுமந்த என் ஆன்மா,
அந்தக் கல்வாரியில்.

## சிந்தித்துப் பார்

1. நீ யாரையாவது நேசிக்கிறாய் என்பதை நிரூபிக்க மிகச் சிறந்த வழி எது?
   நீ சொல்லும் வார்த்தைகளின் மூலமா? நீ செய்யும் செய்கைகளின் மூலமா?
2. கடவுள் உன் பேரில் உள்ள தமது அன்பை எவ்வாறு நிரூபித்தார்?
3. கடவுளுடைய அன்புக்கு நீ தனிப்பட்ட விதமாக என்ன மாறுத்தரம் கொடுக்கப் போகிறாய்?

அறுவை சிகிச்சை அறையின் மின்னணு
சூழலில் ஒவ்வொரு அறுவை சிகிச்சை
நிபுணரும் இரத்தம் என்பது உயிரே என்று
அடையாளம் காணக் கற்றுக் கொள்கின்றனர்.
அவை இரண்டும் பிரிக்கப் படவே
முடியாதவை: அவற்றில் ஒன்றை நீ
இழந்தால், இரண்டையும் இழந்து விடுவாய்.

டாக்டர். பால் பிராண்ட்

# வாழ்வை நான் எங்கே கண்டு கொள்ளலாம்?

நள்ளிரவு நேரம் மிக விரைவாக நெருங்கிக் கொண்டிருந்தது. பதினெட்டு மணி நேரம் கஷ்டமான பயணத்தை எதிர்நோக்கியவர்களாக நானும் என் மனைவியும் பாரிஸ் நகரிலுள்ள காரே செயின்ட் லாசர் ரயில் நிலையத்தில் நூற்றுக் கணக்கான பயணிகளுடன் நின்று கொண்டிருந்தோம். ரயில் நிலைய அதிகாரி வழியைத் திறந்து எங்களை ரயிலில் ஏற அனுமதிக்கும் படியாக மிகுந்த பொறுமையுடன் காத்து நின்றோம்.

எங்களைச் சூழ இருந்தவர்களில் பெரும்பான்மை-யானோர் இளைஞர்கள். நானும் டாரதியும் அவர்களோடு கலந்து நின்ற போது, அந்தக் கூட்டத்தில் ஐரோப்பாக் கண்டத்தின் ஒவ்வொரு நாட்டையும் சேர்ந்த இளைஞர்கள் இருப்பது போல் தோன்றியது. சில இளைஞர்களும் இளம் பெண்களும் வசதியான தலையணைக்குப் பதிலாகத் தங்கள் பைகளைத் தலைக்குக் கீழ் வைத்தவாறு தூங்க முயன்று கொண்டிருந்தனர். இப்படி அவர்கள் தரையில் படுத்துக் கிடக்க, அவர்களது நண்பர்கள் அவர்களுக்குக் காவலாக நின்றவாறு வாயில் எதையோ போட்டு மென்று

கொண்டோ அல்லது பாட்டிலிலிருந்து தண்ணீரை உறிஞ்சிக் குடித்துக் கொண்டோ இருந்தனர்.

நாங்கள் காத்து நின்ற வேளையில் இந்த இளைஞர்களில் அநேகருடன் பேசினோம், சிரித்தோம். இளமைத் துடிப்பு தந்த உற்சாக வேகம் இருந்த போதிலும் அவர்களது தோற்றம் எல்லாம் கலைந்த பிறகு, தாங்கள் எந்த "வாழ்வை" நாடித் தேடித் திரிகிறோமோ அதை இன்னும் கண்டடையவில்லை என்ற உணர்வு புலப்பட்டது. விரைவிலேயே எங்கள் உரையாடல், டாரதியுடனும் என்னுடனும் கூடப் பயணம் செய்த நபரிடமாக – கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடமாகத் திரும்பியது!

நாங்கள் பேசிக் கொண்டிருந்த பொழுது, அமைதியற்ற துணிவு மிக்க அந்த இளைஞர்களில் சிலர் தங்கள் மனதைத் திறந்து கொட்டினார்கள், "மெய்" வாழ்வைக் கண்டு கொள்ள வேண்டும் என்ற தங்கள் ஆசையைப் பற்றிக் கூறினார்கள். சிலர் அந்த மெய் வாழ்வு அடுத்து தாங்கள் செல்லப்போகும் மாநகரில் கிடைக்கும் என்று எண்ணினர்; சிலர் அது தங்களது அடுத்த நட்பில் கிடைக்கும் என்று நம்பினர்; மற்றவர்கள் தங்களது வாழ்க்கை அனுபவங்கள் தங்களது அடுத்த போதை மருந்தில், அடுத்த கொண்டாட்டத்தில் விரிந்து பரவும் என்று எதிர்பார்த்தனர். இன்னும் சிலரது மகாபெரிய கவலை எங்கே தாங்கள் ஏதாவது ஓர் உயிர்கொல்லி நோயினால் தாக்கப் பட்டு விடுவோமோ என்பதாக இருந்தது.

ஆப்பிரிக்காவின் தொலைதூரக் கிராமங்களில், இந்தப் பயங்கரமான கொள்ளை நோயை "ஒல்லி மனிதனின் வியாதி" என்று அழைக்கின்றனர்.

மருத்துவர்களின் பாஷையில் அது HIV பாஸிடிவ் என பெயர் பெறுகின்றது. ஒரு ஆணில், பெண்ணில், பையனில் அல்லது சிறுமியில் அது முழுமை பெறும்பொழுது AIDS – எய்ட்ஸ் என்று அழைக்கப்படுகின்றது. இந்த வியாதி ஒருவருக்கு வந்து விட்டது என்ற பயங்கரமான செய்தி எப்பொழுதும் ஒரே விதமான உணர்வைத் தருகிறது: உடனடியான, முழுமையான அழிவு! உலகெங்கிலும் மக்கள் யாவரும் எய்ட்ஸ் நோய் ஒரு 'இரத்த நோய்' என்பதை அறிவர். இரத்த ஓட்டம் ஜீவன் தரும் சுத்த நதியாக இருப்பதற்குப் பதிலாக, நோய் தொற்றிய மரண நதியாக மாறி விட்டது.

என்றாலும், இரத்தம் என்பது ஜீவன் அளிக்கும் உயிரோட்டமாக இருந்த போதிலும், என்னைப் பொறுத்த வரை இரத்தத்தைப் பார்ப்பதே எனக்கு வெறுப்பான காரியம். உண்மையில், எனது இந்தப் பயத்தைப் போக்கும் முயற்சியாக, ஒருமுறை இலண்டனிலுள்ள ஒரு பார்வையாளர் கோபுரத்திலிருந்து பார்க்கும் படியாக வந்த அழைப்பைத் தட்டாமல் ஏற்றுக் கொண்டேன். நோயாளியின் உடலில் அறுவை சிகிச்சைக் கத்தி ஒரு கீறல் போட்டது தான் தாமதம், ஏறக்குறைய நான் மூர்ச்சையாகி விட்டேன். எனது மருத்துவ நண்பர், நான் வியர்த்து விறுவிறுத்து, முகமெல்லாம் வெளிறிக் காட்சியளிப்பதைப் பார்த்து, அந்தக் காட்சி அறையிலிருந்து வெளியே சென்று விடுமாறு எனக்கு

ஆலோசனை கொடுத்தார். அதை விட எனக்கு வேறென்ன வேண்டும்!

ஆனால், இரத்தத்தைக் கண்டவுடன் ஒரு நபர் என்ன செய்கிறான் என்பது கணக்கல்ல, அதிகமாக இரத்தம் வெளியேறிக் கொண்டிருக்கும் ஒரு நபருக்கு இரத்தம் செலுத்துவதன் மூலம் ஜீவனையும் ஆரோக்கியத்தையும் கொடுக்க முடியும். இன்று, நவீன விஞ்ஞானத்தின் அற்புதங்களால், நல்ல ஆரோக்கியமான ஒரு நபரின் உடலிலிருந்து எடுக்கப் படும் இரத்தம் பிறகு, மரித்துக் கொண்டிருக்கின்ற அல்லது கடுமையான நோய்வாய்ப் பட்டிருக்கின்ற ஒரு நபரின் உடலில் ஜீவன் தரும் நதியாக செலுத்தப்படக் கூடும்.

இரத்தத்தின் விந்தைகளையும், புரியாத புதிர்களையும் மருத்துவ ஆராய்ச்சிகள் கண்டு வெளியிடுவதற்கு வெகு காலம் முன்னரே கடவுள் உரைத்தார்: *மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது ...... (லேவியராகமம் 17:11).* இரத்தமே உயிரின் சாரம் என்பதை டாக்டர். பால் பிராண்ட் ஒத்துக் கொள்கிறார்: "அறுவை சிகிச்சை அறையின் மின்னணு சூழலில் ஒவ்வொரு அறுவை சிகிச்சை நிபுணரும் இரத்தம் என்பது உயிரே என்று அடையாளம் காணக் கற்றுக் கொள்கின்றனர். அவை இரண்டும் பிரிக்கப் படவே முடியாதவை: அவற்றில் ஒன்றை நீ இழந்தால், இரண்டையும் இழந்து விடுவாய்."

எனினும் HIV தொற்று போன்ற இரத்தத்தினால் பரவும் வியாதிகள் யார் யார் அவ்விதமான தொற்றுக்கு

ஆளாகிறார்களோ அவர்களுக்கு மட்டுமே வருகிறது என்ற போதிலும், மனிதராய்ப் பிறந்த அனைவருக்கும் வருகின்ற வேறொரு நோயும் உண்டு என்பதைப் பலர் அறியாதிருக்கின்றனர். ஏனெனில் தேவன் *மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணினார் (அப்போஸ்தலர் 17:26);* இந்தப் பயங்கரமான தொற்று முழு மனுக்குலத்தையும் பாதித்து விட்டது. வேதாகமத்திலே, இந்தத் தொற்றுக்கு மூலகாரணம் பின்வந்த எல்லாச் சந்ததிகளுக்கும் மூதாதையரான ஆதாம் என்று விளக்கப் படுகிறது.

*முதல் மனிதனாகிய ஆதாம் (1 கொரிந்தியர் 15:45)* பாவம் செய்த போது, பின் தொடர்ந்து வந்த எல்லாத் தலைமுறைகளும், அவர்களது தோலின் நிறம் எதுவாயினும், வசிக்கும் இடம் எதுவாயினும், வாழ்க்கையின் அந்தஸ்து அல்லது நிலைமை என்னவாயினும் எந்தவித பாரபட்சமுமின்றி எல்லாரும் மரணதண்டனைக்கு ஆளாயினர். வேதம் திட்டமும் தெளிவுமாகச் சொல்கிறது ... *ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறார்கள் .... (1 கொரிந்தியர் 15:22).* ஆம் எப்படி எய்ட்ஸ் மரணம், கிருமி தொற்றிய இரத்தத்தினால் ஒரு உடலுக்கு எடுத்துச் சொல்லப் படுகிறதோ அப்படியே பாவத்தினால் பரவும் இந்தத் தொற்று தலைமுறை தலைமுறையாக எடுத்துச் செல்லப் படுகிறது. அப்படி மட்டும் இல்லையென்றால் மக்கள் உடலிலே வியாதியோ, மரணமோ இராதபடி நேரடியாகவே மோட்சம் சென்றிருக்கக் கூடும். ஆனால் அப்படி நடப்பதில்லையே.

என்றாலும், இயேசு பிறந்த பொழுது, ஜீவன் தரும் இரத்த ஓடை ஒன்று மனுக்குலத்திற்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அது நடந்த விதம் இப்படித் தான். காபிரியேல் தூதன் மரியாளிடம் வந்து அவள் கர்ப்பம் தரித்து ஒரு குமாரனைப் பெறுவாள் என்றும் அவரது பெயர் இயேசு எனப்படும் என்றும் அறிவித்தான். கற்பில் தவறாத, இன்னும் மணமாகாத அந்தக் கன்னிப் பெண் கருத்தரிக்கப் போகும் விதத்தைக் குறித்தும் காபிரியேல் அவளுக்கு விளக்கினான்.

*பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப் படும் (லூக்கா 1:35)*

பெண்ணின் வித்து, பரிசுத்த ஆவியானவரின் வித்தினால் கருவாக்கப் பட்ட போது ஒரு அற்புதம் நிகழ்ந்தது. இந்த வியத்தகு சம்பவத்தில் தேவனுடைய - கடவுளுடைய ஜீவன் மனுக்குலத்திற்குள் புகுத்தப் பட்டது. பின்னர் மரியாளின் வயிற்றில் குழந்தை வளர வளர அவரது விலைமதிக்க முடியாத இரத்தம் எந்தக் கலப்பும் இன்றி, எந்தக் கறையும் இன்றி கருவில் ஓடலாயிற்று. ஆம், ஆண்டவர் இயேசுவின் இரத்தமே ஜீவன் ஆயிற்று!

மனித இரத்தம் பல நுட்பங்கள் நிறைந்த ஒரு பொருள். இன்றும் கூட, மருத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்த அதியற்புதமான திரவத்தின் ஜீவன் அளிக்கும் இரகசியங்களைப் பற்றிப் புதிது

புதிதாகக் கண்டு பிடித்துக் கொண்டே இருக்கின்றனர். சுருக்கமான எளிய பதங்களில் சொல்லப் போனால் மனித உடலில் ஓடுகின்ற இரத்தத்தின் செயல் பாடுகளை கீழ்க்கண்டவாறு விவரிக்கலாம்: உடலைச் சுத்தம் செய்தல், உயிர் கொடுத்தல், நோய் தடுத்தல். இது அற்புதம் தான் என்றபோதிலும், கடவுள் இதைப் போன்ற ஆனால் இதைவிட மேலான அற்புத நோக்கங்கள் உடைய ஒரு இரத்தவோட்டத்தை எனக்கும் உனக்கும் கிட்டச் செய்திருக்கிறார் என்று அறிவது அதை விட அற்புதமாகும். 'மெய்' வாழ்வு வேண்டுமென நாடித் தேடும் யாவருக்கும் அந்த இரத்தம் கிடைக்கும். பாவி ஒருவனுக்கு, இயேசுவின் இரத்தம், பாவத்திலிருந்து சுத்திகரிக்கும் கடவுளின் காரணி ஆகும்.

"The Chemistry of the blood" (இரத்தத்தின் வேதியியல்) என்ற தமது நூலில் டாக்டர். M.R.டீஹான் M.D., அநேக உடலியல் மற்றும் பிரசவ மருத்துவ ஏடுகளிலிருந்து மேற்கோள்கள் காட்டி விட்டு முடிவுரையாக: "தனது கருப்பையின் அந்தரங்கத்தில் கருவாக உள்ள குழந்தையின் சிறு உடல் வளருவதற்குத் தேவையான போஷாக்குச் சத்துக்களை தாய் அந்தக் கருவிற்கு அளிக்கின்றாள். ஆனால் குழந்தையின் உடலில் உள்ள இரத்தம் முழுவதும் கருவிலேயே உள்ளது தான். தாய் கருத்தரிக்கும் அந்த விநாடியிலிருந்து குழந்தைப் பேறு நடைபெறும் அந்த விநாடி வரை ஒரு சொட்டு இரத்தமாகிலும் தாயின் உடலிலிருந்து குழந்தையின் உடலுக்குக் கடந்து செல்வதில்லை" என்று கூறுகின்றார். எனினும், டீ ஹானின் கருத்துப் பற்றி தனது எண்ணத்தை டாக்டர். E. இராபர்ட் கோல்மன் "Written in Blood" (இரத்தத்தில் எழுதப்பட்டது) என்ற தமது நூலில் இவ்வாறு தெரிவிக்கிறார்: (மனித உடலின் இரத்தம் ஆண் விந்து பெண் முட்டையுடன் சேரும் பொழுது உண்டாகும் கருவிலிருந்தே வருகிறது. எனவே கருவின் இரத்தத்துக்கும் தாயின் உடலுக்கும் நேரடியான சம்பந்தம் எதும் கிடையாது என்ற டீ ஹானின் கருத்து). இந்தக்

கருத்து தவறு என்று நான் கூற வரவில்லை. ஆனால் இக்கருத்து உண்மை தானா என்று சந்தேகம் எழுப்பும் மற்ற மருத்துவ நிபுணர்களின் கேள்வி நியாயமானதே என்று எண்ணுகிறேன். எனினும், இந்தச் சூழ்நிலையின் உயிரியல் தன்மை எவ்வாறாக இருந்தபோதிலும் இது ஒரு பெரிய பிரச்சினையாக எழ வேண்டிய அவசியம் எனக்கு விளங்கவில்லை. இயேசுவின் இரத்தத்திற்கு வேதம் அளிக்கும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டோமானால், இயேசு கடவுளினால் கருவாக்கப் பட்டார் என்ற உண்மையே தலைமுறை தலைமுறையாக வரும் பாவம் கிறிஸ்துவுக்கு வரவில்லை என்பதைக் காட்டப் போதுமானதாகும்."

ஆவியில் மரித்தோருக்கு அவரது அருமையான விலை மதிப்பற்ற இரத்தம் ஜீவனை - நித்திய ஜீவனை அளிக்கின்றது. ஆவியில் ஜீவன் பெற்றோருக்கு இயேசுவின் இரத்தம் சாத்தானின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் காவலனாக இருக்கின்றது. இந்த விலை மதிக்க முடியாத இரத்தத்தைப் பற்றி நாம் இப்படியாக வாசிக்கிறோம்:

*உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப் படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப் பட்டீர்கள் என்று அறிந்திருக்கிறீர்களே. (1 பேதுரு 1:18,19).*

### இரத்தம்: அதன் சுத்திகரிக்கும் சக்தி

சற்று நாட்களுக்கு முன்னர், பேராசை பிடித்த ஒரு போக்குவரத்துக் கம்பெனி சுகாதார விதிகளை மீறி

நடந்தது பற்றிய செய்தி ஒன்று வெளிவந்தது. தங்கள் இலாபத்தை அதிகரிக்கும் எண்ணத்தில், அந்தக் கம்பெனி ஒரு லாரியை ஒரு திசையில் நச்சுப் பொருட்களை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தி விட்டு, பின் அதே லாரியைத் திரும்பி வரும் வழியில் திரவ உணவுப் பதார்த்தங்களை ஏற்றிக் கொண்டு வரப் பயன்படுத்தியது. இதன் விளைவாக அநேகர் கடுமையான நோய்களுக்கு ஆளாயினர்.

எனினும், மனித உடலில், உணவுப் பொருட்களை செல்களுக்கு எடுத்துச் செல்லும், அதே வேளையில் கழிவுப் பொருட்களை அகற்றி வெளியே கொண்டு செல்லும் ஓர் அதியற்புதமான போக்கு வரத்து அமைப்பைக் கடவுள் ஏற்படுத்தி வைத்திருக்கின்றார். கடவுளுடைய குறையே அற்ற படைப்பின் காரணமாக இரத்தவோட்டத்தில் நல்ல இரத்தம் கெட்ட இரத்தத்துடன் கலந்து விடக்கூடிய வாய்ப்பேயில்லை. வியப்பு என்னவெனில், மனித உடலில் செல்களுக்கும் இரத்த நாளங்களுக்கும் இடையே ஒரு மயிரிழைத் தூரம் மாத்திரம் உண்டு. இந்த செல்களிலிருந்து நச்சுப் பொருட்கள் அகற்றப் படாவிட்டால், விளைவு வியாதியும் மரணமுமே.

பாவத்தின் கறைபடிந்த பிரசன்னத்தை நமது வாழ்விலிருந்து அகற்றத் தாம் கையாளும் முறை முழுக்க முழுக்க இதைப் போன்றதே என கடவுள் விவரிக்கின்றார். அப்படிப் பட்ட சுத்திகரிப்பு இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் மட்டுமே ஆகும். *அவர் ஒளியில் இருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால்,*

ஒருவரோடொருவர் ஐக்கியப் பட்டிருப்போம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7) மேலும், நமது பாவங்கள் மன்னிக்கப் பட வேறு வழியே கிடையாது என்று கடவுள் சொல்லியிருக்கிறார். ஏனெனில் இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது. (எபிரெயர் 9:22).

## இரத்தம்: அதன் உயிர் கொடுக்கும் சக்தி

இரத்தத்தின் மற்றொரு பணி தேவையான நீரையும், போஷாக்கையும் உடல் முழுவதும் எடுத்துச் செல்வதன் மூலம் உயிரைக் காப்பதாகும். இரத்தம் மட்டும் உடலின் செல்களையும், திசுக்களையும் சென்றடையாமல் போகுமானால், அவை உடனே சிதைந்து மரித்துப் போகும். இப்படி, இரத்தவோட்டம் நின்றவுடனே சரீரம் செத்துப் போகும். உயிர் இரத்தத்தில் தான் இருக்கிறது என்பது தெளிவு.

இதை உணரும்பொழுது, இயேசு தாமே தமது சொந்த இரத்தத்தைக் குறித்துச் சொல்லிய வார்த்தைகள் நம் நினைவிற்கு வருகின்றன, அதைக் கேட்ட அவரது சீஷர்களும் திடுக்கிட்டனர். அவர் வலியுறுத்திச் சொன்னது:

*நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவன் இல்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப்*

*புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாய் இருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாய் இருக்கிறது. (யோவான் 6:53-55).*

ஆனாலும், இயேசு தாம் சொன்னதன் உண்மையான அர்த்தத்தை விளக்குமாறு மேலும் கூறினார்: ..... *என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான்; நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன் (யோவான் 6:56).* ஆவிக்குரிய ஜீவனின் உண்மையான ஆதாரத்தைப் புரிந்து கொள்வது எத்தனை மகிழ்ச்சியாய் இருக்கிறது! இயேசுவின் இரத்தம் பாவிகளை அவர்களது பாவத்தினின்று மீட்கும் படியாகச் சிந்தப்பட்டது. அவரது சிந்தப்பட்ட இரத்தத்தின் காரணமாக, அவரது பகிர்ந்து கொள்ளப்பட்ட ஜீவனில் நாம் இப்பொழுது பங்கடைய முடிகிறது. 'நானும் அவனில் நிலைத்திருக்கிறேன்' என்று இயேசு சொன்னபொழுது அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுதல் என்பதன் மெய்யான பொருளை விளக்கிக் காட்டினார். எத்தனை அதிசயம்!

கிறிஸ்துவின் உள்வாசம் செய்யும் பிரசன்னத்தின் உயிர்த்தெழுந்த வல்லமையைத் தனிப்பட்ட விதத்தில் அனுபவித்தவர்களாக விசுவாசிகள் "உயிர்த்தெழுந்த கிறிஸ்து இப்பொழுது என்னில் வாழ்கின்றார்" என்று கெம்பீரமாக முழங்கலாம்! அப்படிப் பட்டோருக்கு, நற்கருணை ஆராதனையில் அப்பத்திலும்

திராட்சைரசத்திலும் பங்கு பெறுவது என்பது நன்றியறிதலையும், சாட்சியாக அறிக்கையிடுதலையும் காட்டும் ஓர் எளிய, அடையாளமான செயலாகும். அற்புதம்!**

**சில குறிப்பிட்ட நற்கருணை ஆராதனைகளில் வழங்கப்படும் அப்பமும் திராட்சை ரசமும் உண்மையாகவே கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாக மாறி விடுகின்றன என்று உறுதியாய் விசுவாசிக்கும் இலட்சக்கணக்கான மக்கள் இருக்கின்றனர் என்பது வருத்தம் தரும் விஷயமாகும். அவரது உள்வாசத்தின் அடையாளமாக இருக்கும் படி ஆண்டவர் தந்த காரியம் சொல்லுக்குச் சொல் அப்படியே, இயல்பான உண்மையாகப் புரிந்து கொள்ளப்பட்டது வேதனை தருவதாகும்.

இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் ஜீவன் அளிக்கும் வல்லமை, விசுவாசியின் வாழ்விற்குள், அவன் பரத்திலிருந்து மறுபடியும் பிறக்கும் பொழுது, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆம், ஜீவனை - வாழ்வைத் தேடியலையும் எந்த நபருக்கும் அடிப்படையானது ஜீவன் அருளும் இந்த "மாற்று இரத்தம்" ஆகும்.

## *இரத்தம்: அதன் பாதுகாக்கும் சக்தி*

மனித இரத்தத்தின் அற்புதம் வாய்ந்த இன்னொரு பணியும் உண்டு. இரத்தம் உயிரைச் சுத்திகரித்து, உயிர் அளிப்பதோடு மட்டுமல்ல, உயிரைக் காக்கவும் செய்கின்றது.

இந்தியாவில் கொள்ளை நோய் வந்தது கண்டு பிடிக்கப்பட்ட பொழுது உலகெங்கும் திகில் பரவியது. அங்கேயிருந்து புறப்பட்டு கண்டம் விட்டு கண்டம் செல்லும் விமானங்கள் யாவும் கிருமிநாசினிகளால் புகை

போடப்பட்டன, சில சமயங்களில் பயணிகளும் தற்காலிகமாக, மருத்துவக் கண்காணிப்புக்கென்று தனிமையில் அடைத்து வைக்கப்பட்டனர். மரணத்தைக் கொண்டு வரும் இந்த நோய் பிற நாடுகளுக்குப் பரவாமல் தடுக்கும் பொருட்டு, இந்தியாவிலிருந்து வெளியே புறப்படும் அனைத்து விமானங்கள் மீதும் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டது.

இப்படிப் பட்ட கொள்ளை நோயின் அச்சுறுத்தல் இல்லாவிட்டாலும், மனித உடல் பல்வேறு அந்நிய, உயிர்கொல்லிக் கிருமிகளால் இடையறாமல் தாக்கப் படுகின்றது. ஆனால் இந்தத் தாக்குதலை முறியடிக்கக் கூடிய அதியற்புதமான எதிர்த் தாக்குதல் நுட்பம் இரத்தத்திற்கு உண்டு. உயிர் காக்கும் இரத்தவோட்டமானது, உடலை பாக்டீரியாக்களின் படையெடுப்பிலிருந்து பாதுகாக்கக் கூடிய, நச்சுப் பொருட்களை அழிக்கப் கூடிய சில குறிப்பிட்ட பொருட்களை உடையதாயிருக்கிறது. அப்படியொரு படையெடுப்பு நிகழும் பொழுது வெள்ளை அணுக்கள் (முக்கியமாக உடலின் தற்காப்புப் படையாக அங்கே இருப்பவை) எண்ணிக்கையில் திடீரென்று அதிகரித்து, எதிர்த் தாக்குதல் தொடுக்கத் தயார் நிலை அடைகின்றன.

மனித உடலின் அற்புத சக்தியைப் போலவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திற்கும் உயிர் காக்கும் பணி உண்டு என்றறிவது எத்தனை அருமையான காரியம். சாத்தானின் சக்திகளின் இடையறாத தாக்குதலுக்கு விலக்கி ஒரு விசுவாசியைக் காப்பது இயேசு கிறிஸ்துவின் இரத்தமே. சாத்தானுக்கும்

கடவுளுடைய மக்களுக்கும் இடையே நடைபெறும் கடைசி காலப் போர் பற்றிய தீர்க்கதரிசனத்தில், நாம் இப்படி வாசிக்கிறோம்: *மரணம் நேரிடுகிறதாய் இருந்தாலும், அதற்குத் தப்பும் படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தாலும் அவனை ஜெயித்தார்கள் (வெளி 12:11)* நீயும் கூட இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் பாதுகாக்கும் சக்தியினால் பிசாசின் தீய செயல்களை மேற்கொள்ள முடியும்.

சாத்தானை இயேசு முறியடிப்பார் என்பது, பிசாசு ஆதாம், ஏவாளைத் தந்திரமாகத் தன் வலையில் சிக்க வைத்தவுடனேயே முன்னுரைக்கப் பட்டது. அப்பொழுது தேவனாகிய கடவுள் பெண்ணின் வித்து பிசாசின் அழிவுக்குக் காரணமாக அமைவார் என்று வாக்குப் பண்ணினார். *உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் (ஆதியாகமம் 3:15).* பெண்ணின் வித்தானவர் சாத்தானின் தலையை நசுக்குவார், ஆனால் அதற்கு முன் சர்ப்பமானது மேசியாவின் குதிங்காலில் கொத்தும். ஆம், பெண்ணின் வித்தான, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே.

> *மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும் படிக்கு (எபிரெயர் 2:14)* தமது விலையேறப் பெற்ற இரத்தத்தைச் சிந்தினார்.

நாங்கள் பாரிஸ் நகரின் காரே செயின்ட் லாசர் இரயில் நிலையத்தில் சந்தித்த, மாயையைத் தேடி

அனைவரும் மாணவர்களைப் போல அன்றி, வேறு அநேகர் மெய் வாழ்வின் ஆதாரம் இன்னதென்று கண்டறிந்துள்ளனர். சில காலத்திற்கு முன்பு நானும் டாரதியும் நூறு உகாண்டர்களைச் சந்தித்தோம். அவர்கள் மெய் வாழ்வைப் பெற்றுக் கொண்டோம் என்ற நிச்சயத்தை உடையவர்களாய் இருந்தனர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் அவர்கள் உள்ளத்தைச் சுத்திகரிக்கும், உயிர் கொடுக்கும், பிசாசை எதிர்த்து நிற்கும் வல்லமை ஒன்றைக் கண்டு கொண்டிருந்தனர். அவர்களைப் பொறுத்த வரையில், பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின என்று நிச்சயமாக அவர்களால் சாட்சி பகர முடியும்.

கென்யாவில் தூதரக அதிகாரிகள் அபாய அறிவிப்பு கொடுத்த பின்னரும், நானும் என் மனைவியும், தேவ ஆவியானவரது தூண்டுதலின் பேரில் உகாண்டாவுக்குச் சென்றோம். உகாண்டா நாட்டுப் போதகர்கள் மற்றும் அவர்களது மனைவிமாருடன் எங்களது நீண்ட கருத்தரங்கு நடைபெற வேண்டிய சரியான சமயத்தைத் தேவனே திட்டமிட்டிருந்தார். நாங்கள் திரும்பி வர வேண்டிய விமானத்தையும் கூட அவரே முன் குறித்துத் திட்டமிட்டு வைத்திருந்தார் என்பதைப் பிறகு தான் கண்டு பிடித்தோம். (மற்றுமொரு இராணுவ சதி நடைபெறுவதற்கு முன் என்டெபியை விட்டுப் புறப்பட்ட கடைசி விமானம் எங்களுடையது தான்).

நாங்கள் விமான நிலையம் வந்து சேர்ந்தவுடனேயே பயமும் திகிலும் நிறைந்த சூழல் குடிகொண்டிருப்பதை உணர முடிந்தது. நாங்கள் சந்தித்த குழப்பத்தையும்,

புழுதியையும் விவரிக்க வார்த்தைகளே கிடையாது. அங்கேயிருந்த வெகுசில கார்களில் ஒன்று எங்களை விமான நிலையத்திலிருந்து குண்டுகளால் துளைக்கப் பட்ட சாலை வழியே அழைத்துச் செல்ல வந்திருந்தது. சற்றுத் தூரம் சென்றவுடனே சில இராணுவ வீரர்கள் துப்பாக்கி முனையில் எங்களை நிறுத்தினர். அவர்கள் அரசின் இராணுவ வீரர்களா, அரசிற்கு எதிரான இராணுவத்தின் வீரர்களா, அல்லது இராணுவ வீரர்கள் உடையில் காட்சியளித்த குண்டர்களா என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியவில்லை. எங்கள் கார் டிரைவர் அவர்களது சொந்த இனத்தைச் சேர்ந்தவன் என்பதை விரைவிலேயே கண்டு கொண்டனர், எனவே எங்களிடம், எதுவும் திருடாமல், எவ்விதத்திலும் எங்களைச் சேதப் படுத்தாமல் சற்றுத் தயக்கத்துடனே எங்களைப் போக விட்டு விட்டனர்.

நாங்கள் போய்ச் சேர வேண்டிய இடம் வந்தபொழுது, எனது மனைவியும் நானும் எங்கள் கருத்தரங்கு நடைபெறவிருக்கும் இடம் திகில் நிறைந்த சமுதாயத்தின் நடுவிலுள்ள ஒரு இருட்டான, பழைய, அழுக்கான கட்டடம் என்பதைக் கவனித்தோம். எனினும் போதகர்களும் அவர்களது மனைவிகளும் வந்து சேர்ந்த போது நாங்கள் சூழ்நிலைகளை எல்லாம் மறந்து விட்டோம். ஆண்டவர் தாமே கிருபையாக அங்கு வந்து தமது மகிமையின் உணர்வாலும், மாறாத பிரசன்னத்தாலும் அபரிமிதமாக எங்களை நிரப்பினார். உகாண்டாவில் நடைபெற்ற அந்தக் கூட்டங்கள் ஜீவனுள்ள தேவனோடு எங்கள் சந்திப்பில் மலை

உச்சியின் அனுபவமாக என்றென்றும் எங்கள் நினைவில் பொறிக்கப் பட்டிருக்கிறது.

தங்கள் கவனம் சற்றும் சிதறாமல், போதகர்களும் அவர்களது மனைவிமாரும் வசதியற்ற இருக்கைகளில் ஒரு நாளுக்கு எட்டு மணி நேரம் அப்படியே அமர்ந்து நானும் டாரதியும் வேதாகமத்திலிருந்து தேவனுடைய சத்தியங்களைப் பகிர்ந்து கொள்ளுவதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். நான் போதித்துக் கொண்டிருக்க இருக்க, நான் சொல்வதை அவர்கள் ஏடுகளில், அரிதான துண்டுத் தாள்களில் எழுதிக் கொள்ள வசதியாக என் மனைவி அவற்றை ஒரு கரும்பலகையில் எழுதிக் கொண்டிருந்தாள். திடீரென, வாசலில் ஏதோ ஆரவம். குடிபோதையில் வந்திருந்த மனிதர்களில் ஒருவனை வாசலிலேயே மற்றவர்கள் பிடித்துத் தடுத்து விட்ட போதிலும், அடுத்தவன் கூட்டத்தின் இடையே நுழைந்து டாரதியின் இருதயத்திற்கு நேராகத் தன் துப்பாக்கியைக் குறி வைத்து மிரட்ட ஆரம்பித்தான்.

"இந்த அருமையான மனிதன் இயேசுவை அறிய வேண்டுமென்று நாம் எல்லாரும் ஜெபிப்போம்" என்றாள் அவள் அமைதியாக.

ஏதோ ஒரு யுகம் போல தோன்றிய சில நிமிடங்கள் கழித்து எனது மொழிபெயர்ப்பாளர் மிகுந்த ஆச்சரியத்துடன் என்னை நோக்கித் திரும்பிச் சொன்னார். "அந்தக் குடிகாரப் போர் வீரன் சொல்வதை என்னால் நம்பவே முடியவில்லை - அவன் இப்பொழுது தான் இந்தப் பெண்மணியின் கடவுளை நான் அறிய விரும்புகிறேன் என்று கூறினான்."

அந்த மொழி பெயர்ப்பாளர் இதைக் கூறிக் கொண்டிருக்கையிலேயே, ஒரு நாளும் என்னால் மறக்க முடியாத காட்சியைக் கண்டேன். யாருடைய அழைப்புமின்றி உள்ளே நுழைந்திருந்த அவனை முழங்காலில் நிற்கச் செய்தது யாராவது ஒரு தூதனா, அல்லது எங்கள் கூட்டங்களில் அபரிமிதமாகத் தங்கியிருந்த தேவனுடைய பரிசுத்தம் பற்றிய மகத்துவமான உணர்வை அந்தக் குடிகாரப் போர் வீரனால் தாங்க முடியவில்லையா, அல்லது அவனது உள்ளத்தின் ஆழத்திலிருந்த தேவையை வெளிப்படையாகத் திறந்து காட்டும் மனத் தாழ்மையின் செயலா - காரணம் எதுவென்பது எனக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தெரிந்ததெல்லாம் அந்தப் போர்வீரன் முழங்கால் படியிட்ட அந்த வேளையில் தானே துப்பாக்கியின் முனை மெல்ல மெல்ல கீழாக நகர்ந்து, அழிவின் ஆயுதமான அது தரையில் விழுந்தது என்பது தான்.

இது ஒன்றும் நன்றாக யோசித்துத் திட்டமிடப் பட்ட கூட்டத்தின் முடிவில் இடம் பெறும் ஆலோசனைக்கான வேளையல்ல! அதை டாரதியும் அறிவாள். "நான் சொல்லச் சொல்ல என் பின்னால் இந்த ஜெபத்தைச் சொல்" என்றாள் அவள். பின்னர், இந்த ஏழை, மனங்கலங்கிய, தேவை நிறைந்த ஆத்துமாவை ஒவ்வோர் அடியாகச் சிலுவையின் அடிவாரத்திற்கு நேராக, பாவமுள்ள மனிதரின் இரட்சகரிடமாக அவள் வழிநடத்தினாள். அங்கே அவன் இயேசுவின் இரத்தத்தின்

மூலமாக சகல மெய் ஜீவனுக்கும் ஆதாரத்தைக் கண்டு கொண்டான்.

இந்த அனுபவத்தை இப்பொழுது நான் பகிர்ந்து கொள்வது எதற்காக? அந்த மறக்கமுடியாத கூட்டத்தில் அடுத்து நடைபெற்றது என்ன என்பதற்காகவே.

அந்தக் கூட்டத்தில் திடீரென்று நுழைந்த அவனைக் கண்டு அஞ்சவோ, அல்லது அவனை வெறுக்கவோ அநேகருக்கு நியாயமான காரணங்கள் இருந்தன. சமீபத்தில் தான் எங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்த பலரும் அங்கிருந்தோம். அங்கேயிருந்த ஒரு போதகர் தன்னைக் கொலை செய்ய நடந்த முயற்சி பலனளிக்காமல், ஆனால் அம்முயற்சியில் தனது விரல்களை இழந்திருந்தார். ஆனால் அவர்கள் எல்லாருமே இயேசுவை ஒரு தனிப்பட்ட விதத்தில் அறிந்து, நேசித்த படியால் அவர்கள் அப்படியே அவனைச் சூழ்ந்து நின்று, அவனை அணைத்துக் கொண்டு, கிறிஸ்துவுக்குள் தங்கள் புதிய சகோதரனுக்காக ஜெபித்தனர்.

பிறகு, எந்த வாத்தியக் கருவியின் இசையும் இல்லாமலே, ஆனால் ஏகோபித்த ஆப்பிரிக்க இசையுடன், அவர்கள் எல்லாரும் சேர்ந்து சத்தமாகப் பாடினார்கள். அங்கே பாடப்பட்ட பாடலின் வார்த்தைகளை எண்ணிப் பார்க்கையில் என் உள்ளம் சிலிர்க்கிறது!

இயேசுவின் இரத்தமே,
இயேசுவின் இரத்தமே,
இயேசுவின் இரத்தமே,
என் பாவத்தைக் கழுவிடுமே.

நமது உலகத் தலைவர்கள் மட்டும் அன்று எங்களுடன் இருந்திப்பார்களானால், அவர்களும் இனத்திற்கும் இனத்திற்கும், நாட்டிற்கும், நாட்டிற்கும் இடையேயான போராட்டங்களுக்குத் தேவன். ஏற்படுத்தியுள்ள ஒரே தீர்வைக் கண்டு கொண்டிருப்பார்கள் என்பது நிச்சயம்:

*அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, ...... முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களை ... இப்பொழுது ஒப்புரவாக்கினார் (கொலோசெயர் 1:20,21).*

ஆம், "கிறிஸ்துவின் இரத்தத்தினாலே" தேவனுடன் சரியான உறவுக்குள் கொண்டு வரப் பட்டவர்கள் மட்டுமே ***"கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே இரட்சிக்கப் படுவார்கள் ...." ஒப்புரவாக்கப் பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே"*** *(ரோமர் 5:9-10).*

## சிந்தித்துப் பார்

1. "மெய் வாழ்வின்" மேல் உண்மையாகவே உனக்கு ஆசை உண்டா? நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப் படவும் வந்தேன் என்று இயேசு சொன்னபொழுது (யோவான் 10:10) குறிப்பிட்ட ஜீவன் இது தான்.

2. வேதாகமத்தின் படி, மனித உடலின் உயிர் எதில் அடங்கியிருக்கிறது? (லேவியராகமம் 17:11 வாசிக்க).

3. கர்த்தராகிய இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் நித்திய முக்கியத்துவம் என்ன?
அதன் சுத்திகரிக்கும் வல்லமையில் நீ நம்பிக்கை வைத்திருக்கிறாயா?
அதன் ஜீவனளிக்கும் வல்லமையில் நீ நம்பிக்கை வைத்திருக்கிறாயா?
அதன் பாதுகாக்கும் வல்லமையில் நீ நம்பிக்கை வைத்திருக்கிறாயா?
ஆண்டவராகிய இயேசு சொன்னார்:

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் (யோவான் 11:25,26).

ஒரு கலைஞனின் ஓவியத்தில் மிளிரும் பூரண அழகு, ஒரு மனித முகத்தின் பிரகாசம், ஒரு எழில்மிக்க நிலப்பரப்பின் கண்கவரும் சிறப்பு - இவற்றையெல்லாம் விவரிக்க வெறும் வார்த்தைகள் மட்டுமே போதாது. காட்சியும் அவசியம்.

## அத்தியாயம் 9

# கடவுளின் குடும்பத்தில் நான் அங்கமாவது எப்படி?

1940 இன் ஆரம்ப ஆண்டுகளில், மருத்துவ விஞ்ஞானமானது கண் அறுவை சிகிச்சைத் துறையில் மாபெரும் முன்னேற்றம் கண்டது. உண்மையில், அப்பொழுது தான் மரித்துப் போன ஒரு நபரின் கண்களிலிருந்து ஆரோக்கியமான விழிவெண்படலத்தை எடுத்து பார்வையற்ற ஒரு நபரின் விழியில் பொருத்தும் அளவிற்கு அந்த முன்னேற்றம் அமைந்தது. முதன் முதல் மாற்று விழி வெண்படல அறுவை சிகிச்சையின் விளைவுகளை நேரில் கண்டது பற்றி டாக்டர். சாங்ஸ்டர் எங்களிடம் கூறினார்,

கதிரவன் உதிப்பதற்கு முன்னரே, டாக்டர்.சாங்ஸ்டர் வேறு இருவருடன் சேர்ந்து இங்கிலாந்தில் உள்ள அழகு மிக்க சர்ரே டவுன்ஸ் என்ற இடத்திற்குச் சென்றார். அவரோடு சென்றவர்களில் ஒருவர் பிறப்பிலேயே பார்வையை இழந்து விட்டிருந்த ஒரு பெண்மணி; அடுத்தவர் அந்தப் பெண்ணின் கண் மருத்துவர். அறுவை சிகிச்சையைத் தொடர்ந்து வந்த நாட்களில் எந்தவிதமான ஒளியும் உட்புக முடியாதபடி அப்பெண்ணின் கண்கள் மீது அடுக்கடுக்காக கட்டுப் போடப் பட்டிருந்தது. அவை

ஒவ்வொன்றாக அகற்றப் பட்டன. எற்கனவே அந்தப் பெண் ஒளியை உணர ஆரம்பித்தவளாக, மிகுந்த மனக்கிளர்ச்சி அடைந்திருந்தாள். இப்பொழுது, கதிரவன் உதயமாகு முன் கடைசியாக இருந்த கண் கட்டும் அவிழ்க்கப்பட்டது. ஒரு போதும் எதையும் கண்ணால் கண்டிராதவள் அப்பெண்.

அதிகாலையில் ஆதவன் என்றுமில்லா மாட்சியுடன் உதித்தது போல தோன்றியது அன்று. நிழல்கள் குறுகின. காலைக் கதிரொளியின் பின்னணியில் பச்சை இலைகள் கோலமிட்டாற் போல் மின்னின. பனி படர்ந்த புல்தரை மீது பட்சிகள் காலை இரைக்காக சுறுசுறுப்புடன் குதித்துக் கொண்டிருந்தன. தன் வாழ்விலேயே முதன் முறையாகப் பார்க்கக் கூடிய பாக்கியம் பெற்ற அந்தப் பெண்ணின் கண்களுக்கு விருந்தளிக்கக் கூடிய மனரம்மியமான காட்சி அது. தன் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட, அவள், "ஓ, இதையெல்லாம் எனக்கு வருணிக்க நீங்கள் முயன்றிருக்கிறீர்கள், ஆனால் எதுவும் இவ்வளவு அழகாக, அதியற்புதமாக இருக்க முடியும் என்று நான் கற்பனை கூட செய்ததில்லை!" என்று வியந்தாள். பிறகு கடவுளுடைய படைப்பின் மாட்சிமுன் மண்டியிட்டு அமைதலாக பயபக்தியுடன் அமர்ந்திருந்தாள்.

எதையுமே பார்த்திராத ஒரு நபருக்கு சிவப்பு வண்ணத்தை எப்படி விவரிப்பாய்? ஒளியையே கண்டிராத ஒரு நபருக்கு சூரிய அஸ்தமனத்தின் ஸ்தம்பிக்க வைக்கும் காட்சியை எப்படி வருணிப்பாய்? அது நிச்சயமாக முடியாதது. காட்சி என்றால்

என்னவென்றே அறியாத ஒரு நபரின் காதுகளில், காட்சிகளின் அழகைப் பற்றி விவரிக்கும் உனது வார்த்தைகள் பொருளற்றதாகவே தொனிக்கும். ஒரு கலைஞனின் ஓவியத்தில் மிளிரும் பூரண அழகு, ஒரு மனித முகத்தின் பிரகாசம், ஒரு எழில் மிக்க நிலப்பரப்பின் கண்கவரும் சிறப்பு - இவற்றையெல்லாம் விவரிக்க வெறும் வார்த்தைகள் மட்டுமே போதாது. காட்சியும் அவசியம்.

ஒரு விசுவாசி, விசுவாசியாத ஒருவனுக்கு ஆவிக்குரிய அழகைத் தெரிவிக்க முயலும் போது இதே வண்ணமான சிரமம் ஏற்படுகின்றது. லண்டனில் உள்ள கைஸ் மருத்துவமனையில் தனது இறுதியாண்டு தேர்வுக்காகப் பயின்று கொண்டிருந்த ஒரு மருத்துவ மாணவனிடம் நான் ஒருமுறை பேசிக் கொண்டிருந்த பொழுது, தேவனுடைய அன்பின் மாட்சி பற்றி அவனுக்கு விவரிக்க முயன்றேன். "எனக்கு அதையெல்லாம் பார்க்க முடியவில்லை" என்று பதிலளித்தான் அவன். எனக்குப் புரிந்தது. ஆனால் தொடர்ந்து அவனோடு உரையாடினேன். "இல்லை உன்னால் முடியும் என்று நானும் நம்பவில்லை, ஏனெனில் நீ இருட்டறை ஒன்றில் வாழும் மனிதனைப் போல இருக்கின்றாய். அது எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியும்; நானும் கூட அப்படிப் பட்ட ஆவிக்குரிய இருளில் இருந்திருக்கிறேன், ஆனால் இப்பொழுதோ தேவனுடைய அன்பு என்ற சூரியன் பிரகாசிக்கும் இடத்திற்கு, அந்த இருட்டறைக்கு வெளியே வந்து விட்டேன்" என்ற நான், "டேவிட், நீ தேவனுடைய அன்பைப் புரிந்து கொள்ள

வேண்டுமென்றால், அந்த இருட்டறையை விட்டு வெளியே அவரது கதிரொளியிடம் வர வேண்டும்" என்று கூறினேன். அந்த நாளில் டேவிட் முழங்கால் படியிட்டு ஆண்டவராகிய இயேசு தன் பாவங்களை மன்னிக்கும் படியும், தன் வாழ்க்கையினுள் வரும்படியும் வேண்டிக் கொண்டான். முழங்காலிலிருந்து எழுந்த அவன் சொன்னதை நான் ஒரு நாளும் மறக்கவே மாட்டேன். அவன் சொன்னான்: "இது இவ்வளவு அற்புதமாக இருக்கும் என்று நான் ஒருபோதும் எண்ணியதில்லை!"

சரீரத்தின் பார்வை எப்படி தேவனுடைய படைப்பின் அழகை மனித அனுபவத்திற்கு எட்டச் செய்கின்றதோ அப்படியே ஆவிக்குரிய பார்வையானது தேவனுடைய பிரசன்னம், வல்லமை மற்றும் அன்பின் மெய்மையை மனித ஆத்துமாவுக்கு எட்டச் செய்கின்றது.

ஆண்டவராகிய இயேசு மோட்சத்திற்கு ஏறிச் சென்ற பிறகு, அப்போஸ்தலனாகிய யோவான் மூலம் பேசுகையில் லவோதிக்கேயா சபை மக்களின் ஆவிக்குரிய நிலைமை பற்றித் திடுக்கிடக் கூடியதொரு உண்மையை அறிவித்தார். அவர் சொன்னார் *"நீ குருடனாய் (இருக்கிறதை) அறியாமல் ... (இருக்கிறாய்)" (வெளி 3:17)*. பார்வையற்ற ஒரு நபர் தனக்குப் பார்வை இல்லை என்று அறியாமல் இருக்கக் கூடிய சோக நிலையை உன்னால் கற்பனை செய்ய முடிகிறதா? ஆவிக்குரிய குருட்டுத் தன்மை என்ற வியாதியைக் கண்டு பிடித்த பின் ஆண்டவராகிய இயேசு அந்நோய்க்குப் பரிகாரத்தையும் கூறுகிறார். *"நீ பார்வை அடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் (தைலம்) போடவும்*

*வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்" (வெளி 3:18).* இந்த மருந்து எவ்வளவு அவசியமானது! ஆவிக்குரிய குருட்டுத்தனம் நீங்க ஆவிக்குரிய கண் அறுவை சிகிச்சை அவசியம், அது பரிசுத்த ஆவியானவரின் கிரியை!

நீ முதல் முறை பிறந்தது சரீரப் பிறப்பாகும். ஆனால் அந்தப் பிறப்பு உனக்கு ஆவிக்குரிய பார்வையோ, தெளிவோ தருவதில்லை. நீ ஆவிக்குரிய குருட்டுத் தனத்திலிருந்து **"இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளிக்கு"** (2 கொரிந்தியர் 4:6) வந்து சேர வேண்டுமானால் நீ இரண்டாவது முறையாகப் பிறக்க வேண்டியது அவசியம். இயேசு நிக்கொதேமுவிடம் சொன்னார்:

> *மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாய் இருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாய் இருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம் (யோவான் 3:6,7) .... ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காண மாட்டான் .... (யோவான் 3:3).*

ஆகவே, நீ கடவுளுடைய இராஜ்யத்தைக் காண வேண்டுமானால், நீயும் மறுபடியும் பிறக்க வேண்டும்.

வேறு எந்த மனிதனையும் போலவே, நீயும், நிரப்பப் பட வேண்டும் என்று கதறுகின்ற, கடவுள் வடிவம் கொண்ட ஒரு வெற்றிடத்துடனே பிறந்துள்ளாய்.

இந்த ஆவிக்குரிய வெறுமையானது உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் உள் வரும், உள் வாசம் பண்ணும் பிரசன்னத்தினால் மட்டுமே நிரப்பப் பட முடியும். அவரை உன் சொந்த இரட்சகராக நீ உன் வாழ்வில் ஏற்றுக் கொள்ளும் போது, அவருடைய மரணத்தின் நோக்கமும், அவசியமும் உன் வாழ்வில் பலன், நிறைவு காண்கின்றன. அவர் உன் பாவங்களை உனக்கு மன்னிப்பதற்காக மட்டும் மரிக்கவில்லை; அவர் வந்து வசிப்பதற்கேற்ற வகையில் உன் உள்ளம் தூய்மையாக்கப் பட வேண்டும் என்பதற்காகவும் அவர் மரித்தார். அவர் வந்து உன் உள்ளத்தில் வசிப்பதற்கு முன்பாக உன் பாவங்கள் மன்னிக்கப் பட வேண்டியது அவசியமாகும்.

ஓர் இளம் ஆப்பிரிக்க விசுவாசியுடன் பேசிக் கொண்டிருந்த பொழுது, தனது நாட்டின் இளைஞர்களுடன் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அவர் தணியாத, தீவிர பாரம் கொண்டிருப்பதை அறிய வந்தேன். தொடர்ந்து வந்த வாரத்தில் நான் சுமார் இருநூறு போதகர்களுக்கு வேதாகமத்தைக் கற்பிப்பதாக இருந்தேன், எனவே அதில் பங்கு பெற அவரையும் அழைத்தேன். அப்பொழுது, போதகர்கள் கூட்டம் நடைபெறுவதாக இருந்த இடத்திலிருந்து பல நூறு மைல்கள் தள்ளியிருந்த போதும் அவர் கரடு முரடான சாலைகள் வழியே பேருந்தில் பயணம் செய்து வரலாமே என்று ஆலோசனை கூறினேன். வில்லியம் வந்து சேர்ந்த பொழுது களைத்துப் போயிருந்தார், ஆனால் தேவனையும் அவரது வார்த்தையையும் பற்றி அதிகம் கற்றுக் கொள்ளப்

போகிறோம் என்ற ஆவலில் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப் பட்டார். அளவுக்கு மீறிக் கூட்டம் நிறைந்த அந்த ஆப்பிரிக்கப் பேருந்தில் வில்லியம் ஏதோ சுற்றுலாப் பயணம் செல்லவில்லை! அந்தப் பேருந்துப் பயணத்தின் மூலமாகத் தான் அவர் அந்தக் கருத்தரங்கிற்கு வந்து சேர்ந்திருந்தார். அவரது உண்மையான நோக்கம் அந்தப் பயணம் அல்ல, அந்தப் பயணத்தில் முடிவில் அவருக்காகக் காத்திருந்த கருத்தரங்கு தான்.

அதைப் போலவே, இயேசு கிறிஸ்து உன்னோடும், நீ அவரோடும் ஐக்கியம் கொள்ளும் வண்ணமாக அவர் உன் வாழ்வில் நுழையக் கூடிய ஒரே வழி, உன் இதயம் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப் படும் படியாக அவரே ஒரு வழியை ஏற்படுத்துவது தான் என்று அவர் அறிந்திருந்தார். உனது பாவங்கள் மன்னிக்கப் பட வேண்டியது அவசியம் தான் என்றாலும், உன்னைக் குறித்த அவரது முடிவான நோக்கம் நீ கிறிஸ்துவில் புது வாழ்வைக் கண்டு கொள்வதும், தேவனோடு ஐக்கியம் கொள்ளுவதுமே. இதை விடக் குறைவான எதிலும் நீ திருப்தி காண முடியுமா? சொல்லப் போனால், நீ உருவாக்கப் பட்ட நோக்கமே கிறிஸ்துவுடன் இந்தத் தனிப்பட்ட உறவு கொள்வதற்காகத் தான்.

கிறிஸ்து உன் நெஞ்சத்தில் வசிக்கிறார் என்று அறிவதானது, நித்திய வாழ்வு ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது என்பதை இன்றே, இப்பொழுதே அறிந்து கொள்வதாகும். கிறிஸ்துவின் உள் வாசம் பண்ணும் பிரசன்னமானது உன் ஜீவனுக்குள் அவர் ஜீவனைக் கொண்டு வருகின்றது.

*தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது என்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன் (1 யோவான் 5:11,12).*

ஆகவே, எனது நண்பன் டேவிட் ஆண்டவர் இயேசு தனது பாவங்களை மன்னித்துத் தன் வாழ்வில் வரும்படி கேட்டபிறகு, "இது இவ்வளவு அற்புதமாக இருக்கும் என்று நான் ஒருபோதும் எண்ணியதில்லை!" என்று கூறியதில் வியப்பேதுமில்லை.

## ஆனால் எப்படி?

இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேதுரு பிரசங்கித்ததை மக்கள் கேட்டபொழுது, இரட்சகரை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையைக் கடவுள் அவர்களுக்குக் கொடுத்தார். பரிசுத்த ஆவியானவர் உனக்கு என்ன செய்கிறாரோ அதை அவர்களுக்கும் செய்தார். இயேசுவே கர்த்தர் (கூரியோஸ் - யாவே) மற்றும் கடவுளின் மேசியா என்று பேதுரு சொல்ல, அவர்கள் கவனித்துக் கேட்டனர். இயேசு யார் என்ற அந்தப் புதிய அறிவு, தெளிவு அவர்களில் மிகுந்த பாவவுணர்வையும், இரட்சிப்பின் அவசியத்தைப் பற்றிய உணர்வையும் கொண்டு வந்தது. சிலுவையில் அறையப் பட்ட அவரை - இரட்சகராகிய அவரை - தாங்கள் எப்படி நிராகரித்தோம், எப்படி ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்தோம் என்பதையெல்லாம்

எண்ணிப் பார்த்த அவர்கள் தங்கள் இருதயத்திலே குத்தப் பட்டவர்களாகி, *சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?* என்று கேட்டதாக வசனம் கூறுகிறது (அப்போஸ்தலர் 2:37).

பேதுரு அவர்களுக்குக் கொடுத்த முதலாவது பதில், அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்பதாகும். மனந்திரும்புதல் இன்றி விசுவாசம் உண்மையான விசுவாசமாக இருக்க முடியாது. அது வெறுமனே இல்லாததை இருப்பது போல் கருதும் கற்பனையாகவே இருக்கும். இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் என்பதில் நம்பி வரும் மனப்பான்மை, மனப்பான்மையில் ஒரு மாற்றம் ஆகிய இரண்டுமே அடங்கும்.

இயேசு சிலுவையில் மரித்தபொழுது உனக்காக என்ன செய்தார் என்பதற்காக நீ எளிய விசுவாசத்தோடு அவருக்கு நன்றி செலுத்துகையில், கடவுளைப் பற்றிய உனது மனப்பான்மை, பாவத்தைக் குறித்த உனது மனப்பான்மை ஆகிய இரண்டும் மாற்றம் கண்டு விட்டன. அந்த வேளையில் தான் பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய கண் அறுவை சிகிச்சையை நிகழ்த்துகிறார். உன் மனமானது காரியங்களை வேறொரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்க ஆரம்பிக்கிறது. உண்மையில், மனந்திரும்புதல் என்ற சொல்லின் பொருள் மனம் மாறுதல் என்பதாகும். எனவே உண்மையான ஒரு புதுப்பிறப்பின் அனுபவமானது, கடவுளையும் பாவத்தையும் பற்றிய அடிப்படை மனமாற்றத்தைக் கொண்டது.

**கடவுளைப் பற்றி:** மனந்திரும்புதல் (மனமாறுதல்) கடவுளைப் பற்றிய போலியான தத்துவங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. ஆப்பிரிக்காவிலே, தங்கள் பழைய முறைமைகளையும், அஞ்ஞானப் பழக்கவழக்கங்களையும் விட்டு விட முடியாமல் திணறிய மக்கள் இயேசுவண்டை வந்தபிறகு வெளிப்படையாகத் தங்கள் தாயத்துகளை எல்லாம் எடுத்துச் சுட்டெரிப்பதை நான் கண்டிருக்கிறேன். வேதாகமத்தின் தேவனுக்குப் பிரியமில்லாத மத ரீதியான அல்லது சமூக முறைமைகளை விட்டுத் திரும்பியதன் காரணமாக மிகுந்த சமுதாய அழுத்தங்களை, நெருக்கடிகளை எதிர் கொள்ள நேர்ந்த, ஏன் - பயமுறுத்தல்களையும் அபாயங்களையும் கூடச் சந்திக்க நேர்ந்த நண்பர்கள் சிலரும் எனக்குண்டு. இரட்சிப்புக்கேற்ற விசுவாசமானது இயேசுவே யாவே - இயேசு ஒருவரே இரட்சிக்கும் கடவுள் என்ற மாறாத, உறுதியான நம்பிக்கையில் வேர் கொண்டிருக்க வேண்டும்.

**பாவத்தைப் பற்றி:** விசுவாசத்தினாலே, நீ இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வருகையில், உனது பாவத்தன்மையை துயரத்தோடும் வெட்கத்தோடும் உணர்ந்து கொள்வாய். பாவத்தைப் பற்றிய உனது மனமாறுதல் (மனந்திரும்புதல்), இனி நீ உன் பாவத்தைக் கண்டும் காணாதது போலிருக்க மாட்டாய்; உன் பாவத்திற்கு இனி சாக்குப் போக்குச் சொல்ல முயற்சி செய்ய மாட்டாய்; உனது சொந்த நீதியே உன்னை இரட்சித்து விடும் என்று இனி நம்ப மாட்டாய் என்றெல்லாம் பொருள் படும். பரிசுத்தமான கடவுளுக்கு

*முன்பாக மனிதனுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல் இருக்கிறது (ஏசாயா 64:6).* ஆனால் நீ இயேசுவண்டை திரும்பும் பொழுது, உன் வாழ்க்கையில் உள்ள அவருக்குப் பிரியமற்ற காரியங்கள் அனைத்தையும் விட்டு விலக வேண்டும் என்ற ஆசை உனக்கு வரும்.

விடுப்பில் சென்றுள்ள ஓர் இராணுவ உயர் அதிகாரியைக் கற்பனை செய்து கொள். ஒரு நாள் அவருக்கு இரண்டு கடிதங்கள் வருகின்றன. ஒன்று, அவரது நண்பர் ஒருவரிடமிருந்து; மற்றது அவரது தலைமை இராணுவ அதிகாரியிடமிருந்து. முதலாவது கடிதத்தில், நண்பன் தனது திருமணத்தில் கலந்து கொள்ளுமாறு அவருக்கு விடுத்திருந்த அழைப்பு வந்திருக்கிறது. அடுத்த கடிதமோ உடனடியாகப் பணியில் சேருமாறு பிறப்பிக்கப் பட்டுள்ள கட்டளை. ஓர் அழைப்பிற்கும், ஒரு கட்டளைக்கும் இடையே நிச்சயமாக பெருத்த வேறுபாடு உண்டு. ஓர் அழைப்பைப் பண்புடன் ஏற்க மறுக்கலாம். ஆனால் ஒரு கட்டளைக்குப் பதிலளிக்க இரண்டு வழிகள் மட்டுமே உண்டு. ஒன்று கீழ்ப்படிதல் அல்லது கலகம்.

கடவுள் உன்னை நேசிப்பதாலும், பாவம் உன் வாழ்வை அழித்துப் போடும் என்பதை அவர் அறிந்திருக்கிறபடியாலும் அவர் நீ மனந்திரும்பும்படி உனக்கு கட்டளையிடுகிறார். கிரேக்க நாட்டின் பல்கலைக் கழகத் தலைநகரில் தத்துவ மேதைகளுக்கும், வேடிக்கை பார்க்கக் கூடி வந்தவர்களுக்கும் சுவிசேஷத்தை அறிவித்த பவுல் முடிவாக ஒன்றைக் கூறுகின்றார். *"இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷர்*

*எல்லாருக்கும் கட்டளையிடுகிறார்." (அப்போஸ்தலர் 17:30).* மனுஷர் "எல்லாரும்" என்பதில் நீயும் அடங்குவாய், அல்லவா?

அற்புதம் என்னவென்றால், நீ கடவுளைப் பற்றிய உனது தப்பெண்ணங்களை விட்டுத் திரும்பும் போது, அதே போல உனது அந்தரங்கப் பாவங்களை விட்டுத் திரும்பும் போது, அப்படித் திரும்புகையில் இயேசுவினிடமாகத் திரும்பி அவரை உனது இரட்சகர் கடவுளாக ஏற்றுக் கொள்ளும் போது, பரிசுத்த ஆவியானவர் கடவுளுடைய பார்வையில் சரியான காரியங்களைச் செய்வதற்கான *விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குவார் (பிலிப்பியர் 2:13).* இப்படியாக, மனந்திரும்புவதற்கு முன்வருபவர்களுக்கு கடவுளுடைய சித்தத்தைச் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தையும், அதைச் செய்து நிறைவேற்றத் தேவையான வல்லமையையும் அருளக் கடவுள் வாக்குப் பண்ணியிருக்கிறார். அப்பொழுது மட்டுமே உன் வாழ்க்கை மாற்றம் பெற்று, கடவுள் நியமித்து வைத்துள்ள ஆற்றலை வந்தெட்டும்.

ஒரு நண்பனாக, நீ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சற்றும் தாமதம் செய்யாமல் உனது இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் படி உன்னை வேண்டுகிறேன். கடவுளுக்கு முன்பாக நீ தலை வணங்கக் கூடிய ஓர் அமைதியான இடத்தைக் கண்டு பிடி. உண்மை தான், ஏதோ கிளிப் பிள்ளை போல யாரோ சொல்வதை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திருப்பிச் சொல்வதில் ஒரு பயனும் இராது. முக்கியமான காரியம் என்னவென்றால்

நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்; என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6) என்று சொன்ன இயேசுவுக்கு நீ விசுவாசத்துடன் மறுமொழி கொடுப்பது தான்

இப்பொழுது நீ விரும்பினால், உன் கண்களை மூடி உன் இதயத்தின் ஆழத்திலிருந்து வரும் உன் சொந்த வார்த்தைகளைக் கூறி ஜெபிக்கலாம், அல்லது கீழ்வரும் ஜெபம் உனக்கு உதவிகரமாக அமையலாம்.

## ஜெபத்துடன் கூடிய எனது மறுமொழி

**கடவுளே, நான் உம்மை அறிந்ததுமில்லை, உம்மை நேசித்ததுமில்லை. ஆனால் நீர் என்னை அறிந்திருக்கிறீர், என்னை நேசிக்கிறீர் என்பதற்காக உம்மைத் துதிக்கிறேன்.**

**நான் ஒரு பாவி, என்னுடைய இரட்சிப்பைச் சம்பாதித்துக் கொள்வதற்காக என்னில் நானே ஒன்றும் செய்ய இயலாதவன். கர்த்தராகிய இயேசுவே, விசுவாசத்தினால் நான் இப்பொழுது உம்மண்டை திரும்பி, உமது மன்னிப்புக்காகக் கெஞ்சுகிறேன்! நான் ஒரு பாவி என்று அறிக்கையிடுகிறேன், என் பாவத்தைக் குறித்து மனம் வருந்துகிறேன். ஆண்டவராகிய இயேசுவே, எனக்காக மரித்ததற்காக, உமது விலையேறப் பெற்ற இரத்தத்தின் சுத்திகரிக்கும், ஜீவனளிக்கும் வல்லமையை எனக்கு அருளுவதற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். விசுவாசத்தினாலே நான் இப்பொழுது என் வாழ்க்கையை அந்த அருமையான இரத்தத்தின் பாதுகாப்பின் கீழ் வைக்கிறேன்.**

**கர்த்தராகிய இயேசுவே, தயவாக என் உள்ளத்தில் வாரும், வந்து என் வாழ்க்கையை ஆண்டு நடத்தும்.**

**கர்த்தராகிய இயேசுவே, உமது பரிசுத்த ஆவியானவரால் நான் மறுபடியும் பிறக்கச் செய்ததற்காக உமக்கு நன்றி. உமது உயிர்த்தெழுந்த வல்லமையின் காரணமாக நான் கடவுளின் பிள்ளையாகி விட்டேன் என்றும், இனி என்றென்றுமாய் உம்மோடு கூட வாழ்வேன் என்றும் அறிவது எத்தனை அதிசயற்புதமாய் இருக்கிறது!**

*(அவர் மேல்) விசுவாசமாய் இருக்கிறவன் வெட்கப் படுவதில்லை (1 பேதுரு 2:6).*

இப்பொழுது நீ செய்ததை யாரிடமாவது சொல். கிறிஸ்து உன்னில் வாழ்கின்றார், அவருக்காகப் பேசவோ, அவருக்காக வாழவோ உனக்குத் தேவையான சகல பெலனும் அவரே என்பதை மறந்து விடாதே.

*...... கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப் படுவாய். நீதி உண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப் படும், இரட்சிப்பு உண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப் படும். (ரோமர் 10:9,10).*

# சிந்தித்துப் பார்

1. ஒரு பெரிய பரிசைப் பெற்றுக் கொள்கையில் உன் நன்றியை எவ்வாறு தெரிவிப்பாய்?

   "அதை எனக்குத் தாருங்கள்" என்று கூறுவாயா? "உங்களுக்கு நன்றி" என்று கூறுவாயா?

2. நீ கடவுளின் பிள்ளை என்ற நிச்சயத்தை உனக்குத் தருவது உன் உணர்ச்சியா அல்லது உனது விசுவாசமா?

   *கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபேசியர் 2:8).*

3. கர்த்தராகிய இயேசுவில் வைக்கப்பட்டுள்ள விசுவாசத்தில் இவை அடங்குமா?
   மனம் வருந்துதல்?
   நன்றி கூறுதல்?
   அவர் மேலேயே முழுக்க முழுக்கச் சார்ந்து கொள்ளும் மனப் பான்மை?

4. உன்னை இரட்சித்ததற்காக இப்பொழுது கடவுளுக்கு நன்றி சொல்லி, கர்த்தராகிய இயேசு உனக்காகச் செய்ததற்காக மட்டும் அல்லாமல் அவர் யாராக இருக்கிறார் என்பதற்காகவும் அவரைத் துதிப்பாயா?

எந்தச் சூழ்நிலையோ, எந்தத் துன்பமோ, எந்தச் சோதனையோ - எதுவானாலும் சரி, அது என்னைத் தொட வேண்டும் என்றால் முதலில் தேவனையும் பிறகு கிறிஸ்துவையும் கடந்து வந்தாலொழிய, என்னை ஒருபோதும் தொட முடியாது. அப்படி அது அவ்வளவு தூரம் வந்து விடும் என்றால் அது ஒரு பெரிய நோக்கத்துடன் தான் வந்திருக்க வேண்டும், அது என்னவென்று அப்போதைக்கு ஒரு வேளை நான் அறியாதிருக்கலாம்.

ஆனால் நான் பதறித் துடிக்க மறுக்கையில், நான் என் கண்களை அவர் கண்களுக்கு நேராக எறெடுத்து, அது தேவனுடைய சிங்காசனத்திலிருந்து என் உள்ளத்திற்கு ஆசீர்வாதம் கொண்டு வரும் ஒரு மாபெரும் நோக்கத்துடனேயே வந்திருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளும் போது, எந்தத் துயரமும் என்னை அசைக்க முடியாது, எந்தச் சோதனையும் என்னைக் கலங்கச் செய்யாது, எந்தச் சூழ்நிலையும் என்னைத் துவள வைக்காது. - ஏனெனில் எனது கர்த்தரே எனது மனமகிழ்ச்சி என்பதில் நான் இளைப்பாறுவேன். அதுவே விசுவாசத்தின் ஜெயம்!

- ஆலன் ரெட்பாத்.

# அடுத்து என்ன?

இரட்சிப்பு முற்றிலும் இலவசம்! அதைச் சம்பாதிக்க யாரும் செய்யக் கூடியது எதுவுமில்லை. செய்ய வேண்டிய அனைத்தையும் ஆண்டவர் இயேசுவே செய்கிறார்.

நான் கூறிய (அல்லது அது போன்ற) அந்த ஜெபத்தை நீ உண்மையாகவே ஜெபித்திருப்பாய் என்றால், கிறிஸ்துவில் நீ வைத்துள்ள விசுவாசம் உன்னை ஒரு மெய்யான கடவுளின் பிள்ளையாக்கி விட்டது.

> *அவருடைய நாமத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் (யோவான் 1:12).*

இப்பொழுது நீ "அடுத்து என்ன?" என்று கேட்டுக் கொண்டிருப்பாய்.

இயேசு மரணத்தை வென்று, மீண்டும் பரலோகம் செல்லும் தமது பணியை நிறைவேற்றுவதற்காகத் தம் சீஷர்களை விட்டுச் செல்வதற்குச் சற்று முன்பாக *என்னில் நிலைத்திருங்கள்; நானும் உங்களில் நிலைத்திருப்பேன் (யோவான் 15:4)* என்று கூறினார். அந்த வார்த்தைகளிலே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை

வாழ்க்கையின் சாராம்சத்தையே விளக்கி விட்டார். கடவுளின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், விசுவாசி அவரது குமாரனில் நிலைத்திருக்கிறான் - பரலோகத்திற்கு அவன் பத்திரமாக வந்து சேரும் வரை அங்கேயே வைத்துப் பாதுகாக்கப் படுகிறான். என்றாலும், மனிதக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், உயிர்த்தெழுந்த ஆண்டவர் மெய்யான விசுவாசிகளிடம் நிலைத்திருப்பதால் அவர்களது குடும்பம், நண்பர்கள் மற்றும் உடன் ஊழியர்கள், உள்வாசம் பண்ணும் கிறிஸ்துவால் மாத்திரமே அன்றி சாத்தியமாகாத ஒரு வாழ்க்கையின் தரத்திற்கு அறிமுகம் செய்து வைக்கப் படுகின்றார்கள்.

நெருப்பில் வைக்கப் பட்டுள்ள ஓர் இரும்புக் கம்பியைக் கற்பனை செய்து கொள். அதை நீ பார்க்கையில் "கம்பி நெருப்பினுள் இருக்கிறது" என்று கூறலாம். ஆனால் இன்னும் அதை நன்றாக உற்றுக் கவனிப்பாயானால் கம்பி பழுக்கக் காய்ந்து சிவப்பு நிறத்தில் தகதகப்பதைக் காண்பாய். அப்பொழுது நீ "கம்பிக்குள் நெருப்பு இருக்கிறது!" என்று கூறினாலும் அதுவும் சரியே. அல்லது, அதேபோல், ஒரு வாளி நிறைய வைக்கப் பட்ட தண்ணீருக்குள் ஒரு கோப்பை வைக்கப் படுகிறது என்று வைத்துக் கொள். கோப்பையும் தண்ணீருக்குள் இருக்கிறது. கோப்பைக்குள்ளும் தண்ணீர் இருக்கிறது!

நீ மறுபடியும் பிறந்தபொழுது, உண்மையில் பரிசுத்த ஆவியானவர் உன்னைக் கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் (மூழ்கச்) செய்தார்.

இப்பொழுது உன் ஜீவன் கிறிஸ்துவுடனே *தேவனுக்குள் மறைந்திருக்கிறது (கொலோசெயர் 3:3)* என்று வேதம் நிச்சயமாக உரைக்கின்றது. ஆம், நீ மறுபடியும் பிறந்திருப்பதால், இப்பொழுது கிறிஸ்துவுக்குள் இருக்கின்றாய். அதியற்புதம்! மேலும், நீ மறுபடியும் பிறந்தபொழுது, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் உள்வாசம் பண்ணும் ஜீவன் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் ஒரு தனிப்பட்ட, மாட்சி மிக்க மெய்மையாகவும் ஆயிற்று. இப்பொழுது, *கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதால் நீங்கள் மகிழ்ந்து களிகூரலாம் (கொலோசெயர் 1:27).* ஆம், நீ மறுபடியும் பிறந்து விட்டதால், உயிர்த்தெழுந்த கிறிஸ்து இன்று உன்னில் ஜீவிக்கிறார். அருமை!

நான் கிறிஸ்துவிலும் கிறிஸ்து என்னிலும் இருப்பதான இந்த இரட்டை சத்தியம் தரும் விடுதலையைப் பற்றி வேதம் உண்மையில் என்ன கூறுகிறது என்பதை இன்னும் ஆழமாகச் சிந்திப்போம்.

### *நான் கிறிஸ்துவில் இருக்கிறேன்*

> *எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு ...... (1 கொரிந்தியர் 12:13).*

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமல் இருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே*

*கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டது போல, நாமும் புதிதான ஜீவன் உள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப் பட்டோம் (ரோமர் 6:3,4). ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது (கொலோசெயர் 3:3).*

பல ஆண்டுகளுக்கு முன்பு, இரத்தப் புற்று நோய் வியாதி உள்ள ஒரு சிறுவனை நான் அறிந்திருந்தேன். அப்பொழுது அவனுக்கு வயது ஏழு தான், ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை அவன் தண்டு வடத்தில் ஓர் ஊசி செலுத்திக் கொள்வதற்காக மருத்துவரிடம் செல்ல வேண்டியிருந்தது. அப்படிச் செல்லும் போது ஒரு முறை மருத்துவர் அவனிடம் அவன் ஏன் ஊசி போடப் படுகையில் மற்றப் பிள்ளைகள் பையன்கள் போல அழுவதில்லை என்று கேட்டார். "அது வலிக்கவில்லையா?" என்று வினவினார். அதற்கு டரைல், "ஆமாம், வலிக்கத் தான் செய்கிறது, ஆனால், டாக்டர், உங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை: அந்த ஊசி என்னைத் தொடுவதற்கு முன்பு இயேசுவின் கரத்தின் வழியே ஊடுருவிச் செல்ல வேண்டுமே" என்று கூறினான். இப்பொழுது நீ கிறிஸ்துவில் இருப்பதால், உன் வாழ்க்கையைச் சோதிக்கின்ற , தொடுகின்ற எதையும் சமாளிக்க அவர் போதுமானவராய் இருக்கிறார் என்று அறிவது எவ்வளவு அருமையான காரியம் இல்லையா! அது தான் விசுவாசம்!

நீ கர்த்தராகிய இயேசுவை விசுவாசத்தினால் எப்படி ஏற்றுக் கொண்டாயோ, அதே விசுவாசமே உன் வாழ்வின் ஒவ்வொரு தேவையையும் சந்திக்க ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து போதுமானவர் என்று உரிமை பாராட்ட உனக்கு உதவும். வேறு விதமாகச் சொல்லப் போனால், உனது விசுவாசத்தின் முதல் செய்கையானது நீ தொடர்ந்து விசுவாச மனப்பான்மையில் வாழ்வதற்கேற்ற வாசலைத் திறந்து விட்டது எனலாம். ஆகையால், *நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே ...... அவருக்குள் நடந்து (கொள்ளுங்கள்) ........(கொலோசெயர் 2:6).*

நீ மறுபடியும் பிறந்து விட்ட போதிலும், நீ இயேசுவின் வாழ்க்கையைப் பார்த்து அப்படியே காப்பியடிக்க வேண்டும் என்று கடவுள் எதிர்பார்ப்பதில்லை. இப்படிச் செய்ய முயன்ற இலட்சக் கணக்கான கிறிஸ்தவர்கள் தோல்வி கண்டு, அதனால் விரக்தி அடைந்துள்ளனர். ஆனால் நமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கென்று தாம் என்னவெல்லாம் சேகரித்து வைத்துள்ளார் என்பதைக் கடவுளே நமக்குக் கூறுகிறார். நாம் ஏற்கனவே கிறிஸ்துவுக்குள் மரித்து விட்டோம். கிறிஸ்துவுக்குள் மரித்திருப்பதால், நியாயப் பிரமாணத்தின் சட்டதிட்டங்களுக்கும், ஆக்கினைக்கும் கூட மரித்திருக்கிறோம். எனவே, கடந்த காலத்தைப் போலவே இன்றும், இனி வரும் காலத்திலும் நமது சுய முயற்சி எவ்விதத்திலும் நியாயப் பிரமாணத்தின் கட்டளைகளைத் திருப்தி செய்யக் கூடும் என்ற

நம்பிக்கைக்கும் மரிக்கின்றோம். ஆம், நம்மில் நாமே ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்ந்து விட முடியும் என்ற நம்பிக்கையின் ஒவ்வொரு துளிக்கும் மரித்திருக்கிறோம். ஆனால், தேவனுக்கே ஸ்தோத்திரம், உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சகல பாதுகாக்கும், பலப்படுத்தும் வல்லமைக்கும் நாம் பிழைக்கவே பிழைத்திருக்கின்றோம்!

வாழ்க்கையின் சோதனைகளையும் அழுத்தங்களையும் நாமே கையாள முயலும் போது தான் பிரச்சினை ஆரம்பமாகிறது. தான் புதிதாகப் பிறப்பதற்கு முன்பு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது எப்படி முடியாத காரியமாக இருந்ததோ அதேயளவு, தான் மறுபடி பிறந்த பிறகும் தன்னில் தானே கிறிஸ்தவ வாழ்க்கை நடத்துவது முடியாத காரியம் என்பதை ஒரு புதிய விசுவாசி கண்டு கொள்கிறான். நமது இந்தத் தன்மையைக் குறித்து நம்மை எச்சரிக்கும் வண்ணமாகவே இயேசு, "....... *என்னை அல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது"* *(யோவான் 15:5)* என்று தெளிவாகச் சொன்னார்.

உண்மையில், சுயமுயற்சி என்ற முட்டாள் தனத்தைப் பற்றிப் பேசும்பொழுது அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியா நாட்டு மக்களை வார்த்தைகளால் சாடுகிறார். விசுவாசத்தினால் வாழுவது, விசுவாசத்தினால் மட்டுமே வாழுவது என்ற தேவனுடைய சத்தியத்தினின்று விலகிப் போன அவர்களைத் திருத்தும் படியாக பவுல் அடுக்கடுக்காக கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகிறார். அவற்றின் பதில்கள் வெளிப்படையானவை.

*ஒன்றை மாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்; நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? (கலாத்தியர் 3:2,3).*

உன்னைப் போலவே அவர்களும் கிறிஸ்துவில் தங்கள் புது வாழ்வை விசுவாசத்தினாலேயே ஆரம்பித்தனர். அப்படியானால், தேவனைச் சார்ந்து கொள்ளும் அதே விசுவாசத்தின் மூலமாகவே, இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுகின்ற நம்பிக்கையும் உண்டு (ரோமர் 5:17).

கலாத்தியாவிலே சார்ந்து நிற்கும் விசுவாசத்தின் உயிர்த்துடிப்பின் இடத்தை நியாயப் பிரமாணத்தின் சுய முயற்சி என்னும் வறண்ட தன்மை பிடித்துக் கொண்டது. ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம். நீ புதிதாகக் கண்டு கொண்ட ஆண்டவரையே சார்ந்து வாழுவாயானால், கலாத்தியாவில் ஏற்பட்ட வேதனையான நிலைமை ஒரு நாளும் உன் அனுபவமாக வேண்டிய அவசியமில்லை.

### *கிறிஸ்து என்னில் வாழ்கிறார்*

*கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப் பட்டேன். ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்...... (கலாத்தியர் 2:20).*

*மேலும் கிறிஸ்து உங்களில் இருந்தால், சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும், இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். (ரோமர் 8:10-11).*

*புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப் படுத்தச் சித்தமானார். கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். (கொலோசெயர் 1:27).*

*விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் .... (எபேசியர் 3:17).*

கிறிஸ்துவின் உள்வாசம் செய்யும் ஜீவனில் உள்ள உனது விசுவாசத்தை நீ இப்படிக் கூறுவதன் மூலம் வெளிப்படுத்தலாம்: "ஆண்டவராகிய இயேசுவே உமக்கு நன்றி. நான் எதுவெல்லாம் இல்லையோ அதுவாகவெல்லாம் நீர் இருக்கிறீர். என்னிலும் என் மூலமாகவும் நீர் யாராக இருக்கிறீரோ அப்படிப்பட்ட-வராகவே இருக்க உமக்கு அனுமதி அளிக்கிறேன்." உனது

கிறிஸ்தவ வாழ்க்கை பற்றிய வியத்தகு உண்மை என்னவெனில் உனது வெற்றிக்குரிய பொறுப்பைக் கடவுள் வேறு ஒருவர் மீது - கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மீது சுமத்தி விட்டார்! நீ எதிர் கொள்ளப் போகின்ற உனது வாழ்க்கையின் சோதனைகளையும் தருணங்களையும் சரியான, தகுந்த விதத்தில் சந்திக்கப் போதுமானவர் இயேசு ஒருவரே. கிறிஸ்து இன்றி ஒரு 'இறையியல் அறிஞனாக' நீ இருக்க முடியும். கிறிஸ்து இன்றி ஒரு 'பிரசங்கியாராக' நீ இருக்க முடியும், கிறிஸ்து இன்றி ஒரு 'அருட்பணியாளனாக' நீ இருக்க முடியும்; ஆனால் கிறிஸ்து உன் உள்ளத்தில் வசிக்கவில்லை என்றால் நீ ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியாது.

கிறிஸ்தவ வாழ்க்கையை உண்மையாகவே வாழக் கூடிய ஒரே நபர் இயேசு மட்டுமே. இப்பொழுது, அவர் தம் ஆவியானவரால், அற்புதமான விதமாக உன் உள்ளத்தில் வசிக்க வந்திருக்கிறார். நீ உனக்காக எதையெல்லாம் ஒருபோதும் செய்யவே முடியாதோ அதையெல்லாம் உன் மூலமாகவும் உனக்காகவும் அவரால் இப்பொழுது செய்ய முடியும். தூய்மை மிக்க அவரே, ஒழுக்கக் கேடு நிறைந்த இவ்வுலகில் உனது தூய்மை ஆவார்; வெற்றி சிறந்த அவரே சோதனைகள் நிறைந்த இவ்வுலகில் உனது வெற்றி ஆவார்; அன்பு நிறைந்த அவரே தன்னலத்தை மட்டுமே நாடும் இவ்வுலகில் உனது அன்பு ஆவார். நிச்சயமாகவே, *உயிர்த்தெழுதலும் ஜீவனுமான* அவரே இப்பொழுது உனது கிறிஸ்தவ ஜீவன் ஆகியிருக்கிறார்.

இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே வந்த ஆண்டவராகிய இயேசுவுக்கு (லூக்கா 19:10), நீ உன் வாழ்க்கையைத் தாழ்மையுடன் கையளிக்கும் போது, உன் மூலமாகவும் அவர் இழந்து போன ஆத்துமாக்களைத் தேடுவார் என்று நம்பலாம்! விசுவாசிகள் தாங்கள் பிறருக்கு அவரது ஜீவனின் வாய்க்காலாக இருக்கிறோம் என்பதைக் கண்டறியும் போது, அவர்களது வாழ்க்கை பரவசமாகிறது.

இயேசு பரலோகம் சென்று விட்டாலும் அவர் உன்னை விட்டு விலகி விடவில்லை - என்பதை நினைவில் கொள். தமது சீஷர்களை இப்பூமியில் விட்டுச் செல்லும் வேளை வந்தபொழுது அவர் அவர்களிடம் சொன்னார்:

> *இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிற படியினால் நீங்களும் பிழைப்பீர்கள். நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள் (யோவான் 14:19-20).*

இப்பொழுது நீ ஒருவேளை, "கிறிஸ்துவில் தேவன் எனக்கு அருளியுள்ள எல்லா மூலாதாரங்களும் என் வாழ்வில் உண்மையாவது, நடைமுறைக்கு வருவது எப்படி?" என்று கேட்கலாம். அது ஒரு நல்ல கேள்வி தான். வெறும் மனதளவிலான விசுவாசத்திற்கும், அனுபவ ரீதியிலான விசுவாசத்திற்கும் இடையேயுள்ள பெரும் பிளவை நீ உணர்ந்திருக்கிறாய், என்று பொருள். கிரியை

செய்யும் விசுவாசத்திற்காக ஆழமான தாகம் கொண்டிருக்கிறாய் என்பதையும் இக்கேள்வி காட்டுகிறது. இதற்கு ஒரு எளிய விடை இதுதான் - அதாவது விசுவாசி நன்றி செலுத்துவதற்கு மறுமொழியாக கிறிஸ்துவின் வெற்றி வாழ்க்கை, விசுவாசியின் வாழ்க்கை மூலமாக வெளியாகிறது. உண்மை விசுவாசம் எப்பொழுதும் "உமக்கு நன்றி" என்று சொல்லும்.

எடுத்துக் காட்டாக, கிறிஸ்துவில் இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் வைத்திருக்கிறாய் என்பதை வெளிப்படுத்தும் சிறந்த வழி உன் பாவங்கள் மன்னிக்கப் பட்டதற்காக அவருக்கு நன்றி செலுத்துவதாகும். இப்பொழுது, உனக்கு அந்தந்த வேளைக்கு என்னென்ன தேவையோ அந்தந்தத் தேவைக்கு ஏற்றவராக அவர் இருப்பார் என்பதற்காகவும் நீ அவருக்கு நன்றி கூறலாம். *விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம் (எபிரெயர் 11:6).* நீ அவரைப் பிரியப் படுத்த நாடும் பொழுது, ஆண்டவர் இயேசு எல்லாக் காரியங்களுக்கும் போதுமானவராய் இருப்பதற்காக இடையறாமல் நன்றி ஏறெடுக்கும் மனதுடன் உன் விசுவாச வாழ்க்கையை நடத்திச் செல்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாய் இருந்ததன் நிமித்தமாக உபத்திரவங்களை அனுபவித்த கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு எழுதிய போது, அவர் புத்தி சொன்னார்: *கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்* (வேறுபிரித்து வையுங்கள்; மகிமைப் படுத்துங்கள்; முழு ஆளுகையையும் கொடுங்கள்) .... *(1*

*பேதுரு 3:15).* உன் விசுவாசத்தின் காரணமாகப் பாடுபடுகையில் நீ அதை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றிய தேவனது வெளிப்படையான இரகசியம் இதுவே. இயேசுவே உன் வாழ்வில் ஆண்டவராக இருக்கிறாரா என்பதை நிச்சயப் படுத்திக் கொள்.

பழைய ஏற்பாட்டில் கடவுளுடைய பெயர்களில் ஒன்று அடோனாய் என்பது உனக்கு நினைவிருக்கலாம். அடோனாய் என்பது ஆண்டவர், அல்லது எனது எஜமானர் என்று பொருள்படும். கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள் என்று விசுவாசிகளுக்குப் போதிக்கையில் பேதுரு கர்த்தராகிய தேவன் என்று குறிப்பிடுவது இந்தப் பொருளில் தான்.

ஆண்டவராகிய இயேசு உன் வாழ்வின் எஜமானராக இருப்பாரானால் நீ அவரது மாறாத இடையறாத ஐக்கியத்தை அனுபவிப்பாய். அப்பொழுது மட்டுமே உன் வாழ்வின் அனுதின தேவைகள் மற்றும் வாய்ப்புகளில் அவரை நம்புவதற்கு நீ விடுதலை உடையவனாய் இருப்பாய். பாமாலை ஆசிரியர் ஜார்ஜ் மத்தீசன் எழுதியது போல,

என்னைச் சிறையாக்கும், கர்த்தாவே,  
அப்பொழுது நான் விடுதலையாவேன்;  
என் வாளை உமக்குக் கையளிக்கச் செய்யும்  
அப்பொழுது நான் வெற்றிவீரனாவேன்.

விடுதலை என்றால் என்ன என்பது பற்றிய பிரபலமான கருத்துக்கு மாறாக, உண்மையான சுதந்தரம் என்பது நான் எதைச் செய்ய விரும்புகிறேனோ அதைச்

செய்வதில் இல்லை. மாறாக, நான் என்ன செய்தாக வேண்டுமோ அதைச் செய்வதற்கு எனக்கு இருக்கும் திறனில் தான் சுதந்தரம் என்பது அடங்கியிருக்கிறது. *என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலிப்பியர் 4:13)* என்று கூறிய பவுலின் வார்த்தைகளை நினைவில் கொள்!

1859 ஆம் ஆண்டில் வட அயர்லாந்தில் நடை பெற்ற எழுப்புதலில் ஆயிரக் கணக்கானோர் கிறிஸ்துவண்டை வந்தனர். அப்படி மனந்திரும்பியவர்கள் கிறிஸ்துவிடம் தங்களது தனிப்பட்ட, சீரிய அர்ப்பணத்தை வெளிக் காட்டும் வகையில் "விசுவாச அர்ப்பணம்" என்ற ஒன்றைக் கையெழுத்திட்டனர். அந்த நாட்களில், நாட்டின் முழுச் சூழலுமே மாற்றம் காணுமளவிற்கு ஏராளமான மக்கள் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தைக் கண்டடைந்தனர்.

அப்படிப் பட்ட ஒரு பத்திரத்தில் கையெழுத்திடுவதில் சிறப்பான நன்மை ஏதுமில்லை என்றாலும், இன்று இந்த வேளையில், அடுத்த பக்கத்தில் கொடுக்கப் பட்டுள்ள இந்தப் பத்திரத்தில் கையெழுத்திடுவதன் மூலமாக கடவுளுக்கு உனது மறுமொழியை உறுதிப் படுத்துவது உனக்கு உதவிகரமாக அமையும்!

*நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து*

ஏறிவராட் பண்ணின சமாதானத்தின் தேவன், இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய, உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்கள் ஆக்குவாராக, அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென் (எபிரெயர் 13:20-21).

உங்களுடைய

**விசுவாச வாக்குறுதிக்கு**

*உதவுகிற வசனங்கள் 136, 137ம் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.*

# என் விசுவாச வாக்குறுதி

### நான் பிதாவாகிய தேவனை என் தேவனாக ஏற்றுக்கொள்கிறேன்

*"ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பியதையும்..."*

*(1தெசலோனிக்கேயர் 1:9)*

### நான் இயேசு கிறிஸ்துவை என் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்கிறேன்

*"... மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் அருளுவதற்காக, அவரை (இயேசுவை) அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார்"*

*(அப்போஸ்தலர் 5:31)*

### என்னை தேவ அன்பினால் நிரப்பும்படிக்கு பரிசுத்த ஆவியை என்னுள் ஏற்றுக்கொள்கிறேன்

*"நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால்..."*

*(ரோமர் 5:5)*

### நான் தேவவசனங்களை எனக்கான சட்டங்களாக ஏற்றுக்கொள்கிறேன்

*"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறியவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவை உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்துதலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவையாயிருக்கின்றன"*

*(2தீமோத்தேயு 3:16,17)*

### தேவனுடைய மக்களை என் மக்களாக ஏற்றுக்கொள்கிறேன்

*"உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்"*

*(ரூத் 1:16)*

## என் விசுவாச வாக்குறுதி

### என்னை நான் முழுவதுமாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறேன்

*“நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைத்திருக்கிறோம், மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்”*

*(ரோமர் 14:7,8)*

### இதை நான் என் சுயநினைவோடு அறிந்தே செய்கிறேன்

*“...யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; ... நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்”*

*(யோசுவா 24:15)*

### உள்ளத்தின் உண்மையோடு செய்கிறேன்

*“மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல், தேவனுடைய கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும் விசேஷமாக உங்களிடத்திலேயும், கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோம்...”*

*(2கொரிந்தியர் 1:12)*

### மனப்பூர்வமாக செய்கிறேன்

*“உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வம்... உள்ளவர்களாய் இருப்பார்கள்”*

*(சங்கீதம் 110:3)*

### என்றென்றும் செய்துகொண்டே இருப்பேன்

*“கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?”*

*(ரோமர் 8:36)*

கையொப்பம் : ______________________________

தேதி : ______________________________

இதே புத்தகத்தின் ஆசிரியர்
எழுதிய, இதன் தொடர்பகுதியான

# விசுவாசத்திற்கான ஆகாரம்




புத்தகத்தை
வாசிக்க உங்களை
ஊக்குவிக்கிறோம்.

பல சமையற்குறிப்புகளை வாசித்தறிந்திருந்தும் ஒருவன்
பசியால் இறப்பதுபோல, வெற்றிகரமான வாழ்விற்கு
உணவாகும் பல வேதக்குறிப்புகளை அறிந்திருந்தபோதிலும்
ஒருவர் ஆவிக்குரிய உணவின்றி நசிந்துபோகக்கூடும்.

தேவவசனங்களை உங்கள் கைகளிலிருந்து தலைக்கும்,
தலையிலிருந்து இதயத்திற்கும் கொண்டுசெல்ல
உதவுகிற 'விசுவாசத்திற்கான உணவு' நூல்,
ஒரு வேதாகம வழிகாட்டிக் கையேடு!

**www.ccim-media.com/resources**

**57 மொழிகளில் 30 இலட்சம் பிரதிகளுக்கு மேலாக அச்சில்!**



# நீங்கள் கடவுளைத் தேடுதல்

டாக்டர். ரிச்சர்ட் ஏ. பெனட் மாநகரத் திட்ட வல்லுநராகத் தம் தொழிலைத் தொடங்கினார். அதற்காகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த நாட்களில் தமது வாழ்க்கையே அடியோடு மாறத்தக்க விதத்தில் தேவனுடைய வல்லமையைச் சந்தித்தார். அதைத் தொடர்ந்து ஆங்கிலேய கவுன்சிலில் இருந்து தமது பதவியை இராஜினாமா செய்து விட்டு, வேதாகமத்தைக் கற்பதற்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்றார்.

மிகுந்த உற்சாகத்தோடு ஊழியத்தைத் தொடங்கிய ரிச்சர்ட் பெனட், 1946 இலிருந்து, தமது செய்தியை விரும்பிக் கேட்கக் கூடிய மக்கள் மத்தியில் வேதாகம சத்தியங்களைப் பகிர்ந்து கொண்டு வருகிறார். 20 ஆண்டுகளுக்கு மேலாக, அவரது குரல் அகில உலக வானொலி (TWR) மற்றும் தூரக் கிழக்கு ஒலிபரப்புக் கழகம் (FEBC) ஆகியவற்றின் வாயிலாக ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் தொடர்ந்து ஒலித்து வந்தது.

1958 இல் ரிச்சர்டும், டாரதியும் மணந்து கொண்டதற்குப் பிறகு, இருவருமாகச் சேர்ந்து தேவனுக்கு ஊழியம் செய்வதில் உவகையுற்றனர். ரிச்சர்டின் பக்கத்தில், ஆனால் தனக்கே உரித்தான விதத்தில், டாரதி பெண்கள் மத்தியில் வல்லமையாக ஊழியம் செய்து வருகிறார்.

சமீப காலங்களில், டாரதி மற்றும் ரிச்சர்டின் மாநாட்டு ஊழியம், அவர்கள் இதுவரை சென்றிராத நாடுகள், அறிந்திராத மக்கள் எனப் பரந்து விரிந்து கொண்டே போகிறது. அவர்கள் வளரும் நாடுகளுக்குச் செல்லுகையில், மிகுந்த ஆவிக்குரிய தாகமுள்ள பல நாட்டு மக்களைச்சந்திப்பதில் அளவிறந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆனால், அந்நாடுகளில் தங்கள் சக மானிடர்கள் வறுமையிலும், பசியிலும் துடித்துத் துவளுவதைக் கண்டதன் காரணமாக, அவர்களது மகிழ்ச்சியில் வேதனையும் கலந்துள்ளது. இம்மக்களின் பேரிலுள்ள தேவனுடைய அன்பு, அவர்களோடு பொருளாதார மற்றும் ஆவிக்குரிய உதவிகளைப் பகிர்ந்து கொள்ள இவர்களை உந்தித் தள்ளியது.

எனினும் வளரும் நாடுகளில் மட்டுமின்றி வளர்ந்த, தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளிலும் கூட, பெனட் தம்பதியர், தங்கள் உள்ளத்தின் ஆழத்தில் கடவுளுடன் ஒரு நெருக்கமான உறவை நாடித் தவிக்கும் எண்ணற்ற மக்களைச் சந்திக்கையில் அகம் மிக மகிழ்கின்றனர். அந்த மக்களில் அநேகருக்கு எண்ணற்ற கேள்விகள் உண்டு. வாழ்வின் முக்கியமான கேள்விகளுக்கு நம்பகமான விடைகள் உண்டா? இக்கேள்விகளுக்கு ஏற்ற விடைகளைக் கடவுளே அருளியுள்ளார் என்பது ரிச்சர்ட் பெனட்டின் மாறாத நம்பிக்கை. "நீங்கள் கடவுளைத் தேடுதல்" என்ற இந்த நூலை அவர் எழுதக் காரணமே அது தான்.

"இந்த நூலுக்காகத் தான் நான் 20 ஆண்டுகளாக ஜெபித்து வந்தேன்"
ஜார்ஜ் வெர்வர்,
நிறுவனர், இயக்குனர், ஆபரேஷன் மொபிலைசேஷன்

ISBN 81-7362-235-3
9788173622359 00250

www.ccim-media.com

Authentic

Your Quest for God *(Tamil)*